


# சிவ வழிபாடு

கவிநாயகர் வி. கந்தவனம்

# SIVA WORSHIP

V. Kandavanam

அகிலன்
அசோஷியேற்ஸ்
வெளியீடு
கனடா

2001

Published by
Ahilan
Associates
Canada

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி. ச. வரதராசன் (வரதர்)
ஞாபகார்த்த அன்பளிப்பு
இல, 34/3, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

# சிவ வழிபாடு

கவிநாயகர் வி. கந்தவனம்

தி. ச. வரதராசன் (வரதர்)
ஞாபகார்த்த அன்பளிப்பு
இல, 34/3, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

# Siva Worship

V. Kandavanam

எஸ். தி. அகிலன் பன்னிரண்டாவது ஆண்டு நினைவு வெளியீடு
றொறன்ரோ ஒன்ராறியோ கனடா

2001


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூலின் பெயர் | சிவ வழிபாடு |
| விடயம் | சைவ விரதங்கள், வழிபாடுகள் பற்றிய பன்னிரு கட்டுரைகள் |
| எழுதியவர் | கவிநாயகர் வி. கந்தவனம்<br>ஓய்வு பெற்ற கல்லூரி அதிபர்<br>தலைவர், கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் |
| பதிப்பு | மே மாதம், 2001ம் ஆண்டு |
| பக்கங்கள் | 92 |
| பிரதிகள் | ஆயிரம் (1000) |
| விநியோகம் | இலவசம் |
| நினைவு | எஸ். தி. அகிலன் பன்னிரண்டாவது ஆண்டு நினைவு வெளியீடு |
| அட்டை வடிவமைப்பு | விஜய் ஆனந்த், தமிழ் கிரியேட்டர்ஸ், ரொறன்ரோ, கனடா |
| அச்சமைப்பு | |
| வடிவமைப்பு | |
| அச்சடிப்பு | அகிலன் அசோஷியேற்ஸ் |
| Publishers | Ahilan Associates<br>P.O.Box - 3, Station - F<br>Toronto, Ontario<br>M4Y 2L4<br>Canada<br>Phone 416 920 9250<br>Fax 416 921 6576 |


கனடாவில், ஈழத்தமிழர்கள் செறிந்து வாழும் ஸ்காபரோ நகரின் மத்தியில் எழுந்தருளி அருள்பாலிக்கின்ற ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய மகாமண்டபத்தில் நடைபெற்ற அகிலனின் பன்னிரண்டாவது ஆண்டு நினைவு வைபவத்தில், இந்த நூல் வெளியிட்டு வைக்கப்பெற்றது. 'சிவ வழிபாடு' நூலின் பிரதிகள் தேவையானவர்கள், மேலுள்ள முகவரிக்குக் கடிதம் எழுதினால் அனுப்பிவைக்கப்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவே பிறந்து மிகவே வளர்ந்த
அகிலா எங்கள் அருமை மகனே
தேடற் கரிய திரவியப் பொருளாய்
வீடும் நாடும் விளங்கிட வந்தாய்
என்றே உற்றார் மற்றோர் யாவரும்
நன்றே போற்றப் புகழுடன் நடந்தாய்!
படித்த பாடம் முடித்திட முன்னர்
எடுத்த பந்தை அடித்திட முன்னர்
தொடுத்த மாலை துண்டா னதுபோல்
துடித்து விழுந்தாய் துட்டர் கையால்!
என்ன விதியோ மின்னற் குமரா
பன்னிரண் டாண்டுகள் பட்டும் படாது
வாடா மலராய் வளர்த்து நினைவுகள்
கூடவே யுள்ளாய் குலவிளக்கெனவே!



# செல்வன் எஸ். தி. அகிலன்

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவன்
விளையாட்டு வீரன்
பல்கலைக் கழக புகுமுக மாணவன்

| தனயனாக | தந்தைக்காக |
|---|---|
| 05.05.1970 | 10.05.1989 |

ஆற்றல் மகனே அகிலா அருஞ்செல்வா
நேற்றுப் போல் நெஞ்சில் நிற்கின்றாய் - சாற்றின்
உன்னையே எண்ணி உயிர் வாழ்ந்தோம் இந்தப்
பன்னிரண் டாண்டும் பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமாங்க நினைவாக

ஒன்று, இரண்டு, மூன்று என்று ஆண்டுகள் உருண்டோடி,
இரண்டாண்டுகளுக்கு முன்னர் ஒரு தசாப்தமாகி,
இன்று பன்னிரண்டாண்டுகள் ஓடி மறைந்து விட்டன.

ஒரு மாமாங்கம், கண் மூடித் திறப்பதற்குள் விரைந்து பறந்து விட்டது.

எங்கள் அன்புக் குழந்தை அகிலன் எங்களிடமிருந்து பறிக்கப்பட்டு ஒரு மாமாங்கமாகி விட்டது.

அகிலனுடன் வாழ்ந்த பத்தொன்பது வருட நினைவுகள் காலத்தால் அழிக்க முடியாதவை; உள்ளத்துள் நிலைத்து நிற்பவை; என்றும் பசுமையானவை.

அகில நினைவுகளிலிருந்து விடுபட முடியாத நிலையில் நாட்களை நகர்த்துவதால், அவன் பெயரில் எம்மால் முடிந்த வரை சில நல்ல பணிகளை நிறைவு செய்ய முடிகின்றது.

மனதுக்குச் சாந்தி தருகின்ற இப்பணிகளால் சமூகத்துக்கு ஏதாவது பயன் கிடைக்குமானால், அதுவே அகிலனின் தியாகத்துக்கு அவனது பெற்றோராகிய நாம் செய்யக்கூடியது.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போரில் மறக்க முடியாத ஓர் ஆண்டு 1987. இலங்கை இந்தியத் தலைவர்கள் தங்கள் விருப்பத்துக்கு ஏற்றவாறு செய்த ஒப்பந்தத்தைத் தமிழர்கள் மீது திணிப்பதற்கென, 'அமைதிப் படை' என்ற பெயரில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான இந்திய இராணுவத்தை தமிழீழத்தில் குவித்தது.

அதற்கு முன்னர் தமிழீழமண் சந்தித்திராத அழிவுகளையும் வேதனைகளையும் சோதனைகளையும் இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்புக் காலத்திலேயே சந்திக்க நேர்ந்தது.

அண்ணல் காந்தி பிறந்த நாட்டிலிருந்து வந்த ஆக்கிரமிப்புப் படைகள், எங்கள் தாயக பூமியில் காந்தீயத்தைக் கொன்று புதைத்தன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆகக் குறைந்தது ஐம்பது வருடங்களாவது பின்தள்ளுவதே ராஜீவ் காந்தி அரசின் பிரதான குறியாகவிருந்தது. இவ்வேளையில், பத்திரிகைச் சுதந்திரத்துக்குச் சாவுமணி அடிக்க இந்திய அரசு சதித் திட்டம் தீட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய இராணுவம் எடுத்த இந்த நடவடிக்கைக்கு முதற் பலியானது யாழ்ப்பாணம் 'முரசொலி" பத்திரிகை. தமிழ் மக்களைக் காக்கவென வந்தவர்கள், தங்களை நம்பிய தமிழ் மக்களுக்கு எதிரான போரினை 1987 அக்டோபர் பத்தாம் நாள் ஆரம்பித்தனர். இந்த அராஜகத்தினால் அன்று அதிகாலை வேளையில், யாழ்நகரின் மையத்தில் அமைந்திருந்த 'முரசொலி'யின் மூன்று மாடிக் கட்டிடம் குண்டுகளால் தகர்க்கப்பட்டது. அதன் பிரதம ஆசிரியராகவிருந்த நான், இரு தடவைகள் கைதாகி எல்லாமாக 82 நாட்கள் யாழ். கோட்டைச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டேன்.

இவை எதிலுமே அமைதி காணாத இந்திய இராணுவமும், அதற்குத் துணைபோன துரோகக் கும்பலும், அவர்களது வடக்குக் கிழக்கு மாகாண பொம்மை அரசும், என்னைக் கொலை செய்ய முயற்சி எடுத்தன. 1989 மே 10ம் நாள் எடுக்கப்பட்ட இந்த முயற்சியிலிருந்து நான் தப்பவிட, எதுவுமறியாத எங்கள் குலக்கொழுந்து கருக்கப்பட்டான். இளம் வாழையொன்று செழித்து வளர்ந்து வருகையில் குறுக்கே வெட்டி வீழ்த்தப்பட்டது போன்று, அகிலனின் வாழ்வு இளவயதின் பாதியில் பறிக்கப்பட்டது.

அகிலன் நினைவாக ஆண்டு தோறும் நாம் வெளியிட்டு வரும் நூல்களின் வரிசையில் 'சிவ வழிபாடு' இந்த ஆண்டுக்குரியதாகின்றது. இதனை ஆக்கியவர் நாம் எல்லோரும் நன்கு மதிக்கும் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்கள். எனது பத்திரிகையுலக அனுபவத்துக்கும், அவருக்கும் எனக்குமிடையிலான தொடர்புக்கும் ஒரே வயது - முப்பத்தியைந்து வருடங்கள்.

சைவ விரதங்கள் வழிபாடுகள் தத்துவங்கள் தொடர்பான தமது பன்னிரு கட்டுரைகளை, அகிலனின் பன்னிரண்டாவது ஆண்டு வெளியீடாகப் பிரசுரிக்க அனுமதி தந்த அவருக்கு எங்களது ஆழ்ந்த நன்றிகள். கவிநாயகர் அவர்கள் எல்லாம் அறிந்தவர்; எல்லாம் தெரிந்தவர். இலக்கியம், இலக்கணம், சமயம், அரசியல், எழுத்து, பேச்சு, சொற்பொழிவு, நாடகம் என்று அனைத்திலும் கரை கண்டவர். தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் எழுத்துப் புலமை மிக்கவர். அவர் தொடாத துறையுமில்லை; தொட்டுத் துலங்காத துறையுமில்லை.

புகலிட வாழ்வின் இன்றைய காலகட்டத்தில், 'சிவ வழிபாடு' அவசரமானதும், அவசியமானதும் என்பது எமது கணிப்பு. காலத்தின் கட்டாயமுணர்ந்து கவிநாயகரின் கட்டுரைகளைத் தொகுத்து, எங்கள் பிள்ளைக் கலி தீர்க்க வந்த செல்வக் குமரன் அகிலன் நினைவாக நூல் வடிவில் சிவன் பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

என்றும் அகிலன் நினைவுடன் வாழும்,

**திரு எஸ். திருச்செல்வம்**
**றஞ்சி திருச்செல்வம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எமது சமயம் சைவ சமயம்; சைவ சமயம் அன்பை வளர்ப்பது; அறத்தை வளர்ப்பது; வையத்தில் வாழ்வாங்கு வாழ வைப்பது; வாழ்ந்து வானுறையும் தெய்வமாக வழிவகுப்பது.

இருந்தும், சைவத்திற் பிறந்து, சைவத்தில் வளர்ந்த பலர் கனடாவில் சைவத்தை விட்டுச் செல்கின்றனர். இதற்கான காரணத்தை அறிய மலையைப் பிளக்க வேண்டியதில்லை.

ஒரு பொருளின் அருமையையும் பெருமையையும் அறிந்தவர்கள் அதனை ஒரு பொழுதும் வீசி எறியமாட்டார்கள் என்பது உளவியல் அடிப்படையிலான உண்மை.

அந்த வகையில், சைவத்தைப் பலர் விட்டுச் செல்வதற்கு அறியாமையே பிரதான காரணம் என்பதை உணர முடிகின்றது.

இதனை நிவர்த்தி செய்வதற்காக - அதாவது, எமது சமயத்தை எம்மவர்கள் நன்கு அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, அடியேன் மேற்கொண்டு வரும் முயற்சிகள் பல. அவற்றுள் ஒன்றுதான் 'கீதவாணி' உலகத் தமிழ் வானொலியில் வெள்ளிக்கிழமை தோறும் காலை வேளையில் உரையாற்றி வரும் சைவ நற்சிந்தினை.

இவற்றில் பன்னிரண்டினைக் கட்டுரை வடிவமாக்கித் தொகுத்து 'சிவ வழிபாடு' என்னும் திருப்பெயரில் தமது அருமை மைந்தன் அகிலனின் பன்னிரண்டாவது ஆண்டு நினைவாக வெளியிட்டுள்ளார் திரு எஸ். திருச்செல்வம் அவர்கள்.

நண்பர் திருச்செல்வம் அவர்கள் 'பத்திரிகை வித்தகர்'; ஈழத்தில் தமது பலவிதமான பத்திரிகைப் பணிகளினாலும் சமூகத் தொண்டினாலும் பிரபல்யமானவர். கனடாவிலும், 'தமிழர் தகவல்' சஞ்சிகையை எண்ணித் தொடங்கி, தொடர்ந்து பத்தாண்டுகளாக வெளியிட்டு வருகின்றமைக்காகத் தமிழ் மக்களின் பாராட்டுதலையும் கௌரவத்தையும் பெற்றவர். மகன் அகிலனின் நினைவாக ஆண்டு தோறும் பயனுள்ள ஒவ்வொரு நூலை வெளியிட்டுத் தமிழ்த் தொண்டு புரிந்து வரும் 'பத்திரிகை வித்தகர்' இந்த ஆண்டு 'சிவ வழிபாடு' என்னும் இந்நூலை வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலியில் இவ்வுரைகளைக் கேட்டு நண்பர் திருச்செல்வம் உட்படப் பலர் பாராட்டினார்கள்; பதிவு செய்தும் வைத்திருக்கிறார்கள். திருச்செல்வம் அவர்களே இப்பணி வானொலி உரையைக் கேட்க வாய்ப்பில்லாதவருக்கும் பெரிதும் பயன்படுமென்பதால், இதனை நூலாக்க வேண்டுமென்று விருப்பம் கொண்டார். கேள்விச் செல்வம் கல்விச் செல்வமாக மாற்றம் பெறுவதற்கு இந்நூல் வழிவகுக்கும்.

இந்த உரைகளை 'கீதவாணி"யில் நிகழ்த்துகையில், சைவ தத்துவங்களை நன்கு விளக்க வேண்டும் என்னும் நோக்கமே மேலோங்கி நின்றது. அதனால் ஓர் ஆசிரியர் மாணவருக்குச் சைவசமய பாடம் நடத்தும் பாணி - விளக்க நடை விரவலாயிற்று.

எமது மண்ணில் சைவ சமயத்தை உயர் வகுப்புகள் வரை ஒரு பாடமாகப் படித்த பெற்றோர்கள், தாமும் கனடாவில் தமது பிள்ளைகள் கேட்கும் சைவம் சார்ந்த கேள்விகளுக்குத் தக்க பதில் சொல்லத் தெரியாமல் இருப்பதையும் யான் நன்கறிவேன். அவர்கள் இந்நூலை அவசியம் படிக்க வேண்டும். படித்துப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்தல் வேண்டும்; அல்லது, அவர்களையே படிக்க வைக்க வேண்டும்.

நடை மிகவும் எளிமையானது. கடும் சொற்கள், வட மொழிகள் ஆகியவற்றுக்கு ஆங்காங்கு பொருள்கள் தரப்பட்டுள்ளன. கனடியச் சூழலுக்கு ஏற்ப அறிவு பூர்வமான, தர்க்க ரீதியான விளக்க நடை பின்பற்றப்பட்டுள்ளது.

ஓர் எச்சரிக்கை! இந்நூல் சைவ தத்துவம் முழுவதையும் அளாவி நிற்கும் நூலன்று. இது ஒரு தொகுப்பு நூல் என்பதைக் கருத்திற்கொண்டு அவ்வத் தலைப்புகளுக்கான விளக்கங்களைப் படித்துத் தெளிவு பெறுக. மேலதிக விளக்கங்களுக்கு அடியேன் எழுதிய சைவ வினாவிடை - முதற் புத்தகம், புதிய சைவ வினாவிடை - இரண்டாம் புத்தகம் ஆகியவற்றை உசாவுதல் நன்று.

'சைவ நற்சிந்தனை' பேச்சுத் தொடர் ஒன்றைத் தமது 'கீதவாணி' வானொலியிற் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்ட 'அமுதக்குரலோன்' நடா ஆர். ராஜ்குமார் அவர்களுக்கும், என்னுடன் இனிதே ஒத்துழைத்த நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் சிறந்த கலைஞருமான திரு. அன்ரன் பீலிக்ஸ் அவர்களுக்கும், இவற்றின் தகுதி கண்டு பன்னிரு பேச்சுகளைத் தொகுத்து ஆற்றல் மிக்க அழகிய செல்வன் அகிலனின் பன்னிரண்டாவது நினைவு தினத்தில் நூலாக வெளியிடும் அவரது தந்தையார் திரு எஸ். திருச்செல்வம் அவர்களுக்கும், தாயார் திருமதி. றஞ்சி திருச்செல்வம் அவர்களுக்கும் எல்லாம் வல்ல சிவபெருமான் அருள்பாலிக்க இறைஞ்சுகின்றேன்.

ஓம் சிவம்.

**வி. கந்தவனம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ வழிபாடு

## பொருளடக்கம்


1. விநாயகப் பெருமான்
2. அன்பே சிவம்
3. முப்பொருள் உண்மை
4. இறை வழிபாடு
5. மனம் என்னும் தோணி
6. பக்தி வைராக்கியம்
7. தீபாவளி
8. கந்தசட்டி விரதம்
9. திருக்கார்த்திகை விரதம்
10. திருவெம்பாவை
11. மகா சிவராத்திரி
12. நவராத்திரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகப் பெருமான்

இந்து சமயம் போற்றும் தெய்வங்களிலே விநாயகருக்குத் தனிப்பெரும் இடமுண்டு. எந்தக் கோயிலிலும் முதலில் அவரை வழிபட்டே ஏனைய தெய்வங்களை வழிபடுதல் வழக்கம். பூசை முறைகளிலும் அவருக்கே முதலிடம் அளிக்கப்படுகின்றது. எந்தக் காரியத்தைத் தொடங்கும் பொழுதும் விநாயகரை வணங்கித் தொடங்கும் மரபும் எமது சமயத்திலே மிகவும் வலுப் பெற்றதொன்று. அத்தகைய முதன்மை நிலையை அவருக்கு அளித்தவர் சிவபெருமான்.

சிவபெருமான் எல்லாம் வல்லவர், எல்லாம் அறிபவர், எங்கும் நிறைந்தவர். தான் பெற்ற பிள்ளை தன்னிலும் சிறந்தவனாக வர வேண்டும், உலகத்தவர் பெரு மதிப்பும், மரியாதையும் அவனுக்கு அளிக்க வேண்டும் என்றெல்லாம் ஒரு தந்தை விரும்புவது உலகியல் வழக்கு. தேவலோக மரபிலும் இத் தந்தை பிள்ளை பாசம் உண்டு.

அவதாரம்

சிவபெருமான் பாசங்களைக் கடந்தவர். எனினும் தமது அடியவர் பொருட்டுப் பல திருவிளையாடல்களை பாசத்துடன் செய்திருக்கின்றார். அவருடைய பாசத்துக்குக் கருணை என்றும் அருள் என்றும் பெயர்.

இந்தக் கருணையிலே அவதரித்தவர்தாம் விநாயகர். முன்னொரு யுகத்திலே கயமுகாசுரன் என்று ஓர் அரசன் இருந்தான். அவன் வசிட்ட முனிவர் மரபிலே வந்த மரகத முனிவருக்கும் விபுதை என்னும் அசுரப் பெண்ணுக்கும் பிறந்தவன். யானை முகத்தையும் அசுர உடலையும் கொண்டவன். சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் இருந்து பல வரங்களைப் பெற்றவன். அந்த வரங்களினாலே கயமுகாசுரன் மிகுந்த செருக்குற்றுத் தேவர்களை வருத்தி வந்தான். தேவர்கள் கயமுகாசுரனின் தீமைகளைப் பொறுக்கவொண்ணாது எல்லாம் வல்ல சிவபெருமானிடம் சென்று முறையிட்டார்கள். சிவபெருமான் தருமத்தின் காவலர். தருமதேவதையாகிய எருதினைத் தமது வாகனமாகக் கொண்டவர். தருமம் தாழ்வுறுகின்ற காலத்துத் தலையிட்டு அதனைக் காப்பாற்றுகின்றவர். இதனால் கயமுகாசுரனின் ஆணவத்தை அழிக்கக் கருதினார். எனினும் அவனுக்கு அழியா வரத்தைக் கொடுத்த தாமே அவனை அழித்தல் முறையாகாது என்று கருதி 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்திலிருந்து ஆனை முகமும் நான்கு கரங்களையுமுடைய ஆனைமுகனைப் படைத்தருளினார். அவருக்குப் பல வல்லமைகளையும் பதவிகளையும் படைகளையும் அளித்து உயிர்களின் விக்கினங்களைத் தீர்க்கப் பணித்தருளினார்.

விநாயகப் பெருமான் தமது கொம்பு ஒன்றை ஒடித்து அதனை ஏவி கயாமுகாசுரனைக் கொன்றார். கயமுகாசுரன் பெருச்சாளியாக மாறி, தன்னை வாகனமாக ஏற்றுக் கொள்ளும் வண்ணம் வேண்டினான். விநாயகப் பெருமானும் அவனுக்கு இரங்கி அவனின் விண்ணப்பத்தை ஏற்று அருளினார். அது மட்டுமன்றி, தேவர்கள் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிக் கும்பிட வேண்டும் என்று கட்டளையிட்டு வருத்திய பாவத்துக்குப் பிராயச்சித்தமாக உலகத்தவர் யாவரும் விநாயகப் பெருமானைக் குட்டிக் கும்பிட வேண்டும் என்னும் வரத்தையும் விநாயகப் பெருமானிடம் இருந்து பெற்றான்.

### விநாயக தத்துவம்

இந்த இடத்திலே விநாயக தத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். முதலிலே அவரது திருவுருவத்தைப் பற்றி சிறிது சிந்திப்போம். அவரது வடிவத்தைப் பார்த்து அன்று சந்திரன் பகிடி பண்ணினான் என்கின்ற கதை ஒன்று உண்டு. இன்று கூட அதிகம் படித்த சிலர் அதென்ன யானை முகம், அதென்ன குள்ள உருவம் கொண்ட தெய்வம் என்று ஒரு மாதிரிப் பேசுவதுண்டு.

இந்து சமயம் தத்துவங்கள் நிறைந்த சமயம். தத்துவ அணுகுமுறையால் நாம் விநாயகப் பெருமானின் வித்தியாசமான வடிவத்தை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இறைவன் அருவம், உருவம், அருவுருவம் என்னும் நிலைகளிலே தேவைக்கேற்ப எழுந்தருள்பவன், தோற்றமளிப்பவன். அருவம் என்றால் உருவம் இல்லாதவன் என்று பொருள். ஆனாலும் உருவம் இல்லாதவன் எல்லா உருவங்களிலும் இருக்கின்றான் என்பதனை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

எல்லா இடங்களிலும், எல்லா வடிவங்களிலும் இருக்கும் இறைவன் பல வடிவங்கள் கொண்ட ஓர் உருவத்தை எடுப்பதில் என்ன வியப்பு?

விநாயகர் வடிவம் விலங்கு வடிவம், மனித வடிவம், பூத வடிவம், தேவ வடிவம், ஒளி வடிவம், ஒலி வடிவம் ஆகிய பல வடிவங்களை உள்ளடக்கியது. யானை முகமும் செவிகளும் விலங்கினத்தையும் நெற்றி, தலை, கண்கள் ஆகியன மனித இனத்தையும், பேழை வயிறும் குறுகிய கால்களும் பூத கணத்தையும், நான்கு கைகள் தேவ குலத்தையும் குறித்து நிற்கின்றன.

இவற்றோடு அவர் ஒலி வடிவமாகவும் திகழ்கின்றார். ஓங்கார வடிவினர் என்று ஆனை முகப் பெருமானைச் சொல்வதுண்டு. ஓங்காரம் இறைவனை அழைக்கும் ஒலி. 'ஓம்' என்பது பிரணவ மந்திரம். பிரணவத்திலிருந்தே விநாயக அவதாரம் நிகழ்ந்தது. பிரணவம் வேதத்தின் மூலமந்திரம். எனவே 'ஓம்' என்னும் ஒலியின் வடிவமாகவும் ஆனைமுகன் விளங்குவதைக் காண்கின்றோம். மேலும் அவர் ஒளி வடிவமாகவும் விளங்க வல்லவர் என்பதையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

என்னும் திருமந்திரத்தில் 'ஞானக் கொழுந்து' என விநாயகரைக் குறிப்பிடுகின்றார் திருமூல நாயனார். கொழுந்து ஒளி வடிவத்தைக் குறிக்கின்றது.

### விநாயகர் வாகனம்

இனி அவரது வாகனமாகிய பெருச்சாளியும் ஒரு குறியீட்டுச் சின்னமே தவிர அவர் பெருச்சாளியில் போய் வருபவர் அல்லர். பெருச்சாளி வேகமாகச் செல்லக் கூடியதல்ல, அதனால் அவர் கூப்பிட்ட குரலுக்கு ஓர் அவசர அழைப்புக்கு உதவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டார் என்றெல்லாம் எண்ண வேண்டியதில்லை. கயமுகாசுரன் அந்த வடிவத்தில் தன்னை வாகனமாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினான். வேண்டினார்க்கு வேண்டுவன ஈயும் விநாயகப் பெருமானும் அதனை ஒத்துக் கொண்டார். பெருச்சாளி எலியைப் போன்ற உருவம் உடையதாயினும் அது உண்மையில் பன்றி இனத்தைச் சேர்ந்தது. இரவிலும் நன்றாக பார்க்கக் கூடிய கண்கள், கூரிய பற்கள், வலுவான நகங்கள் ஆகியவற்றைக் கொண்டது. கரிய நிறமுடையது. கரிய நிறம் ஆணவத்தின் நிறம். ஆணவத்தை அடக்க வல்லவர் விநாயகர் என்பதையும் தமது பிழையை உணர்ந்து வணங்குகின்றவர்களுக்கு வரமளிக்கும் பெருங் கருணைத் திறம் படைத்தவர் அவர் என்பதையும் பெருச்சாளி வாகனம் உணர்த்தி நிற்கின்றது.

### விநாயகர் விரதங்கள்

தெய்வங்களின் கருணையை விரதம் இருந்தால் எளிதிலே பெறலாம் என்பது அடியவர் நம்பிக்கை. விநாயகப் பெருமான் அருளைப் பெற அடியவர்கள் அனுட்டிக்கும் விரதங்கள் பற்றி இனிச் சிந்திப்போம்.

வைகாசி வெள்ளி: பொதுவாகவே வெள்ளிக்கிழமை எல்லாத் தெய்வங்களும் விரதம் அனுட்டிக்கக் கூடிய நாளாகவே கருதப்படுகின்றது. எனினும் விநாயகப் பெருமானுக்கு வைகாசி மாத சுக்கில பட்ச (வளர்பிறை) வெள்ளி தொடங்கி அம் மாதத்தில் வரும் ஒவ்வொரு வெள்ளியும் விரதம் அனுட்டிப்பது சிறப்பாகும்.

சதுர்த்தி: ஒவ்வொரு மாதமும் வரும் சுக்கில பட்ச சதுர்த்தி விநாயகப் பெருமானுக்குரிய விரத நாளாகும். ஒவ்வொரு மாதமும் இவ் விரதத்தைப் பிடிக்க இயலாதவர்கள் ஆவணி மாதத்து சதுர்த்தி விரதத்தையாவது மேற்கொண்டு பயன் பெறலாம். இந்த விரதத்தின் மகிமையைப் புராணங்கள் போற்றுகின்றன. ஒரு முறை விநாயகப் பெருமானுடைய உருவத்தைக் கண்டு சந்திரன் பரிகசித்தான். விநாயகர் அவனுக்கு விகார உருவத்தை உண்டாக்கி அவனைச் சோதித்தார். சந்திரன் தான் செய்த பிழையை உணர்ந்து விநாயகரைப் பூசித்தான். விநாயகர் அவனுக்கு இரங்கி எவர் வளர்பிறைச் சதுர்த்தியில் சந்திரனைக் காண்கின்றார்களோ அவர் வீணான அலைச்சலுக்கு உள்ளாவர்

என்றும் தம்மை அவர்கள் ஆவணி மாத சுக்கில சதுர்த்தியில் வழிபட்டால் அலைச்சலும், உபத்திரவங்களும் நீங்கும் என்றும் அருள் செய்தார்.

சங்கடகர சதுர்த்தி: இது ஆவணி மாதத்துக் கிருஷ்ண பட்சத்து தேய்பிறை சதுர்த்தியில் அனுட்டிக்கப்படுகின்றது. நோய், துன்பம் முதலாய சங்கடங்களைப் போக்குவதற்காகப் பிடிக்கப்படுவதால் இது சங்கடகர சதுர்த்தி எனப்பட்டது. விநாயகர் திருவுருவம் செய்தும் சந்திரனுக்கு அர்க்கியம் வழங்கியும் இந்த வழிபாடு செய்யப்படுகின்றது. (அர்க்கியம் என்பது நீரால் செய்யப்படும் வரவேற்புப் பூசை.) இவ்விரதத்தின் மகிமை ஆதியில் கந்தப் பெருமானால் முனிவர்களுக்கு உபதேசிக்கப்பட்டது என்றும் பின்னர் கிருஷ்ண பகவானால் பாண்டவர்களுக்குச் சொல்லப்பட்டது என்றும் புராணங்கள் கூறுகின்றன.

சித்தி விநாயக விரதம்: இந்த விரதம் புரட்டாதி மாதத்தில் சுக்கில சதுர்த்தியில் பிடிக்கப்படுகின்றது. இதன் மகிமை பிரகஸ்பதி என்னும் தேவ குருவால் கூறப்பட்டது. தரும புத்திரர் இதனை அனுட்டித்துப் பலவித நன்மைகளையும் பெற்றார் என்று சொல்லப்படுகின்றது. இவ்விரதத்தில் சந்திர தரிசனம் விலக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாதி மாதத்தில் சுக்கில சதுர்த்தியில் கிருஷ்ணர் சந்திரனைக் கண்டதால் பல கஷ்டங்களுக்கு உள்ளான புராண வரலாறு ஒன்று இருக்கின்றது. சியமந்தகம் என்பது ஒரு வகை அற்புத மணி. நாள்தோறும் பொன்னைக் கொடுக்க வல்லது; வியாதிகளையும் போக்க வல்லது. இதனைச் சூரியனிடமிருந்து சத்திராசித்து என்பவன் பெற்றான். இதனை ஒருமுறை சத்திராசித்தின் தம்பியாகிய பிரசேனன் என்பான் தரித்துக் கொண்டு வேட்டைக்குச் சென்றபோது சிங்கத்தால் கொல்லப்பட்டான். இந்தச் சம்பவம் நடப்பதற்கு முன்னதாகவே கிருஷ்ணர் சியமந்தக மணியை உக்கிர சேனன் என்பவனுக்குக் கொடுப்பதற்காகக் கேட்டிருந்தார். காட்டிற்குச் சென்ற பிரசேனன் திரும்பி வராததால் கிருஷ்ணர் அவனைக் கொன்று மணியைக் கவர்ந்திருக்க வேண்டும் என்ற குற்றம் கிருஷ்ணருக்கு உண்டாயிற்று. இக் குற்றம் நீங்க கிருஷ்ணர் சித்தி விநாயக விரதத்தை அனுட்டித்தார்.

தூர்வா கணபதி விரதம்: இது கார்த்திகை மாதத்தில் வரும் வளர்பிறைச் சதுர்த்தியில் விநாயகர் திருவுருவத்தை அறுகின்மீது எழுந்தருளுவித்துப் பூசிப்பதாகும். அறுகு விநாயகப் பெருமானுக்கு உவப்பான தருப்பைகளில் ஒன்று என்று விநாயக புராணம் கூறுகின்றது.

முன்னொரு காலத்தில் தேவர்களைக் காத்தற் பொருட்டு அனலாசுரனை விநாயகப் பெருமான் விழுங்கினார். தேவர்களும் முனிவர்களும் அவர் வெப்பத்தால் வருந்தப் போகின்றார் என்று அஞ்சி அறுகினாற் பெருமானைப் பூசித்தார்கள் என்பது வரலாறு. அறுகு குளிர்ச்சியை உண்டாக்கும். அதனால் இவ் விரதத்தை வெப்பம் தொடர்பான நோய்கள் வராது இருப்பதற்கும் பயிரினங்கள் வெப்பத்தால் வதங்காமல் இருப்பதற்கும் செல்வச் சிறப்புகள் வளர்வதற்கும் விநாயகர் அடியார்கள் மேற்கொள்வர்.

விநாயக சஷ்டி விரதம்: இது கார்த்திகை மாதத்தில் தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறைச் சஷ்டி வரையான 21 நாட்களும் அனுட்டிக்கப்படும்.

இக் காலத்திற்பிள்ளையார் கோயில்களிற் பிள்ளையார் பெருங்கதை படிக்கப்படும். 21ம் நாள் கயமுகாசுரன் வதையுடன் திருவிழாக்கள் நிறைவுபெறும்.

பல பெயர்கள்

விநாயகர் என்றால் நாயகர்க்கு நாயகன், மேலான நாயகன் அல்லது தலைக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவன் என்று பொருள்.

விநாயகருக்குக் கணபதி என்றும் பெயர். கணபதி என்றால் கணங்களுக்குத் தலைவர் என்று பொருள். கணங்கள் பதினெட்டு வகை. அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாசவாசிகள், போக பூமியர் முதலாய பதினெண் கணங்களுக்கும் கடவுள் ஆதலால் இவர் கணபதி என்றும் கணேசன் என்றும் கணநாதன் என்றும் அழைக்கப்படுகின்றார்.

ஆனைமுகத்தையுடைவராதலால் ஆனைமுகன், கயமுகன், கரிமுகன், தும்பிமுகன் முதலிய பெயர்களும் இவருக்கு வரலாயிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கினங்களைத் தீர்ப்பவராதலால் விக்கினேசுவரன் என்றும் விக்கினராசன் என்றும் அழைக்கப்படுகின்றார். நான்கு கரங்களுடன் சிறப்புக் கரமாகிய தும்பிக்கையையும் சேர்த்து ஐந்து கரங்களையுடையவன் என்னும் பொருளில் ஐங்கரன் என்ற காரணப் பெயரும் இவருக்கு உண்டாயிற்று. இவை எல்லாவற்றுக்கும் மேலாக அடியவர்கள் இவரைப் பிள்ளையார் என்றே பெருமையோடு அழைப்பார்கள். சிவ குடும்பத்தின் மூத்த பிள்ளை என்பதனால் பிள்ளையார் என்னும் மரியாதைப் பன்மையோடு கூடிய பெயரால் பக்தர்கள் அழைக்கலாயினர்.

திருவிளையாடல்கள்:

விநாயகர் தந்தை தாயே உலகம் என்று அவர்களைச் சுற்றி வந்து கனி பெற்றவர். இந்திரனின் வேண்டுதலால் அகத்திய முனிவரின் கமண்டலத்திலிருந்த காவிரியைக் காகவுருக் கொண்டு கவிழ்த்துப் பாயச் செய்தவர். சிவபெருமான் திரிபுரம் எரிக்க இவரை வணங்காது தேர் ஏறியதால் அச்சு முறிந்தது. அதனால் எக் காரியத்தைத் தொடங்கும் பொழுதும் விநாயகரை வணங்கித் தொடங்கும் வழக்கம் உண்டாயிற்று. இந்த வழக்கத்தை

சித்தி செய்வதனாற் சித்திவி நாயகன்
என்றிமை யவரும் யாவரும் துதிப்ப
நன்றி தருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதும்

செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியாரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்கவன் தன்னை அருச்சனை புரிந்தால்
தீங்குறாது எல்லாம் செயமுண் டாகும்

என்று பிள்ளையார் கதை குறிப்பிடுகின்றது.

அவ்வையார் அகவல்

விநாயகப் பெருமானின் பெருமையையும் கருணைத் திறனையும் 'விநாயகர் வெண்பா'வில் அடியேன் விளக்குயுள்ளேன். சில பாடல்கள் பின்வருமாறு:

விநாயகனே வீரம் மிகுசெல்வங் கல்வி
விநாயகனே யாவும் மேதினியில் - விநாயகனே
முத்திக்கும் மூலம் என்பதனால் முந்தி
எத்திக்கும் ஏத்தும் இறைஞ்சி.

ஆனைமுகச் சூரன் ஆணவத்தை வென்ற
ஆனைமுகத் தேவன் அருள்பெற்றால் - தேனமுதச்
செந்தமிழும் ஏனைச் செழுங்கலையும் எல்லாம்
வந்தமையும் தன்னால் வளர்ந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுமாறி நித்தம் தலைதெறிக்க வோடிப்
பிடிவாதஞ் செய்யும் பேய்மனத்தை - படியாகப்
பதமாக்கி நன்கு பாரிக்கும் பிள்ளை
பதம்போற்று வாமே பணிந்து

இவ்விதமாக அருள்பாலிக்கவல்ல எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை இந்திரன், விஷ்ணு, பிரமன், தக்கன், வீமன், கர்த்தமன், நளன், சந்திராங்கதன், மன்மதன், ஆதிசேடன், புருசுண்டி, அங்காரகன், சந்திரன், கிப்பிரப் பிரசாதன், இராவணன், பாண்டவர், அகத்தியர், காசிபன், அவ்வையார் முதலானோர் வணங்கி இட்ட சித்திகளைப் பெற்றனர் எனப் புராணங்கள் கூறுகின்றன. நாமும் அவர்கள் வழி விநாயகப் பெருமானை வணங்கி அவருக்குரிய விரதங்களை உரிய முறையில் அனுட்டித்து நல்வாழ்வு பெறுவோமாக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே சிவம்

எமது சமயம் சைவ சமயம். சைவ சமயம் சிவபெருமானையும் அவரது சக்திகளையும் வணங்குகின்ற சமயம். சிவபெருமான் அன்பே வடிவானவர்.

'அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே'

என்கிறார் மாணிக்கவாசகப் பெருமான்.

"அன்பனை அடியார் இடர் நீக்கியை
செம்பொனை திகழும் திருக்கச்சியே
கம்பனைக் கருவாய்க் கரைத் தென்புத்தூர்
நம்பனைக் கண்டுநாம் உய்யப் பெற்றேனே"

என்று பாடுகிறார் திருநாவுக்கரசர். இறைவன் அடியார்களிடத்தில் காட்டும் அன்புக்குக் கருணை என்று பெயர். அதனால் அவர் கருணைக் கடல் என்றும் அருட்கருணைத் திருவாளன் என்றும் கருணை திருவடிவான சீரிணங்கு சிவபெருமான் என்றும் பலவாறு போற்றப் படுகின்றார்.

இறைவன் தேவர் பொருட்டு நஞ்சுண்டதும் சுந்தரர் பொருட்டுத் தூது சென்றதும், மாணிக்கவாசகர் பொருட்டு மண் சுமந்ததும் மற்றும் பல திருவிளையாடல்களை எல்லாம் செய்ததும் அவர் தமது அடியார்கள் மீது கொண்டுள்ள கருணையையே காட்டுகின்றது.

மக்கள் வாழ்க்கை முறையில் தாய்மை அன்புக்கு ஆதாரமாக இருக்கின்றது. அத்தகைய தாய்மையை இறைவனிடத்திலும் கண்டு அனுபவித்து, வியந்து, 'தாயிற் சிறந்த தயவான தத்துவனே' என்றும் பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்துநீ பாவியேனுடைய ஊனினை உருக்கி' என்றும் பலவாறு குழைகின்றார் மணிவாசகப் பெருமான். 'தாயினும் நல்ல தலைவ' என்று போற்றுகின்றார் திருஞானசம்பந்தர். 'தாயான தவமாய தன்மையானை' என்று புகழ்கின்றார் நாவுக்கரசர்.

தாயினும் நல்ல தலைவரென்பதைக் காட்டக் கந்தபுராணம் கூறும் சம்பவம் ஒன்று நல்ல உதாரணமாக உள்ளது. ஒரு முறை திருக்கையிலையிலே உள்ள மல்லிகைச் சோலை ஒன்றில் சிவபெருமான் உமாதேவியாருடன் எழுந்தருளினார். அப்பொழுது வில்வமரத்திற்கு மேலே இருந்த 'முசு' என்னும் ஒருவகைக் குரங்கு வில்வம் இலைகளைப் பிடுங்கிக் கீழே எறிந்து கொண்டிருந்தது. அவற்றில் சில சிவபெருமானின் திருமுடியில் விழுந்ததைக் கண்ட உமாதேவியார் வருந்தினார். அதனைக் கண்ணுற்ற இறைவர் அம்மையாரை நோக்கி வருந்த வேண்டாம். குரங்கு நம்மை அர்ச்சனை அல்லவோ புரிகின்றது என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு குரங்கின் செயலைக் கண்டு உமாதேவியார் வருந்தினார். இறைவர் குரங்கின் அறியாமை நீங்குமாறு அருள் செய்தார். நல்லறிவு பெற்ற குரங்கு மரத்திலிருந்து இறங்கி வந்து அம்மை அப்பரை வணங்கி அறியாது செய்த பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டியது. இறைவர் அதனைக் கருணையோடு நோக்கி 'நீ பிழை செய்யவில்லை. வில்வத்தால் நம்மை அர்ச்சனை செய்திருக்கின்றாய். அதனால் நீ பூவுலகத்தில் அரசனாகப் பிறந்து, சிறப்புற ஆட்சி செய்வாயாக' என்று அருள் புரிந்தார்.

சிவபெருமான் அது நல்லதையே செய்கின்றது என்று அன்பு காட்டித் தாயினும் நல்ல தலைவராக விளங்குவதைக் காண்கின்றோம்.

அன்புள்ளம் கொண்டவர்கள் ஒருவர் தீமை செய்தாலும் அதனை நன்மையாகவே கருதுவர் என்பதை இச் சம்பவம் நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

திருமூல நாயனார் அன்பு வேறு சிவம் வேறு அல்ல இரண்டும் ஒன்றே என்று அழுத்திக் கூறுகின்றார்.

அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

என்பது அவரது திருமந்திரம்.

பிறப்புக்களிலேயே மனிதப் பிறவி மிகவும் உயர்ந்தது. உயர்ந்த இப் பிறவி கிடைத்தற்கு அரியது, 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் அவ்வைப் பிராட்டியார்.

அரிய இப் பிறப்பினை நாம் பெற்றதே அன்போடு கலந்த வாழ்க்கையை வாழ்வதற்கே என்று வள்ளுவர் பெருமான் சொல்கிறார்:

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு:

அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையின் பொருட்டே அரிய இந்த உயிர் உடம்பினை எடுத்திருக்கின்றது 'என்போடு இயைந்த தொடர்பு' என்கின்றார். அதாவது, உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பே அன்பு தான். அதனாலே, அன்பில்லாத வாழ்க்கை அர்த்தமற்றதாகின்றது; பயனற்றுப் போகின்றது.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

அன்பு வழிநின்ற உடலே உயிர்கொண்ட உடலாம். அன்பில்லாதவர் உடல் உயிரற்ற உடல்; எலும்பினைத் தோலாற் போர்த்த வெறும் உடம்பு. அதாவது, வாழ்க்கைக்கு அன்பு உயிர் போன்றது என்று வலியுறுத்துகின்றார் தெய்வப் புலவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் உடம்பெடுப்பது வாழ்வதற்கு. வாழ்க்கையின் நோக்கம் நன்னெறிக்கண் நின்று இம்மைப் பயன்களை அனுபவித்தல். அன்பில்லாமல் இப் பயன்களை அனுபவித்தல் இயலாது. அதனால், அன்போடமையாத வாழ்க்கை உயிரற்ற வாழ்க்கை ஆகின்றது.

உயிருக்கு ஈடேற்றம் தருபவன் இறைவன். இறைவனை வணங்கி முத்தியின்பம் அடைதலே இப் பிறவியின் நோக்கமாகும்.

அன்பே வடிவான சிவனை அன்பினால் வணங்குதல் வேண்டும். அடியார்கள் இறைவன் மீது வைக்கும் அன்பினை சிறப்பித்துக் காட்ட 'பக்தி' என்ற வடமொழிச் சொல் பயன்படுத்தப்படுகின்றது.

பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்கும்
பரகதி கொடுத்தருள் செய்யும் சித்தனே....

என்று பத்திக்குப் பணியும் பரமனைப் பரவுகின்றார் பொய்யடிமையில்லாத புலவர் மணிவாசகர்.

அன்புடைமை

அன்பு என்று சொல்லும் பொழுது உள்ளத்திலே தேன் ஊறுகின்றது. 'அன்பர்களே' என்று அழைக்கின்ற பொழுது ஆனந்தமயமான ஓர் உணர்ச்சி என்னை ஆட்கொள்ளுகின்றது. வாயளவில் வெறும் சம்பிரதாயத்துக்காக இதனை நான் சொல்லவில்லை, சொல்வதில்லை. 'அன்பர்களே' என்று உணர்ந்து சொல்கிறேன். அப்படி உணர்ந்து சொல்லுகின்ற போது உள்ளம் பூரிப்படைகின்றது. இந்தப் பூரிப்பு அழுக்குகள் படியாவண்ணம் மனத்தைக் காப்பாற்றிக் கொள்கின்றது. நோய் நொடிகளை அகற்றுகின்றது. என்றும் என்னை இளமையாக்குகின்றது.

அன்பு ஒலிகள் ஓய்வதில்லை. அன்புச் சுவடுகள் என்றும் அழிவதில்லை. அன்புத் தொடர்புகள் எளிதில் அறுவதில்லை. அன்புக்கு இணை இந்த உலகத்தில் எதுவுமே இல்லை.

அன்பு ஓர் உணர்ச்சி அளவில் மட்டும் நின்று விடுவதில்லை. அது ஒரு பெரிய சக்தி. அதன் வேர் உலகத்தைத் தழைக்க வைக்கிறது. அதன் பிணைப்பு அகிலத்தை மலர வைக்கின்றது.

அன்பு என்னும் அருமையான பொருள் உலகத்திலே இன்று தட்டுப்பாடாகிக் கொண்டு வருகின்றது. அன் பு அரிதாகும் பொழுது குடும்பத் தகராறுகளும்

ஊர்ச் சண்டைகளும் இனத் துவேசங்களும் தலையெடுத்து வாழ்க்கைப் பயன்களைச் சீர்குலைக்கின்றன. பத்திரிகைகளிலே நாளாந்தம் படிக்கின்றோம் - அன்புக்காக ஏங்கும் குழந்தைகள், அன்பின்றித் தவிக்கும் நோயாளிகள், அன்பு பாராட்ட முடியாது பிரிந்து செல்லுகின்ற வாழ்க்கைத் துணைவர்கள், அன்பின்றி அடிபடும் சகோதரர்கள், சுடுபடும் குடும்பங்கள் என்று எத்தனையோ குழப்பங்களைப் படிக்கின்றோம். குடும்ப உறவுநிலை என்றில்லாது, உலக அரசியல் மட்டத்தில் காணப்படும் பிரச்சனைகளுக்கும் அடிப்படையில் அன்பு இன்மையே காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பை அரிதாக்குவது பொருளாதாரத் தகராறுகள். பொருளாதாரத் தகராறுகளை வளர்ப்பது அழுக்காறு. அன்பு உள்ளம் இயல்பாகவே சுத்தமானது. அதில் கரவு, வஞ்சகம், சூது முதலாய அழுக்குகளுக்கு இடம் இல்லை.

அன்பு அறத்துக்கு ஆதாரம். அறத்துக்கு மட்டுமன்றி மறத்துக்கும் அன்பே துணை. மறம் என்பது பகைமை உணர்ச்சி. பகைமையைப் போக்கி நட்பை வளர்க்க உதவுவது அன்பு. நட்பு வளர ஒற்றுமை வளரும். ஒற்றுமை ஓங்க அமைதி நிலவும். அமைதி நிலவில் ஆக்கம் பிறக்கும். அன்பின்றி இன்பம் இல்லை.

அன்பு வளர்க்கப்பட வேண்டிய பயிர். உள்ள அமைதிக்கன்றி உலக அமைதிக்காகவும் வளர்க்கப்பட வேண்டும். அன்புணர்ச்சியை எல்லா நிலைகளிலும் மிக அழகாக எடுத்துக் காட்டும் நூல் இராமாயணம். இராமர் கதையைப் பெரியவர்களும் சிறியவர்களும் போற்றிப் படித்து வரின் உள்ளத்தில் அன்பு ஊறும். வாழ்க்கைப் பயன்களும் தேறும்.

தண்ணீரில் பூவை எறிந்தால் அது நீந்திச் செல்கிறது. ஆனால் தண்ணீரில் தண்ணீரை ஊற்றினால் அது இயல்பாகவே கலந்து விடுகிறது. அது போல அன்பே வடிவான இறைவன் அன்புக்குப் பணிவது அன்பர்களுக்கு அருளுவது ஒன்றும் வியப்பில்லை. மந்திரங்கள், கிரியைகள், சடங்குகள், ஆசாரங்கள் போன்றவற்றிலும் பார்க்க அன்புக்குத்தான் இறைவன் முதன்மை அளிக்கின்றான் என்பதனை கண்ணப்ப நாயனார், சாக்கிய நாயனார் ஆகியோரின் வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன.

கண்ணப்பர் இறைச்சியைப் படைத்து வழிபட்டார். அவரது அளவு கடந்த அன்பினால் ஆறே நாட்களில் இறைவன் அவரை ஆட்கொண்டருளினார். சாக்கிய நாயனார் நாள்தோறும் சிவலிங்கத்தின் மீது கல் எறிந்து வழிபட்டார். அன்போடு வழிபட்டார். இறைவர் கல்லையும் பூவாக ஏற்று அருள்பாலித்தார்.

அன்பர் என்பவர்க்கே அபிராமியும் அருள் புரிகின்றாள் என்கின்றார் அபிராமிபட்டர்.

தனந்தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே.

'அன்பர் என்பவர்க்கே' என்னும் தொடரில் உள்ள ஏகாரம் அன்பு இல்லாதவர்களுக்கு இவ்வித நன்மைகள் கிடையா என்பதனை வலியுறுத்துகின்றது.

சிவபெருமானுக்கு விருப்பமான அர்ச்சனை பாட்டு. தமிழ்ப் பாட்டு. அந்தப் பாட்டும் அன்போடு கலந்ததாக இருத்தல் வேண்டும். இதனைச் சொல்பவர் வேறுயாருமல்லர், சிவபெருமானே.

புத்தூரில் சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருமணம் நடைபெற இருந்தது. அந்த நேரம் பார்த்து அந்தணர் வடிவந்தாங்கி அவரை ஆட்கொள்ள வருகின்றார் சிவபெருமான். வந்தவர் சபையோரைப் பார்த்துச் சுந்தரர் தமக்கு அடிமை என்கின்றார். அவர் இறைவர்தாம் என்பதனை அறியாத சுந்தரர் பித்தன் என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்மை பேசி அவரோடு வழக்காடுகின்றார். பின்னர் தம்பொருட்டு அந்தணர் வடிவத்தில் வந்தவர் இறைவரே என்பதை அறிந்து தாய்ப் பசுவின் கனைப்புக் கேட்ட கன்று போல் கதறி, செய்வதறியாது நின்ற அன்பரைப் பார்த்து, 'நீ நம்மோடு வன்மை பேசியதால் 'வன்தொண்டன்' என்னும் பெயரினைப் பெற்றாய். நமக்கு அன்போடு கூடிய சிறந்த அர்ச்சனை பாடல்களேயாகும். ஆதலால் அன்பு கலந்த சொல்லால் நம்மைப் பாடுவாயாக என்று சொன்னார்.

மற்று நீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க
அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்.

அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க அர்ச்சனை இங்கு சொற்றமிழோடு இறைவர் திருவாயால் தொடர்புபடுத்தப்பட்டிருப்பது கவனிக்கப்பட வேண்டியதொன்று.

## தமிழின் பொருள்

உண்மையில் அன்பு தமிழ்மொழியின் உயிர்நாடி போன்று அமைந்திருக்கின்றது. எழுத்துக்களுக்கெல்லாம் முதலாகவுடைய அகரத்தை முதலாகக் கொண்டது அன்பு. அகரத்தை அடுத்து உறவாடுவது மெல்லின னகரமெய். அன்பு மிகவும் மென்மையானது. வல்லினச் சொற்களை - அதாவது கடுஞ் சொற்களைப் பொறுக்காது என்பதனை உணர்த்துவது போல இந்த மெல்லினம் அமைந்திருக்கின்றது. இறுதியிலே இருப்பது இடையின உயிர்மெய்யாகிய 'பு'. 'பு' எந்த நேரத்திலும் விரிந்து 'பூ' வாகலாம். அதாவது, அன்பு என்பதும் ஒருவகைப் பூ. அது விரியலாம்; காய்க்கலாம்; நல்ல கனியாகலாம்; நல்ல கனியைப் போன்று இனிய சுமையைத் தரலாம் என்பது போன்ற பொருள்களின் விரிவாக்கமாக இந்தப் 'பு' அமைந்திருக்கின்றது.

ஆக, உயிர், மெய், உயிர்மெய் ஆகிய மூவகைத் தமிழ் எழுத்துகளையும் கொண்டு விளங்கும் அன்பு தமிழ் மொழிக்கு உயிர்நாடி போன்று அமைந்திருக்கும் அருமையான ஒரு சொல்; அழகான சொல்; அற்புதமான சொல்.

தமிழ் என் சொல்லின் பொருளே அன்பு தான், அன்பர்களே.

சலம்பூ வொடுதூ பம்மறந் தறியேன்
  தமிழோ டிசைபா டல்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியேன்
  உன்னா மமென்னா வில்மறந் தறியேன்
உலர்ந்தார் தலையில் பலிகொண் டுழல்வாய்
  உடலுள் உறுசூ லைதவிர்த் தருளாய்
அலந்தே னடியேன் அதிகைக் கெடில
  வீரட் டானத் துறையம் மானே

என்று பாடுகின்றார் திருநாவுக்கரசு சுவாமிகள். இந்தத் தேவாரத்திலே, 'தமிழோடு இசை பாடல் மறந்து அறியேன்' என்ற அடியைக் கவனித்தல் வேண்டும். இந்த அடி பலரையும் குழப்பி வருகின்ற அடி. 'தமிழோடு இசை பாடல்' என்ற தொடருக்கு 'பண் இசை கலந்த தமிழ்ப் பாடல்' என்றும் "இனிமையாக வாழ்த்திப் பாடுதல்" என்றும் பலவாறாகப் பொருள் கண்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் என்பதற்கு இனிமை என்று பொருள் கொள்வது பொருந்தும். 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்று பாடினார் பாரதிதாசன். தேவர்கள் திருப்பாற் கடலை அமுது பெறக் கடைந்த பொழுது 'அமிழ்து அமிழ்து' என்று ஆவலுடன் சொல்லிச் சொல்லிக் கடைந்தார்கள். பாற் கடலில் அமிழ்து தோன்றுவதற்கு முன்னதாகவே தேவர்களின் வாய்களில் தமிழ் ஊறிவிட்டது. அதன் பின் பாற்கடலமுதைத் தேவர்கள் உண்ட போது தமிழ் அமுதோடு கலந்து சொல் இனிமையுடன் பொருள் இனிமையையும் பெற்றுக் கொண்டதாம். தமிழ் தேவாமிர்தம் போன்று சுவையானது என்பதனை எடுத்துக் காட்டத் தமிழ் அபிமானிகள் கண்ட சுவையான கதை இது. இக் கதையில் ஓர் உண்மை இருக்கவே செய்கிறது. அதனை எவரும் மறுக்க முடியாது. அமிழ்து என்ற சொல்லை வாயிற் போட்டுக் கடைய, அதாவது அடுத்தடுத்துச் சொல்ல, தமிழ் என்ற சொல் உண்டாவது உண்மை. இது சொற் புணர்ச்சியின் விளைவு.

தமிழை அமுதைப் போன்று இனிக்கச் செய்வது அதன் இலக்கிய வளம். தமிழ் இலக்கியத்தில் தோய்பவர்களே இந்த இனிமையை முழுதாக அனுபவிக்க முடியும். தமிழ் இலக்கியத்தின் உரிப் பொருள் அன்பு. தமிழ் இனிமைக்குப் பிறப்பிடமாவதும் இந்த அன்பாகிய பாற்கடலேயாம். அதனால் தமிழுக்கு அன்பு பொருள் ஆகின்றது. இந்தக் கண்ணோடு, இனித் திருநாவுக்கரசு நாயனாரின் அடிகளை நோக்கின் உண்மைப் பொருள் விளங்கும்.

'தமிழோடு இசை பாடல் மறந்து அறியேன்' என்பதற்கு 'அன்போடு நினது புகழை (இசை - புகழ்) பாடுதலாகிய தொழிலை அடியேன் என்றைக்கும் மறவேன்' என்று பொருள் கொள்வதே பொருத்தமானதாகும்.

என்னை நன்றாக இறைவன் படைத்தான்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே

என்பது திருமந்திரம். திருமூல நாயனாருடைய இந்த வாக்கிலும் 'தமிழ் செய்தல்' என்பது 'அன்பு செய்தல்' என்ற பொருளில் வந்திருப்பதைக் காண்கின்றோம்.

ஆகவே, தமிழ் என்ற சொல்லுக்கு அன்பு என்று பொருள். தமிழ்ப் பண்பு அன்பின் அடிப்படையில் அமைந்தது. தமிழ்க் கலாசாரம் அன்புக் கலாசாரம். தமிழ்மொழி - அன்பு மொழி. தமிழர்கள் - அன்பர்கள்.

இவ்விதம் அன்பினை உயிர்ப் பொருளாகக் கொண்ட மொழி எமது தாய்மொழி. தாய்மொழி என்று சொல்லுகின்ற பொழுதே அன்பு சுரக்கின்றது. தாய் அன்பே வடிவானவள் அல்லவா? தாயை நேசிப்பது போலத் தாய்மொழியையும் நேசித்தல் வேண்டும். தாய் மொழியை நேசித்தலாவது - தாய் மொழியைக் கற்றல், தாய் மொழியைப் பேசுதல், அதன் பெருமையை அறிதல், அதனை வளர்த்தல் ஆகிய வெளிப்பாடுகளோடு கூடியது. தமிழன் தமிழனுடன் தமிழிலேயே பேசுதல் வேண்டும். அப்படிப் பேசுகின்ற பொழுது நாம் அன்பு மொழியினைப் பேசுகின்றோம் என்கின்ற நினைவோடு பேசுதல் வேண்டும். அந்த நினைவிலே நாம் அன்பினை வளர்க்கின்றோம் என்கின்ற உணர்வு இருத்தல் வேண்டும். அத்தகைய உணர்வு எமது தனிப்பட்ட வளர்ச்சிக்கு மட்டுமல்லாது தமிழ் இனத்தின் வளர்ச்சிக்கும் உதவ வல்லது.

ஆக, மொழியால் அன்பை வளர்த்த தமிழர்கள் தாம் கண்ட சைவ நெறியையும் அன்பு நெறியாக, அன்பே சிவமாகக் கண்டதில் வியப்பொன்றில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பொருள் உண்மை

சைவ சித்தாந்தம் மூன்று பொருள்களை உண்மையானவையாகக் கருதுகின்றது. அவை பதி, பசு, பாசம் எனப்படும். பதி இறைவனையும் பசு ஆன்மாவையும் பாசம் மலபந்தங்களையும் குறிக்கும். மலபந்தங்களிற் கட்டுண்டு கிடக்கும் ஆன்மா அவை நீங்கப் பெற்றால் இறைவனை அடையும் என்பது சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கையாகும். இவை மூன்றும் உண்மையானவை; அனாதியானவை.

பதி:

பதி என்றால் தலைவன் அல்லது இறைவன் என்று பொருள். இறைவனின் பேரின்ப நிலைக்கு சிவம் என்று பெயர். சிவன் என்பதற்குச் சிவப்பு நிறமானவன், மங்கலமுடையவன் என்ற பொருள்களும் உள்ளன.

உலகத்துக்குக் கருத்தா சிவபெருமான். அவர் 'என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர்' என்று அவரின் இயல்பை சைவ வினாவிடை முதற் புத்தகத்தில் விளக்குகின்றார் ஆறுமுக நாவலர் அவர்கள். சிவபெருமான் ஆதியும் அந்தமும் இல்லாதவர். அதாவது பிறப்பு இறப்பு இல்லாதவர்; இன்ப துன்பம் இல்லாதவர். விருப்பு வெறுப்பு அற்றவர்; வேண்டுதல் வேண்டாமை இல்லாதவர்.

சிவபெருமான் சுவதந்திரராக விளங்குபவர் என்று வேதங்கள் கூறுகின்றன. சுவதந்திரர் என்றால் தம் வயத்தராதல் என்று பொருள். அதாவது எவ்வித கட்டுப்பாடுமின்றிச் சுந்திரமாகச் செயற்படுபவர்; தலைக்கு மேல் ஒருவர் இல்லாதவர். அதனாலே தான் திருமூல நாயனார்

சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப்பார் இங்கு யாரும் இல்லை

என்றார்.

சிவபெருமான் ஆன்மாக்களைப் போன்று மலத் தொடர்பு உடையவர் அல்லர் அவர். சிவபெருமான் இயல்பாகவே தூயவடிவானவர். பாவங்களினின்றும் நீங்கியவர். அதனால் அவர் நின்மலன் என்று அழைக்கப்படுகின்றார்.

எண்குணத்தான்

சிவபெருமானின் இவ்வியல்புகளை ஆகமங்கள் எட்டுக் குணங்களையும் தொகுத்துக் கூறுகின்றன. அக்குணங்களாவன தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்கள் இல்லாமை, பேரருள் உடைமை, வரம்பில் ஆற்றல் உடைமை, எல்லையில் இன்பம் உடைமை. இவை இறைவனின் உண்மை இயல்புகள். இவை வடமொழியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொரூப இலட்சணம் என்று அழைக்கப்படும். இவற்றை உபநிடதங்கள் சத்து, சித்து, ஆனந்தம் என்று மூன்றாகக் கூறும். சத்தாவது என்றும் எவ்வித மாற்றமும் இன்றி இருப்பது, சித்து - அறிவு, ஆனந்தம் - வரம்பில் இன்பம். சத்து, சித்து, ஆனந்தம் ஆகிய மூன்று சொற்களும் புணர்ச்சியாற் சச்சிதானந்தம் ஆகி நிற்கும்.

இறைவனின் பொது இயல்பு வடமொழியில் தடத்த இலட்சணம் எனப்படும். இது உயிர்களின் நன்மை கருதி இறைவன் மேற்கொள்ளும் குணங்களாதலால் பொது இயல்பு எனப்படும். இவ்வியல்பில் இறைவன் திருமேனி தாங்குதல், அருட்செயல்களில் ஈடுபடுதல் முதலியன அடங்கும்.

மூவகைத் திருமேனிகள்

இறைவன் ஆன்மாக்களின் பொருட்டு அவ்வப்போது திருமேனி தாங்குதல் இயல்பு. அம்மேனிகள் அருவம், உருவம், அருவுருவம் என மூவகைப்படும். அருவம் கண்ணுக்குப் புலனாகாத வடிவம். இது சத்தி வடிவமாக இருந்தே உயிர்களுக்கு அருள் புரியும் நிலையைக் குறிக்கும். அருவுருவம் வடிவமும் வடிவம் இல்லாமலும் இருக்கும் நிலை. இது முகம், கை, கால் முதலிய உறுப்புகள் இன்றி ஒளி வடிவமாகத் தோன்றுதல். ஒளி வடிவத்தின் ஒடுங்கிய நிலை இலிங்கம் எனப்படும். அதனால் இலிங்கமும் இறைவனின் அருவுருவத் திருமேனியாகின்றது. உருவம் கண்ணுக்குப் புலனாகும் வகையில் திருமேனி தாங்குவது.

சிவபெருமானது திருமேனி ஆன்மாக்களின் உடல்கள் போன்றதன்று. ஆன்மாக்களின் உடல்கள் இருவினைக்கேற்ப தோல், எலும்பு முதலிய தாதுக்களால் உண்டாவன. சிவபெருமானது மேனி ஆன்மாக்கள் செய்யும் தவம், தியானம், பூசை முதலியவை காரணமாக சிவசத்தியாகிய திருவருள் பாவனை செய்யும் மேனி.

சிவசத்தி

சிவபெருமானது வல்லமைக்குச் சத்தி என்று பெயர். இது நெருப்பும், சூடும் போல சிவத்தோடு பிரிவின்றிக் கலந்திருக்கும். இச் சத்தியை ஆதாரமாகக் கொண்டே இறைவன் திருமேனிகளை எடுக்கின்றான். திருமேனிகள் மூவகையாயினும் அவற்றின் பேதங்கள் ஒருவகைப்படும். அருவம் சிவம், சத்தி, நாதம், விந்து என நால்வகைப்படும். அருவுருவம் சதாசிவம் எனப்படும். உருவம் மகேசுரன் உருத்திரன், திருமால், அயன் எனப் பெயர் பெறும். இவை ஒன்பதும் ஒன்றிலிருந்து தோன்றுவதாகக் கருதப்படுகின்றது. இவற்றில் ஆன்மாக்களாலே பூசித்து வழிபடும் சதாசிவ வடிவம் பீடமும், இலிங்கமும் கூடிய அருவுருவ வடிவாகும். பீடம் சிவசத்தி, இலிங்கம் சிவம். சதாசிவன் மகேசுரன், உருத்திரன், திருமால், அயன் ஆகிய திருமேனிகளைத் தாங்கும் நிலையில் இறைவன் மேற்கொள்ளும் சத்திகள் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு: சதாசிவன் - மனோன்மணி

மகேசுரன் - மகேஸ்வரி
உருத்திரன் - உமை
திருமால் - இலட்சுமி
அயன் (பிரம்மா) - சரஸ்வதி

சத்தி ஞாயிறும் ஒளியும் போல் சிவத்தோடு இரண்டறக் கலந்திருக்கும் நிலையில் பராசத்தி எனப்படுவர். சிவசத்தியே இறைவனில் ஐந்தொழில்களுக்குத் துணைக் காரணமாக விளங்குகின்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தொழில்

சிவபெருமான் ஆன்மாக்களின் பொருட்டுப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களைச் செய்வார்.

படைத்தலாவது ஆன்மாக்களுக்குத் தனது கரண புவன போகங்களைத் தோற்றுவித்தல். தனு - உடம்பு. கரணம் - மனம், புத்தி, சித்தி, அகங்காரம் முதலிய உட்கருவிகள். புவனம் - உடலுக்கு ஆதாரமாகிய உலகம். போகம் - அனுபவிக்கப்படும் பொருள். இவற்றை இறைவன் முதற் காரணத்தினின்றும் தோற்றுவிக்கின்றான். ஒரு செயலுக்கு முதற் காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் என மூன்று காரணங்கள் உள்ளன. உதாரணமாக, பருத்தி ஆடை நெய்யும் தொழிலுக்கு முதற் காரணம் பஞ்சு, துணைக் காரணம் தறி, நிமித்த காரணம் நெசவாளி. அது போல தனு, கரண, புவன, போகம் எனப்படும் பிரபஞ்சமாகிய காரியத்துக்கு முதற்காரணம் மாயை, துணைக் காரணம் சிவசத்தி, நிமித்த காரணம் சிவபெருமான்.

காத்தலாவது தோற்றுவிக்கப்பட்ட தனு, கரண, புவன போகங்களை நிலைநிறுத்தல். அழித்தலாவது தனு, கரண, புவன, போகங்களை முதற் காரணத்தில் ஒடுக்குதல். மறைத்தலாவது ஆன்மாக்களின் நன்மையின் பொருட்டு அவற்றைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருதல். அருளல் என்பது ஆன்மாக்களுக்குப் பாசத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதலாகும்.

சிவபெருமானின் ஐந்தொழில்களுக்கும் (பஞ்ச கிருத்தியங்களுக்கும்) துணைக் காரணமாக இருப்பது சிவசக்தி. ஆன்மாக்களிடம் வைத்திருக்கும் கருணை காரணமாக சிவசத்தி பராசத்தியாகவும் ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தியாகவும் நின்று இறைவனின் ஐந்தொழில்களுக்கும் உதவுகின்றாள்.

சிவபெருமான் சுத்த மாயையில் ஐந்தொழில்களையும் தாமே செய்வார். அசுத்த மாயையில் இவற்றை பிரம்மா, விட்டுணு, உருத்திரர், மகேசுரர், சதாசிவன் ஆகிய மூர்த்திகளைக் கொண்டு செய்விப்பார்.

சுத்தமாயையில் இறைவன் செய்யும் ஐந்தொழில்களையும் திருவெம்பாவை இறுதிப் படையில் மணிவாசகப் பெருமான் சிறப்பித்துப் பாடுகின்றார:

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மன்கழிநீர் ஆலேலோர் எம்பாவாய்.

பசு

பசு என்றால் ஆன்மா அல்லது உயிர் என்று பொருள். இது அருவமானது; அறிவுடையது; நித்தியமானது; பாசங்களாற் பிணிக்கப்படுவது. அதனால் இது பசு எனப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் ஒருவன் ஆன்மாக்கள் பல. இறைவனும் ஆன்மாக்களும் நித்தியமானவர்களாயினும் இறைவன் சுதந்திரமானவன்; ஆன்மாக்கள் கட்டுப்பட்டவை. இறைவன் தானே யாவற்றையும் அறியும் ஆற்றல் உள்ளவன். ஆன்மாக்கள் தாமே அறியும் ஆற்றல் அற்றவை. அவை அறிவிக்க அறியும் தன்மை உள்ளவை. இதனால் ஆன்மாக்கள் மலபந்தங்களுக்கு ஆட்படுகின்றன.

மூவகை ஆன்மாக்கள்

மலங்கள் மூவகை. அவை ஆணவம், கன்மம், மாயை எனப்படும். இவற்றுள் மூலமாய் இருப்பது ஆணவ மலம். ஆணவம் மட்டுமுள்ள ஆன்மாக்கள் **விஞ்ஞான-கலர்** என்றும், ஆணவமும் கன்மமும் உடைய ஆன்மாக்கள் **பிரளயாகலர்** என்றும், மும்மலங்களும் உடையவர் **சகலர்** என்றும் அழைக்கப்படுவர். இவ்வேறுபாடுகள் ஆன்மாக்களின் வினைப் பயன்களால் வருபவை.

நல்வினை, தீவினைகளுக்கேற்ப ஆன்மாக்கள் உடலைப் பெற்று உலகிற் பிறந்து பின் துன்பங்களை அனுபவிக்கின்றன. ஆன்மாக்கள் எடுக்கும் உடல் **தூல உடல்**, சூக்கும உடல் என இருவகைப்படும். தூல உடல் ஐம்பூதங்களின் சேர்க்கையாற் பெறும் உருவ உடம்பு. இது அழியக்கூடியது. **சூக்கும உடல்** அருவ உடம்பு, கண்ணுக்குப் புலப்படாதது. இது ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் உணர்வுகளாலும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களாலும் ஆக்கப்படுவது;. அழியாதது. ஆயுள் முடிவில் தூல உடலை விடுத்துச் சூக்கும உடல் மற்றொரு உடலை எடுக்கின்றது.

தோற்றமும் பிறப்பும்

ஆன்மாக்கள் நால்வகைத் தோற்றத்துக்கும், எழு வகைப் பிறப்புக்கும் உரியவை.

நால்வகைத் தோற்றங்கள் அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் எனப்படும். அண்டசம் - முட்டையில் தோன்றுவன. சுவேதசம் - வேர்வையில் தோன்றுவன. உற்பிச்சம் - வித்து, வேர், கிழங்கு முதலியவற்றில் இருந்து தோன்றுவன. சராயுசம் - கருப்பையில் தோன்றுவன. ஏழு வகைப் பிறப்புக்களாவன தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. இவற்றிலும் பலவகைப் பிறப்புகள் உள்ளன. அவை எண்பத்தினான்கு நூறாயிர யோனி பேதங்கள் என்பர்.

எழு வகைப் பிறப்புக்களிலும் கடவுளை வழிபட்டு முத்தியின்பம் பெறுவதற்கு ஏதுவாய மனிதப் பிறப்பே சிறப்பானது. மனிதப் பிறப்பை எடுத்து புவியிற் பிறக்கும் ஆன்மா வினைகளை இயற்றுவதோடு முன்வினைப் பயன்களையும் அனுபவிக்கின்றது.

ஆன்மாவின் இயல்பு

அனுபவத்தால் ஆன்மா முதிர்ச்சியடைகின்றது. இது பக்குவம் எனப்படும். பக்குவம் அடையாத ஆன்மாக்கள் உலகியலைச் சார்ந்திருக்கும். பக்குவம் பெற்ற ஆன்மாக்கள் பாசவலையிலிருந்து விடுபட்ட ஆன்மாக்கள். அந்நிலையில் அவை சிவத்தைச் சார்ந்திருக்கும். இவ்விதம் அவத்தை அல்லது சிவத்தைச் சார்ந்திருப்பதே ஆன்மாவின் இயல்பாகும். சிவத்தைச் சார்ந்திருத்தல் என்பது அறிவு விளக்கத்தால் உலக வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை உணர்ந்து நிலையான இறையின்பத்தில் ஆன்மா நிலைத்திருத்தல். அத்தகைய ஆன்மாக்கள் மீது கருணை கொண்டு இறைவன் தமது திருவடி நீழலில் அவற்றைச் சேர்த்துப் பேரின்பம் அளிக்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்களின் இயல்புகளை 'சிவஞானசித்தியார்' என்னும் நூல் பின்வருமாறு தொகுத்துக் கூறுகின்றது:

எண்ணரிதாய் நித்தமாய் இருள்மலத்தில் அழுந்தி
இருவினையின் தன்மைகளுக் கீடான யாக்கை
அண்ணல்அரு ளால்நண்ணி அவைஅவராய் அதனால்
அலகில்நிகழ் போகங்கள் அருந்து மாற்றால்
புண்ணியபா வம்புரிந்து போக்குவர வுடைத்தாய்ப்
புணரும்இருள் மலபாகம் பொருந்தியக்கால் அருளால்
உண்ணிலவும் ஒளியதனால் இருள்அகற்றிப் பாதம்
உற்றிடும்நற் பசுவர்க்கம் என உரைப்பர் உணர்ந்தோர்

பாசம்

பாசம் என்றால் ஆன்மாக்களைப் பந்தித்து நிற்கும் தடைகள் என்று பொருள். பந்தித்தல் - கட்டுதல், பிணித்தல். பாசம், மலம், தளை, தடை என்பன ஒரு பொருட் சொற்கள்.

ஆன்மாக்களைப் பிணித்து நிற்கும் பாசம் மூவகைப்படும். அவை ஆணவம், கன்மம், மாயை என்பன. மும்மலங்கள் என்று இவை பொதுவாகக் குறிக்கப்படும்.

ஆணவம்

ஆணவம் என்ற சொல் பொதுவாக அகங்காரம், செருக்கு என்னும் பொருளில் வழங்கப்பட்டு வருவதை பலரும் அறிவர். அகங்காரம் அறியாமையின் இயல்புகளில் ஒன்று. ஆணவம் என்றால் 'அணுத் தன்மையைச் செய்தல்' என்று பொருள். அதாவது ஆன்மாவின் அறிவை ஆணவம் சுருங்கச் செய்கின்றது. அறிவுக்குத் தடையாக இருக்கும் ஆணவத்தை உண்மை விளக்கம் என்னும் நூல் 'அறியாமை ஆணவம்' என்று குறிப்பிடுகின்றது.

செம்பிற் களிம்பு போல ஆணவம் அநாதியிலிருந்தே ஆன்மாக்களுடன் கலந்து அவைகளின் அறிவையும் தொழிலையும் மறைத்து நிற்கின்றது. ஆன்மாக்களின் துன்பங்களுக்கு அறியாமையே மூலகாரணமாக அமைகின்றது. அதனால் அறியாமையை அளிக்கும் ஆணவம் மலம் எனப்படுகின்றது.

ஆணவம் தானாக நின்றும் கன்மம், மாயை ஆகியவற்றுடன் சேர்ந்து நின்றும் ஆன்மாவுக்கு இடர் புரிகின்றது. இவ்விதம் இருநிலைகளில் நின்றும் ஆணவம் செய்யும் இடர்கள் அல்லது தடைகள் ஏழு வகைப்படும். அவை மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்பன.

மோகம் - தீமை என்று தெரிந்தும் அதனைச் செய்வதில் உள்ள விருப்பம்.
மதம் - தற்பெருமை கொள்ளுதல்.
அராகம் - ஆசைப்படுதல்.
கவலை - நினைப்பது கிடைக்குமா, கிடையாதா என்னும் ஏக்கம்.
தாபம் - பிரிவாற்றாமை.
வாட்டம் - ஒருவர் பிரிவதனால் உண்டாகும் சோகம்.
விசித்திரம் - தாமே காரணமாய் இருக்கும் செயலுக்குப் பிறரைக் குறை கூறும் இயல்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதம் பல வழிகளிலும் இடர்களை விளைவிக்கும் ஆணவம் ஆன்மாக்களுக்குத் தெரியாமலேயே ஆன்மாவுடன் கலந்திருக்கின்றது. அதனால் ஆணவத்தை இருள் மலம் என்றும் அழைப்பதுண்டு. ஆனால் அது இருளிலும் கொடியது என்று திருவருட்பயன் என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

ஒருபொருளும் காட்டாது இருள் உருவம்காட்டும்
இருபொருளும் காட்டாது இது.

இருள் பிற பொருள்களை மறைக்கும். இது இருள் தான் என்று நாம் உணரக் கூடிய வகையில் தன்னைக் காட்டி நிற்கும். ஆனால் ஆணவ மலமோ பிற பொருள்களின் உண்மை இயல்பையும் காட்டாது, தன்னையும் காட்டாது. அதனால் இது இருளிலும் அதிக தீமையைச் செய்கின்றது. ஆணவ இருளில் அழுந்திக் கிடக்கும் உயிரின் நிலை **கேவல நிலை** எனப்படும். கன்மம், மாயை ஆகிய மலங்களின் உதவியால் ஆன்மாவின் அறிவு விளக்கம் பெறும் நிலையில் ஆணவத்தின் ஆதிக்கம் வலுவிழக்கும். முத்தி நிலையில் அது முற்றாகச் செயல்

இழக்கும். ஆனாலும் ஆணவம் என்றுமே அழியாது. ஆன்மாவுடன் இணைந்திருக்கும் இயல்புடையது என்பதனை அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

கன்மம் - இது ஆன்மாக்கள் செய்யும் வினைகளையும் அவற்றின் பயன்களான பாவ புண்ணியங்களையும் குறிக்கும். ஒருவர் செய்யும் செயலுக்கு அவரே பொறுப்பாவார். அச் செயலின் பலனையும் அவரே அனுபவித்தல் வேண்டும். 'தினை விதைத்தவன் தினை அறுப்பான்' என்ற பழமொழி இதனை நன்கு வலியுறுத்துவதைக் காண்கின்றோம். ஒரு சுவரைக் கையால் தடவும்போது இதமாக இருக்கும். அதனை ஓங்கிக் குத்தினால் கை வலிக்கும். அது போல நன்மை செய்பவன் இன்பத்தையும் தீமை செய்பவர்துன்பத்தையும் அனுபவிப்பர்.

வினைகள் மனம், வாய், மெய் ஆகிய மூன்றினாலும் செய்யப்படுகின்றன. மனம் எண்ணத்துக்கும், வாய் சொல்லுக்கும், மெய் செயலுக்கும் காரணமாகின்றன. வினைகள் நல்வினை, தீவினை, தொல்வினை என மூவகைப்படும். மனம், வாய், மெய்யினால் சுத்த நிலையில் செய்யப்படும் வினைகள் **நல்வினை** என்றும், அசுத்த நிலையில் செய்யப்படுவன **தீவினை** என்றும் சொல்லப்படும். நல்வினையின் பலன்கள் புண்ணியங்களாகவும தீவினையின் பலன்கள் பாவங்களாகவும் ஆன்மாவைத் தொடரும். வினைப் பயன்கள் **தொல்வினை** அல்லது **பழவினை** எனப்படும். வினைகளை அனுபவிப்பதற்கே பிறப்புகள். அவற்றை அனுபவிப்பதற்குத் தகுந்த உடலை இறைவன் ஆன்மாவுக்கு அளிக்கின்றான்.

ஒரு பிறப்பில் அனுபவித்து முடிக்கப் பெறாத வினைப் பயன் அடுத்த பிறப்பில் தொடங்கும். வினைப் பயனை வினையாலேயே அனுபவித்தல் வேண்டும். அதாவது பழைய வினையை அனுபவிப்பதற்குப் புதிய வினைகளை செய்ய வேண்டியிருக்கின்றது.

ஒரு பிறப்பிலே செய்யப்படும் வினை **ஆகாமியம்** எனப்படும். பிறவி தோறும் ஈட்டப்படும் வினை **சஞ்சிதம்** எனப்படும். சஞ்சிதத்திலிருந்து அனுபவிக்கப்படும் வினை எனப்படும். இதனை அனுபவிக்க வேண்டிய பிறப்பு முறைகள் முதலியவை இறைவனால் விதிக்கப்படுவதால் 'விதி' என்றும் இது பெயர் பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயை

சைவ சித்தாந்தத்தில் மாயை என்பது என்றுமுள்ள ஒரு சடப்பொருள். இறைவனுடைய படைத்தல் தொழிலுக்கு ஆதாரமாக உள்ள மூலப்பொருள். இது மலங்கள் அற்ற நிலையில் சுத்த மாயை என்றும் மலங்களோடு கலந்துள்ள நிலையில் அசுத்த மாயை என்றும் பெயர் பெறும். அசுத்த காரியப் பிரபஞ்சத்துக்கு முதற் காரணமாக இருக்கும் மாயை **பிரகிருதி மாயை** எனப்படும். இவை மூன்றும் முறையே விந்து, மோகினி, மான் எனப் பெயர் பெறும். இம் மூன்றில் சுத்த மாயையும் அசுத்த மாயையும் நித்தியமானவை. பிரகிருதி மாயை அசுத்த மாயையில் இருந்து தோன்றுவதால் அநித்தியமானது.

இறைவன் ஆன்மாக்களுக்கு வேண்டிய தனு, கரண, புவன, போகங்களை மாயையிலிருந்து படைத்தருளுகின்றான். ஆன்மா இவற்றைக் கொண்டு செயற்பட்டு அனுபவம் பெறுகின்றது. இதனால் ஆணவ இருளால் அறிவு குன்றியுள்ள ஆன்மா படிப்படியாக அறிவு பெறுகின்றது. ஆன்மாவின் முதிர்ச்சிக்கு இந்த அறிவு உதவியாக இருக்கின்றது. கதிரவன் உதிக்கும் வரை கை விளக்கு உதவுவது போல் திருவருளால் மெய்ஞ்ஞானம் கிடைக்கும் வரை ஆன்மாவுக்கு அறிவு விளக்காக மாயை அமைகின்றது. இதனை 'மாயா தனு விளக்கு' என்று திருவருட்பயன் கூறும். எனினும் இந்த விளக்காகிய சிற்றறிவு ஆணவத்தின் சேர்க்கையால் மயக்கத்தையும் உண்டு பண்ண வல்லது. அதனால் மாயையும் ஒரு மலமாகக் கொள்ளப்படுகின்றது.

தோற்றத்துக்குக் காரணமாக உள்ள மாயை ஒடுக்கத்துக்கும் மூலமாக அமைகின்றது. குடம் உடைந்ததும் மண்ணாக மாறுவது போல மாயையில் இருந்து படைக்கப் பெற்ற பொருள்களும் ஊழிக் காலத்தில் அழிவுற்று மாயையிற் சேர்ந்து விடுகின்றன.

மாயா காரியமாகிய தனு, கரண, புவன, போகங்களால் நல்வழியில் ஒழுகும் ஆன்மா முதிர்ச்சி பெற்று ஆணவ மலத்தின் இருள் நீக்கப் பெற்று அறிவு பெறுகின்றது. இந்த நிலை **மலபரிபாகம்** எனப்படும். இதற்கு அடுத்தபடியாக இன்ப துன்பங்களையும் விருப்பு வெறுப்புகளையும் சமமாகக் கொள்ளும் பக்குவம் உண்டாகும். இது **இருவினை ஒப்பு** எனப்படும். இந்நிலையில் திருவருள் ஆன்மாவை ஆட்கொள்ளும். இது **சத்தினி பாதம்** எனப்படும். சத்தினி பாத ஆன்மா மும்மலங்களிலிருந்தும் விடுதலை பெறும். இதுவே முத்தி எனப்படும். முக்தி அடையும் ஆன்மாக்களுக்கு இறைவன் சிவானந்த அனுபவத்தை அளித்து அருள் புரிகின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை வழிபாடு

மானிடப் பிறவி கிடைத்தற்கு அரிய ஒரு பிறவி. 'அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது' என்றார் அவ்வைப் பிராட்டியார்.

இந்தப் பிறப்பு ஒரு காரணம்பற்றி எமக்குக் கிடைத்திருக்கின்றது என்பது ஆறுமுக நாவலர் பெருமானுடைய கருத்து. 'நாம் இந்தச் சரீரத்தைப் பெற்றது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்' என்பது அவரது வசனம்.

முத்தியின்பத்தை நாம் ஏன் பெற வேண்டும்? நாம் அனுபவிக்கும் இன்பங்களிலே மேலான இன்பம் முத்தியின்பம். ஆதலால் அதனைப் பெற விரும்புகின்றோம். எதிலுமே உயர்ந்த நிலையை அடைய விரும்புவதுதானே எமது இயல்பு. வீடுகளிலே நல்ல வசதி படைத்த பெரிய வீடு, தொழில்களிலே அதிக வருமானமுடைய உயர்ந்த பதவி, வாகனங்களிலே விலையுயர்ந்த வாகனம் என்று எதிலுமே நாம் தரமான, சிறப்பான, வசதியான நிலையை அடைய எண்ணுவது போல இன்பங்களிலே உயர்ந்த இன்பமாகிய முத்தியின்பத்தை அடைவதும் எமது இயல்பாக அமைகின்றது.

முத்தியின்பத்தைத் தரவல்லவர் கடவுள் ஒருவரே. கடவுளிடமிருந்து அதனைப் பெற நாம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு 'வழிபாடு' என்று பெயர்.

முத்தியின்பம் மட்டுமன்றி, இந்த உலகத்திலே நாம் வாழ்வாங்கு வாழவும் இறைவனுடைய அருள் வேண்டும் என்னும் நம்பிக்கை ஆதிகாலத்திலிருந்தே நன்கு வேரூன்றி விட்ட, காலாதி காலமாக வளர்ந்து வருகின்ற ஒரு நம்பிக்கையாகும். மனித வரலாறு, சமுதாய வளர்ச்சி, மக்களின் அன்றாட வாழ்க்கை முதலியவற்றுக்கு 'நம்பிக்கை' என்ற ஒன்று அடிப்படையாக இருந்து வந்திருக்கின்றது. நம்பிக்கைகள் பலவகை. அவற்றுள் கடவுள் நம்பிக்கை தலையானது.

அறிவு வளர்ச்சியடையாத ஆதிகாலத்தில் அச்சம் கடவுள் நம்பிக்கையை வளர்த்தது. இன்று அன்பு கடவுள் நம்பிக்கைக்கு ஆதாரமாக இருக்கின்றது. உலகியல் வாழ்க்கைக்கும் அன்பே காரணமாதலால் சமயமும் வாழ்க்கையும் இரண்டறக் கலந்த ஒரு நிலையை இந்து சமயத்திற் பார்க்கின்றோம்.

இந்துசமயம் ஒரு சுதந்திரமான சமயம். அதனால் வழிபாட்டு முறைகளும் பலவிதமாக அனுட்டிக்கப்படுகின்றன. காலாதி காலமாகப் பின்பற்றப்பட்டு வந்த வழிபாட்டு முறைகளிலே சிறந்தனவற்றை வேதங்கள் தொகுத்துக் கூறுகின்றன. அவை வேள்வி, தவம், விரதம், தியானம், கோயில் வழிபாடு எனப் பலவகைப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்வி

வேள்வி, யாகம் என்பன ஒரு பொருட் சொற்கள். வேள்வியின் சிறப்பையும் அவை செய்யப்படும் முறைகளையும் வேதங்கள் விளக்குகின்றன. ஒரு தலைவன் அல்லது அரசன் தனக்கும் தனது இனத்துக்கும் சிறப்பும் செல்வாக்குந் தரும் வரங்களைப் பெறுவதற்கு தனது இட்ட தெய்வம் குறித்து வேள்வி செய்யப்படுகின்றது. வேள்வி என்றால் வேட்டல் என்று பொருள். வேட்டல் விரும்புதல். விரிவுபடுத்தல் என்ற பொருளும் இதற்கு உண்டு. வேள்வி விரிவான முறையிற் செய்யப்படுவதை இது குறிக்கின்றது. வேள்விச் சாலை ஒன்றை அமைத்து, ஓமம் வளர்த்து, மந்திரம் ஓதி, தேவர்களுக்கு விருந்து வைத்து, இட்ட தெய்வம் தோன்றும் வரை அந்தணர் பலரைக் கொண்டு வேள்வி நடத்தப்படுவதால் இது பொருட் செலவும் பல நாட்களும் கொண்ட விரிவான ஒரு வழிபாட்டு முறையாகும். வேள்விகள் கடவுள் வேள்வி, பிரம வேள்வி, பூத வேள்வி, மானிட வேள்வி, தென்புலத்தார் வேள்வி என நோக்கங்களுக்கேற்ப வேறுபடும்.

முடிவில்லாத புகழையுடைய ஒருவன் தேவர்கள் மகிழ வேள்வி செய்த தலைமையைச் சொல்லும் புறத்துறை வேள்வி நிலை எனப்படும். இதனினும் புராண இதிகாசங்கள் வேள்விகளின் மகிமைகள் பற்றி அதிகம் கூறுகின்றன. கந்தபுராணத்தில் சூரபன்மன் செய்த வேள்வியும் தக்கன் யாகமும் விரிவாகப் பேசப்படுகின்றன. பாரதம் பாண்டவர் செய்த இராசசூய யாகத்தை விவரிக்கின்றது.

யாகம் ஒரு தொலைநகர்த்தி (Remote Control) போன்றது. இதில் இறைவன் வலிந்து அழைக்கப்படுகின்றான். வரங்கள் கொடுக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றான்.

தவம்

இருக்கு வேதத்தில் உள்ள 'தபஸ்' என்னும் சொல்லே தமிழில் 'தவம்' என மருவியது என்பது அறிஞர் கருத்து. இது வேள்வியிலும் மாறுபட்ட ஒரு வழிபாடாகும். வேள்வி பலரைக் கொண்டு பல நாட்களாகச் செய்யப்படுவது. தவம் தனியொருவரால் மேற்கொள்ளப்படுவது. வேள்வியில் பல தெய்வங்களுக்கு அவிப்பலி அளிக்கப்படும். தவம் செய்பவர் ஒரு தெய்வத்தையே குறிக்கோளாகக் கொண்டிருப்பர். மேலும் தவத்துக்குப் பொருட் செலவு இல்லை. மனவலிமையும் உடல் வலிமையும் இருந்தாற் போதுமானது. மனத்தை ஒருநிலைப்படுத்தி உடலை வருத்தி தவாக்கினியைச் சுவாலை விடச் செய்து தம் தெய்வத்திடம் வேண்டும் வரங்களைப் பெறுதல் தவமுடையார் நோக்கமாகும்.

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு (27.1)

என்று தவஞ் செய்யும் முறையையும்

வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப்படும் (27.5)

என்று தவத்தாலாகும் பயனையும் திருவள்ளுவர் வலியுறுத்துவதைக் காண்கின்றோம்.

தவம் துறவற நிலையில் உள்ளவர்களுக்கு உரிய வழிபாடு மட்டுமன்றி இல்லறத்தாருக்கும் ஏற்ற வழிபாடு என்பதனைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையம்மை சிவபிரானையும் தெய்வானை, வள்ளிநாயகி ஆகியோர் முருகப் பெருமானையும் திருமணஞ் செய்யத் தவமிருந்த செய்திகளைக் கந்தபுராணம் கூறுகின்றது. அருச்சுனன், அம்பாலிகை, துருபதன், நாராயணன், அருந்ததி முதலானோர் சிவபெருமானைக் குறித்துத் தவஞ் செய்து வரங்கள் பெற்றதை மகாபாரதம் குறிப்பிடுகின்றது.

நோயுற்று இருக்கும் ஒருவரை வைத்தியர் பரிசோதித்து மருந்து கொடுப்பதைப் போல தவம் இருக்கும் ஒருவருக்கு இறைவன் வரங்களை அளிக்கின்றான்.

விரதம்

மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம் வாக்கு காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு நினைந்துருகி வழிபடுதல் விரதம் எனப்படும். இதுவும் ஒருவகையில் தவத்தைப் போன்றது. எனினும் தவத்தைப் போன்று நீண்ட காலத்துக்குத் தொடர்ச்சியாக விரதம் அனுட்டிக்கப்படுவதில்லை. உடலை அதிகம் வருத்தும் கட்டுப்பாடுகளும் இல்லை. அதனால் அதிக மனவலிமை, உடல் வலிமை இல்லாதவர்களுக்கு இவ் வழிபாடு மிகவும் உகந்ததாகவுள்ளது.

காமிய விரதம், நிஷ்காமிய விரதம் என விரதங்கள் இருவகைப்படும். காமிய விரதம் ஒரு குறிப்பிட்ட பலனைப் பெறும் பொருட்டு மேற்கொள்ளப்படுவது. நிஷ்காமிய விரதம் எவ்வித பலனையும் எதிர்பாராது செய்யப்படுவது.

புராணங்களிற் காணப்படும் விரத வழிபாடுகளை ஆதாரமாகக் கொண்டு கேமாத்திரி இயற்றிய சதுர்வர்க்கிய சிந்தாமணி, விசுவநாதர் செய்த விரத சூடாமணி ஆகிய நூல்கள் விரதங்கள் பற்றிய பல விரைங்களையும் அவற்றின் பயன்களையும் எடுத்து விளக்குகின்றன.

அறநெறியில் ஒழுகுதல், அழுக்காறு இன்றி மனத்தைச் சுத்தமாக வைத்திருத்தல், உயிர்களிடத்தில் அன்பு வைத்தல், உறுதியான பக்தி என்பவற்றை விரதமிருப்பவர் கடைப்பிடித்தல் வேண்டும்.

விரதங்கள் பொதுவாக விநாயகர், சிவன், உமை, முருகன், விஷ்ணு என்று அவ்வத் தெய்வங்களுக்குரிய விசேட நாட்களில் அனுட்டிக்கப்படலாம். எனினும் காமிய விரதம் இருப்பவர் தத்தம் குலதெய்வங்களைக் குறித்து வழிபடுதலே சிறப்புடையது.

தியானம்

இது யோகத்தின் ஓர் அங்கம். இடைவிடாத இறை சிந்தனையில் ஈடுபடும் நிலை தியானம் எனப்படும். இதற்கு அமைதியான சூழல் அவசியம். இதனாலேயே தியானிகள் தனியிடங்களையும் காடுகளையும் மலைச்சாரல்களையும் நாடுகின்றனர். தியானிகளுக்கு வேண்டிய அடிப்படையான தகைமைகளாக இறைவனைப் பற்றிய அறிவும் மனத்தை ஒருநிலைப்படுத்தும் திறனும் அமைகின்றன. இறைவனுடைய கருணை, பெருமை, திருவிளையாடல்கள் முதலாய விவரங்களை அறியாதவர்களுக்கு தியானானந்தம் பிறக்க வாய்ப்பில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தில் தியான வழிபாட்டின் பயன்களை வலியுறுத்துகின்றார்.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார் (1.3)

என்ற குறளில் வரும் 'சேர்ந்தார்' என்ற சொல்லுக்கு 'இடைவிடாது நினைத்தல் என்ற பொருளை விரித்துரைக்கின்றார் பரிமேலழகர்.

சிவபிரானை வழிபட தியானம், செபம் ஆகிய இரண்டும் சிறந்த முறைகளாக மகாபாரதம் கூறுகின்றது. 'துறவிகள் தியான வழியினையே கடைப்பிடித்தல் வேண்டும்' என்று கூர்ம புராணம் கூறுகின்றது. சிவபுராணம் யாகங்கள் எல்லாவற்றிலும் தியான யாகமே சிறந்தது என்று தியான வழிபாட்டை உயர்த்திப் போற்றுகின்றது.

கோயில் வழிபாடு

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது அவ்வையார் வாக்கு. ஆலயம் என்றால் 'ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலக்கும் இடம். எனறு பொருள். இவ்வித கலப்புக்கு உதவியாக அங்கு நடத்தப் பெறும் பூசைகளும் திருவிழாக்களும் இருக்கின்றன. இவற்றைக் கண்டு களித்து இறைவனை வணங்குதல் ஆன்ம ஈடேற்றத்துக்கு மிகவும் உகந்ததாகும்.

திருக்கோயில்களில் நடைபெறும் பூசை முறைகளுக்குக் கிரியை என்று பெயர். கிரியை என்ற வடமொழிச் சொல்லுக்கு 'செய்கை' என்று பொருள். பூசை என்பது தமிழ்ச் சொல். இதுவும் செய்கை என்ற பொருளைக் கொண்டுள்ளது. அது பூவினாலே இறைவனை வணங்குதலாகிய செயலைக் குறிக்கும். சிலர் பூசை என்பது பூசுதல் என்ற சொல்லடியாகப் பிறந்தது என்றும் கூறுவர்.

கோயிற் பூசைகள் நித்திய பூசைகள், நைமித்திய பூசைகள் என இரு வகைப்படும். நாள்தோறும் செய்யப்படும் பூசைகள் நித்திய பூசைகள். விசேட பூசைகள் நைமித்திய பூசைகள் எனப்படும். நிமித்தம் என்பதற்குக் காரணம் என்று பொருள். அதனாற் காரணம் பற்றிச் செய்யப்படும் பூசைகள் நைமித்தியம் என்ற பெயரைப் பெற்றன.

நித்திய பூசைகள்

நித்திய பூசை ஒரு நாளைக்கு மூன்று முறை அல்லது ஆறு முறை நிகழ்த்தப் பெறுவது வழக்கம். சிதம்பரம், திருச்செந்தூர் முதலிய பெருங்கோயில்களில் பன்னிரு காலப் பூசைகள் நடைபெறுகின்றன.

பூசை

பூசை அபிடேகத்துடன் ஆரம்பமாகின்றது. **அபிடேகம்** என்றால் முழுக்காட்டுதல் என்று பொருள். கருப்பக் கிரகத்து விக்கிரகத்தைத் தூய நீர், பசுவின் பால், பன்னீர் முதலியவற்றாற் குளிப்பாட்டி ஈரந்துவட்டிய பின் அலங்காரம் செய்யப்படும். திருவுருவத்துக்கு நறுமணங் கமழும் சந்தனம் பூசி ஆடை, ஆபரணங்களை அணிந்து அழகு செய்தல் **அலங்காரம்** எனப்படும். அதன் பின் நைவேத்தியம் படைக்கப்படும். **நைவேத்தியம்** என்பது திருவமுது. பால், இளநீர், மா பலா வாழையாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கனிகள் என்பனவும் நிவேதிக்கத் தகுந்தவை. கனடாவில் அப்பிள் பழங்கள் படைக்கப்படுவதையும் காண்கின்றோம்.

திருவமுதுப் படையலோடு கூடிய மற்றும் ஒரு கிரியை தூப தீப **ஆராதனை**. பூசை வேளையில் மந்திரங்கள் ஓதுதல், மங்கல வாத்தியங்கள் இசைத்தல் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறும்.

தீபாராதனையை அடுத்து **இரட்சை சாத்துதல்** எனப்படும் திருநீறு அணியும் கிரியை நடைபெறும். அதனைத் தொடர்ந்து கண்ணாடி, குடை, சாமரை, விசிறி, கொடி, ஆலவட்டம் முதலியவற்றை இறைவனுக்கு வழங்கும் **உபசாரம்** நிகழும்.

பூசையின் மற்றுமொரு அங்கம் **அருச்சனை**யாகும். இதில் இறைவன் பெயர்களை ஒவ்வொன்றாகக் கூறி மலர் தூவி அருச்சிக்கப்படும். அருச்சித்தல் - வழிபடுதல். அடியார்கள் தமது பெயராலும் இறைவனுக்கு அருச்சனை செய்வித்து ஆன்ம ஈடேற்றம் பெறுவர்.

அருச்சனை முடிவில் இறைவனுக்குப் **பஞ்சாராத்திகை** காட்டப்படும். அதனைத் தொடர்ந்து பூசையின் நிறைவு நிகழ்ச்சியாக **தோத்திரம்** இடம்பெறும். இதில் இறைவன் புகழைச் சொல்லும் வேத வாக்கியங்களும் பஞ்ச புராணங்களும் ஓதப்படும். **பஞ்ச புராணம்** என்பது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்னும் ஒழுங்கிற் பாடப்பெறும் தோத்திரங்களாகும்.

கோயிற் பூசைகளுக்கான காரணத்தை மூவகையாக விளக்கலாம். முதலாவது இயற்கையான அல்லது நடைமுறை ரீதியான விளக்கம். திருமுழுக்கு விக்கிரகத்தைச் சுத்திகரிக்கவும் அலங்காரம் இறைவனை அழகுபடுத்திப் பார்த்து மகிழவும் செய்யப்படுகின்றன. நாம் எதனை வாழ்க்கையிற் செய்கின்றோமோ அதனை இறைவன் எழுந்தருளும் விக்கிரகத்துக்கும் செய்ய வேண்டும் என்னும் விருப்பம் இயல்பானது. அது போன்றதே நைவேத்தியம் படைத்தலும். விருந்துபசாரம் செய்தல் எமது தலையாய பண்பாடு. அதனை இறைவனுக்கும் செய்தல் உயர்ந்த வழிபாடு ஆகின்றது. இனிய நறுமணம் இறைவனுக்குப் பிடிக்கும் என்பதனாலும் அவர் இருக்கும் சூழலிற் காற்றைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்னும் எண்ணத்தினாலும் காட்டப்படுகின்றது. மூலத்தானம் பொதுவாக இருட்டாக இருப்பதனால், சுவாமியை அடியவர்கள் நன்கு தரிசிக்கும் வகையில் தீபங்கள் அடிக்கடி காட்டப்படுகின்றன. அவ்வேளை மங்கல இசை உரத்து வாசிக்கப்படுவது அடியார்களின் கவனத்தைத் தீபாராதனையின் பால் ஈர்த்தற் பொருட்டே என்பது வெளிப்படை.

இரண்டாவதாகப் பூசை முறைகளின் தத்துவ விளக்கத்தைப் பார்ப்போம். உலக வாழ்க்கைக்கு நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்கள் உதவியாக இருக்கின்றன. அவற்றைப் படைத்தருளிய இறைவன் அவற்றிலே கலந்திருந்தும் எமக்கு அருள்பாலிக்கின்றான் என்பதைப் பூசைகள் உணர்த்துகின்றன. பூசைக்குப் பயன்படுத்தும் பொருட்கள் பஞ்ச பூதங்களைப் பிரதிபலிக்கின்றன. பழம், அமுது முதலியன நிலத்தையும், நீர், பால் முதலியன நீரையும், தீபம் நெருப்பையும் தூபம் காற்றையும் வேத பாராயணம் தேவாரம் ஓதுதல் முதலியன ஆகாயத்தையும் குறித்து நிற்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாராதனைக்கு விசேட விளக்கங்கள் ஆகமங்களிற் கூறப்பட்டுள்ளன. தீபம் ஞானச் சுடரின் சின்னம். தீபத்தைக் காட்டுவதால் எமது அறிவு ஒளியைப் பெருக்கி அதனால் இருண்மலமாகிய ஆணவத்தை அகற்ற வேண்டும் என்னும் எண்ணம் தலைப்படுகின்றது. கற்பூரம் வெண்மை நிறம். வெண்மை சாந்த குணத்தின் சின்னம். சாத்துவிக குணத்தை நாம் வளர்த்தெடுத்து அதன் மூலம் மெய்ஞ்ஞானத்தை அடைய வேண்டும் என்பதனை கற்பூர தீபாராதனை உணர்த்துகின்றது.

தீபங்களை மூன்று முறை சுற்றிக் காட்டுதல் வேண்டும் என்பது ஆகம விதி. முதல் முறை உலக நன்மைக்காகவும், இரண்டாவது முறை ஊர் நன்மைக்காகவும், மூன்றாவது முறை உயிர்களின் நன்மைக்காகவும் தீபங்கள் சுற்றிக் காட்டப்படுகின்றன.

பூசைகள் பற்றி மற்றுமொரு விளக்கம் முக்கியமானது. பூசைகளால் திருவருளை விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்யலாம் என்று வேதங்கள் கூறுகின்றன. இவை ஒருவகையில் மின்சார ஆளியைப் போன்றவை. ஆளி - Switch. மின்சாரம் கம்பி வழியே ஓடினாலும் ஆளியைப் போடும் பொழுதே வீட்டுக்கு வெளிச்சம் கிடைக்கின்றது. அதுபோல திருவருள் எங்கும் நிறைந்திருந்தாலும் அதனை விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்வதற்குப் பூசைகள் உதவுகின்றன.

பூசையின் பெருமையைத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்திலே விளக்குகின்றார் சேக்கிழார் பெருமான்.

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள
அண்ணலார்தமை அர்ச்சனை புரியவா தரித்தாள்
பெண்ணில் நல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து.

கணக்கற்ற ஆகமங்களைத் திருவாய் மலர்ந்தருளிய இறைவர் தாம் விரும்புவது பூசனை என்று சொல்லக் கேட்டு, அதனை உலகத்தவருக்கு எடுத்துக் காட்ட அவரது அருளைப் பெற்றுக் கொண்டு காஞ்சி மாநகருக்குச் செல்லுகின்றார் உமாதேவியார். அங்கே அவர் அன்போடு இறைவருக்குப் பூசை செய்து வணங்கிய திருக்காட்சியைச் சேக்கிழார் இப்படிச் சித்திரிக்கின்றார்.

கரந்தரும் பயன் இதுவென உணர்ந்து
  கம்பன் மேவிய உம்பர் நாயகர்பால்
நிரந்த காதல்செய் உள்ளத்தளாகி
  நீடு நன்மைகள் யாவையும் பெருக
வரந்தரும் பொருளாம் மலைவல்லி
  மாறிலாவகை மலர்ந்த பேரன்பால்
சிரம்பணிந்தெழு பூசை நாள்தொறும்
  திருவுளங் கொளப் பெருகிய தன்றே.

இவ்விதம் உமாதேவியாரே இறைவரை வணங்குவதற்கு அன்று செய்த பூசையைப் போன்று பின்னாளில் மனிதரும் செய்ய விரும்பியதன் விளைவாக கோயில்கள் தோறும் பூசைகள் தொடரலாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைகள் காட்சி இன்பத்தைத் தருகின்றன. அவற்றைக் கண்டு இறைவனை வணங்குவதால் எமது உள்ளம் பூரிப்படைகின்றது. அகக்காட்சி விரிவடைந்து தூய்மை பெறுகின்றது. உள்ளத் தூய்மை புறக்கோயிலிலே இருக்கும் இறைவனை அகக் கோயிலிற் பிரதிட்டை செய்ய வழிவகுக்கின்றது.

நைமித்திய பூசைகள்

இவை வருடத்தில் நடைபெறும் விசேட திருவிழாக்களைக் குறிக்கும். கொடியேற்றம் முதலாகத் தீர்த்தம் வரையான உற்சவ காலத்திலும் தைப்பொங்கல், வருடப் பிறப்பு, கந்தசட்டி, விநாயகசட்டி, நவராத்திரி, திருவெம்பாவை முதலாய திருநாட்களிலும் இவை நடைபெறும். நித்திய பூசைகளில் நிகழும் குறைகளை நைமித்திய பூசைகள் நிவர்த்தி செய்கின்றன. இவை சிறப்பான பூசை, உபசாரம், தோத்திரம், திருமுறைகள் ஓதுதல், ஆசீர்வாதம், வசந்த மண்டபப் பூசை, திருவுலா ஆகியவற்றைக் கொண்டு விளங்கும். இறைவன் திருவுலா வருதல் உலகங்களையும் உயிர்களையும் காத்து அருளுதலைக் குறிக்கும்.

நைமித்திய விழாக்களில் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். சிவபெருமானை ஊழிக் காலத்தில் தாங்கி நின்ற வாகனம் வெள்ளை எருது. இது இடப வாகனம் என்றும் அழைக்கப்படும். இடப வாகனம் அறக்கடவுளின் மறு உருவம். அறக் கொடியை ஏற்றுவதே **கொடியேற்றம்.** அதாவது ஊரிலும் உலகத்திலும் அறம் தழைத்தோங்க பெருவிழா நடத்தப்படுகின்றது என்பதனை கொடியேற்றம் காட்டுகின்றது. சைவ சித்தாந்தம் கொடி மரம் பதியையும், கொடிச் சேலை பசுவையும், தர்ப்பக் கயிறு பாசத்தையும் என்றும் கூறும். கொடியேற்றத்தைத் தொடர்ந்து பத்து அல்லது பதினைந்து நாட்கள் வரை திருவிழாக்கள் நடைபெறும். சில பெரிய கோயில்களில் 25 நாட்கள் நடைபெறுவதும் உண்டு. மகோற்சவத்தின் நிறைவு நாட்கள் தேர், தீர்த்த, பூங்காவனத் திருவிழா நாட்களாக அமையும்.

தேர்த் திருவிழா

சங்காரத் தொழிலைக்குறிக்கும் விழாவாகும். பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகளை அமைத்து தேவர்களை வருத்திய திரிபுராதிகளை சிவபெருமான் தேரேறிக் கொன்ற கதையை விளக்கும் விழா தேர்த் திருவிழாவாகும். **தீர்த்தத் திருவிழா** ஆன்மாக்கள் இறைவனின் திருவருளிற் குளித்தலைக் குறிக்கும். **பூங்காவனத் திருவிழா** மகோற்சவம் சிறப்புற நடைபெற அருள்பாலித்த இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் கலைவிழாவாகக் கொண்டாடப்படும்.

கும்பாபிடேகம்

உற்சவத்தினைத் தவிர்ந்த பிற நைமித்திய பூசைகளில் கும்பாபிடேகமும் சிறப்பான-தாகக் கருதப்படுகிறது. கும்ப நீரினால் மூலமூர்த்தியை முழுக்காட்டுவது கும்பாபிடேகம் அல்லது குடமுழுக்கு எனப்படும். சங்குகளினால் நீரை எடுத்து முழுக வார்ப்பது **சங்காபிடேகம்** எனப்படும். பாலினால் முழுக வார்ப்பது **பாலாபிடேகம்** எனப்படும். பல குடங்கள் கொண்டு பெரிய அளவில் செய்யப்படும் அபிடேகம் **மகா கும்பாபிடேகம்** எனப்படும். இது பெரிதும் கோயிலைப் புனரைப்புச் செய்யும் காலங்களில் செய்யப்படுகின்றது. கோயிற் கட்டிட உறுப்புகளில் எவையேனும் சேதமுற்றாலோ மூலத்தான அட்ட பந்தனம் சிதைவுற்றாலோ அவற்றைத் திருத்தி மூலமூர்த்தியை மீளப் பிரதிட்டை செய்து அதனில் திருவருட் சக்தியை ஏற்றுவதற்கு மகா கும்பாபிடேகம் செய்யப்படுகின்றது. மேலும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை அட்டபந்தனத்தைப் புதிதாக்கிப் பிரதிட்டை செய்தல் உகந்தது என ஆகமங்கள் கூறுகின்றன. **அட்டபந்தனம்** என்பது மூலமூர்த்தியைப் பீடத்துடன் நிலைநிறுத்தப் பயன்படுத்தும் கூட்டுச் சாந்து. இது நித்திய பூசைகளினால் (பால், இளநீர் முதலியவற்றால்) சிறிது சிறிதாகச் சிதைவுற்று விக்கிரகம் நிலை தளர நேரிடும். இவ்விதமான குறைபாடுகளைத் திருத்தி அமைத்து கும்பாபிடேகம் செய்வது திருவருளைக் கோயிலில் நிலைபெறச் செய்யும் சிவப் பணியாகும்.

நித்திய நைமித்திய பூசைகளும் தோத்திரங்களும் கோயில்களில் அருட்பொலிவை ஏற்படுத்துவதற்கு இன்றியமையாதன. இவற்றில் பங்குகொண்டு இறைவனை வழிபடுவோருக்கு மனநிம்மதியும் மகிழ்வும் ஏற்படுவதோடு நோய், துன்பங்கள் நீங்கப் பெற்றுச் சுகவாழ்வும் கிடைக்கின்றது.

பூசையால் வரும் நன்மைகளைப் புராணங்கள் பலவாறு விளக்குகின்றன. அசுரர்களும், தேவர்களும், சிவபூசை செய்து வரங்களைப்பெற்ற கதைகள் ஏராளம். பிரம்ம தேவர் சிவபூசை செய்து ஆயிரம் புதல்வர்களைப் பெற்றார். அகத்தியர், வியாச முனிவர் முதலியோர் சிவபூசையால் வல்லமைகள் பெற்றனர். இந்திரன் காசியில் சிவபூசை செய்து பெரும் பேறுகளைப் பெற்றான்.

ஆலய வழிபாட்டு முறைகள்

இறைவனைப் பல வழிகளில் வழிபடலாம் ஆயினும் அவற்றுள் ஆலய வழிபாடே மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. கோயிற் பூசைகள் காட்சி வழிபாட்டுக்கு வழி வகுக்கின்றன. மூலத்தானங்கள் மனத்தை ஒருநிலைப்படுத்த உதவுகின்றன. இதனால் மனம் படிப்படியாக பக்குவம் அடைகின்றது.

கோயில்கள் பக்தியை வளர்க்க உதவுகின்றன. பக்தி இல்லாத வழிபாட்டால் பயன் ஏதுமில்லை. கோயில்களை வேடிக்கை பார்க்கும் இடங்களாகக் கருதுவோர்க்கும் திருவிழாக்களைத் தமது செல்வாக்கைக் காட்டும் நோக்குடன் செய்பவருக்கும் கோயில்களை வியாபார நோக்குடன் நடத்துபவருக்கும் வாழ்க்கையில் விடிவு ஏற்பட வழியில்லை.

கோயில் வழிபாடு பக்தியோடும், பணிவோடும் செய்யப்பட வேண்டியது. கோயிலுக்குத் தோய்ந்து, தூய ஆடை அணிந்து சுத்தமாகச் செல்லுதல் வேண்டும். புறச் சுத்தத்தோடு உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். அதாவது கோபம், அவா, அழுக்காறு, வெறுப்புகள் முதலாய தீய எண்ணங்களை விடுத்து சிவ சிந்தனையுடன் செல்லுதல் வேண்டும்.

திருக்கோயிலை அண்மித்தவுடன் கால்களைக் கழுவித் தூல லிங்கமாகிய கோபுரத்தை வணங்கி, சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு உள்ளே செல்லுதல் வேண்டும். கோயிலினுள்ளே பலிபீடத்தையும், கொடித் தம்பத்தையும் இடப தேவரையும் கும்பிட்டு, பலிபீடத்திற்கு இப்பால் நின்று பூசையைக் காணுதல் வேண்டும்.

பூசை முடிவில் ஆசாரியாரின் ஆசீர்வாதத்தைப் பெற்று அவரிடம் இருந்து விபூதியைப் பக்தியுடன் இரு கைகளாலும் வாங்கி, நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து சிவ சிவ என்று சொல்லி நெற்றியில் தரித்தல் வேண்டும். பின்னர் உள் வீதியை வலம் வருதல் வேண்டும். உள் வீதியை வலம் வருகின்ற போது பரிவார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்திகளை வணங்கியவாறு மெதுவாக நடந்து சென்று ஈற்றில் சண்டேசுரர் சந்நிதியை அடைந்து கும்பிட்டு வீட்டுக்குத் திரும்புதல் வேண்டும்.

கோயில்களில் தகாத வார்த்தைகள் பேசுதல், அசுத்தம் செய்தல், சுயநலம் சார்ந்த வியாபார முயற்சிகளில் ஈடுபடுதல் குளிக்கச் சென்று சேறு பூசலை நிகர்க்கும் பயனற்ற பாவத்தைத் திரட்டும் செய்கைகள் ஆகும்.

யாத்திரை

யாத்திரை செய்தலும் ஒரு சிறந்த வழிபாட்டு முறையாகும். தமது ஊரிற் கோயில் இல்லாதவர்கள் வெளியூர்க் கோயில்களுக்கு யாத்திரை செய்தலும், தமது ஊர்களில் கோயில்கள் இருந்தாலும் வரலாற்றுப் புகழ் மிக்க புண்ணிய தலங்களுக்கும், தீர்த்தங்களுக்கும் யாத்திரை செய்தலும் நெடுங்காலமாகவே அடியார்கள் மத்தியில் வழக்கத்தில் இருந்து வருகின்றது.

தமிழீழத்தவர் சிதம்பரத்திற்கும் கதிர்காமத்திற்கும் யாத்திரை செய்வது முன்பெல்லாம் வழக்கமாக இருந்தது. இவ் வழக்கம் அருகி விட்ட பிற்காலத்தில் ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள் செல்வச் சந்நிதி, நல்லூர் முதலிய பெருங்கோயில்களின் திருவிழாக் காலங்களில் கால்நடை யாத்திரையை அடியார்கள் மத்தியில் ஊக்கப்படுத்தினார்.

இன்று கனடாவில் காசி, சபரிமலை, புட்டபர்த்தி ஆகிய திருவிடங்களுக்கு அடியார்கள் தனித்தும் கூட்டமாகவும் யாத்திரை மேற்கொண்டு வருகின்றார்கள். கங்கா தீர்த்த யாத்திரை இந்துக்கள் மத்தியில் மிகவும் பொதுவானது. கங்கையில் மூழ்கினால் பாவவினைகளைப் போக்கலாம் என்னும் நம்பிக்கை உள்ளவர்கள் இந்துக்கள். யாத்திரையின் மகிமையை வலியுறுத்தி மணிவாசகப் பெருமான் யாத்திரைப் பத்து பாடியுள்ளார். அதிலே யாத்திரீகர்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகள் பற்றியும் பேசுகின்றார். யாத்திரை செய்கின்றவர்களுக்குச் சிவசிந்தனையன்றி வேறு சிந்தனை இருத்தலாகாது. இறைவன் புகழைப் பாடியவாறு செல்லுதல் வேண்டும். விளையாட்டு, வெகுளி, வேட்கை முதலியவற்றை நீக்குதல் வேண்டும். அல்லல்களை இகழுதல் வேண்டும். அன்பைப் பெருக்குதல் வேண்டும் என்றெல்லாம் பாடுகின்றார்:

புகழ்மின் தொழுமின் பூப் புனைமின்
புயங்கன் தாளே புந்தி வைத்திட்(டு)
இகழ்மின் எல்லா அல்லலையும்
இனியோர்இடையூ றடையாமே
திகழும் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன் சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே.

கூட்டுவழிபாடு

இறைவனை வணங்குவதற்கு க் கூட்டுவழிபாடும் ஒரு சிறந்த முறையாகும். இந்திரன் சிவனை வணங்குகின்ற பொழுது எப்பொழுதும் தனது பரிவாரங்களுடன் சேர்த்தே வணங்கினான் என்பதனையும் புராணங்கள் கூறுகின்றன. திருஞானசம்பந்தர் கோயில் தரிசனம் செய்கின்ற பொழுதெல்லாம் பெருங்கூட்ட அடியவர்கள் அவரைப் பின்தொடர்ந்து சென்றமையைத் திருத்தொண்டர் புராணத்திலிருந்து அறியக் கிடக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுவழிபாடு கோயிலிலேதான் நடைபெறுதல் வேண்டும் என்றில்லை. அதனை வீட்டிலும் நடத்தலாம்; பொதுவான இடங்களிலும் நடத்தலாம். கூட்டுவழிபாட்டில் ஈடுபடுவோர் தேவார திருவாசகங்களை ஓதுதல், நற்சிந்தனையிலே ஈடுபடல், புராண படனம் செய்தல் முதலாய நிகழ்ச்சிகளில் ஈடுபடுவர்.

எமது சமயம் வாழ்க்கைச் சமயம். அதாவது வாழ்க்கையோடு கலந்து பின்னிப் பிணைந்திருக்கின்ற சமயம். அனுபவித்து உணரப்பட வேண்டிய சமயம். இந்த அனுபவத்திற்குக் கூட்டுவழிபாடு வழிவகுக்கின்றது. பலரோடு சேர்ந்து வணங்குவதால் இறைவன் மீது மட்டுமன்றி, இறைவனின் அடியார்கள் மீதும் அன்பினைச் செலுத்த முடிகின்றது. ஒற்றுமையை வளர்த்து ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க முடிகிறது. இதனால் அப்பர் சுவாமிகளின் தொண்டு மனப்பான்மையை நாமும் வளர்க்க ஏதுவாகின்றது.

கூட்டுவழிபாட்டில் திருமுறைகளை ஓதுவதே சிறப்புடையது. திருமுறைகள், திருவருட் செல்வர்களாற் பாடப்பெற்றவை. அதனால் அவை சக்தி வாய்ந்தவை. வேதங்களுக்கும் நிகராகப் போற்றப்படுபவை. அத்தகைய தெய்வீக பாசுரங்களைப் பாடுதலை விடுத்து, சிலர் இக்காலத்தில் விளங்காத வேற்று மொழிப் பாடல்களை 'பஜனை' என்ற பெயரால் பாடி வருகின்றார்கள். இவற்றால் எந்த அளவுக்கு ஈடேற்றம் உண்டாகும் என்பது இறைவனுக்குத்தான் தெரியும்.

'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ் பல்லோரும் ஏத்தப் பணிந்து' என்பது சிவபுராணம்.

குருவழிபாடு

சிவபெருமான் உயிர்களின் பாசப் பிணிப்பினை நீக்கி மெய்யுணர்வை ஊட்டுதற் பொருட்டு குருவடிவில் எழுந்தருளும் இயல்புடையவர். இதனை

அறியாமை உள்நின்று அளித்ததே காணும்
குறியாகி நீங்காத கோ

என்று திருவருட்பயன் என்னும் நூலிலே விளக்குகின்றார் உமாபதிச் சிவாசாரியார். 'காண முடியாதவாறு உள்ளே நின்று காத்தருளிய திருவருளே காணும்படி குருவடிவாகத் தோன்றி அடியவருக்கு அருள் புரிகின்றது' என்பது இதன் பொருள்.

இதற்கு நல்ல உதாரணம் மணிவாசகப் பெருமானுடைய வரலாறு. சிவபெருமான் திருப்பெருந்துறையிலே குருவடிவாகி வந்து தம்மை ஆட்கொண்ட தன்மையினை திருவாசகத்திலே பல இடங்களிலே சொல்லிப் பரவசம் அடைகின்றார் மணிவாசகர். அவர் பக்குவம் பெற்ற ஆன்மாவாதலால் குருவாக வந்த இறைவனை எளிதில் இனங்கண்டு கொண்டார். இந்த நிலை எல்லோர்க்கும் கிடைப்பது அரிது. அதனால் எம்மோடு வாழும் அறிவுடைய மூத்தோர் ஒருவரைக் குருவாகக் கொண்டு சிவஞானத்தைப் பெற முயலுதல் வேண்டும். அரசன், ஆசிரியன், தந்தை, தாய், தமையன் ஆகிய ஐவரும் குருவாகக் கொள்ளத் தக்கவர். இவர்களுக்குள்ளும் தாய், தந்தை, ஆசிரியர் ஆகிய மூவரும் தெய்வத்திற்குச் சமமானவர் என்பதை 'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்ற வாக்கால் அறியலாம். எவராயினும் உயர்ந்த ஒழுக்கமும் பேரறிவும் சிவவழிபாட்டில் நிற்பவருமாகிய ஒருவரையே குருவாகக் கொள்ளுதல் வேண்டும். அவர் மூலம் சிவதீட்சை பெற்றுத் திருவருளை உணரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவத்தைப் பெற முயலுதல் சிறந்த வழிபாடாகும். பண்டிதமணி கணபதிப் பிள்ளை ஆறுமுக நாவலரைக் குருவாகக் கொண்டார். சற்குரு சுப்பிரமுனிய சுவாமிகள் சிவயோக சுவாமிகளிடம் ஞானதீட்சை பெற்று அவரைக் குருவாகக் கொண்டு சமயப்பணி புரிந்து வருகின்றார்.

சைவர்கள் நாயன்மார்களில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய நால்வரையும் சமய குரவர் எனவும் சைவ சித்தாந்தத்தைப் பிற்காலத்திற் பரப்பிய மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் ஆகிய நால்வரையும் சந்தான குரவர் என்றும் போற்றி வருகின்றனர். இவர்களில் ஒருவரைக் குருவாகக் கொண்டும் வழிபடலாம். அல்லது எல்லோரையுமே வழிபடலாம்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே

என்று குருவழிபாட்டால் உண்டாகக் கூடிய காட்சித் தெளிவை உள்ளத் தெளிவை, பேச்சுத் தெளிவை, சிந்தனைத் தெளிவை உணர்த்துகின்றார் திருமூல நாயனார். இந்தத் தெளிவே சிவஞானபோதத்திற்கு முதற்படி. இதனால் குருவை சிவனாகவே எண்ணிப் போற்றுவர் பெரியோர்.

சங்கம வழிபாடு
சங்கமம் என்பது சிவனடியார் கூட்டத்தைக் குறிப்பது. சிவனடியார்களை வழிபடுவதும் அவர்களுக்குத் தொண்டு செய்வதும் சிவனை வழிபடுவதற்கு நிகரானது. சிவஞானபோதம்

மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே

என்று கூறுகின்றது.

அப்பூதியடிகள் திருநாவுக்கரசு சுவாமிகள் பேரில் சமூகத் தொண்டுகள் புரிந்தார். அமர்நீதியார் தம்மையும் தமது குடும்பத்தையும் செல்வங்கள் அனைத்தையும் சிவனடியாருக்கு வழங்கினார். இயற்பகை நாயனார் தமது மனைவியையே சிவனடியார் ஒருவருக்குத் தானமாகக் கொடுத்தார். ஏனாதி நாயனார் பகைவன் நெற்றியில் திருநீற்றைக் கண்டதும் போரை நிறுத்தி அவனால் கொல்லப்படும் வகை நடந்து கொண்டார். இவர்கள் எல்லோரும் சிவனடியார்கள் இடத்தில் - சிவவேடத்தில் சிவனைக் கண்டவர்கள். இத்தகைய சிவனடியாரை வணங்கியவர் சுந்தரமூர்த்தி நாயனார். அவர் பாடியருளிய திருத்தொண்டத் தொகை சங்கம வழிபாட்டை வலியுறுத்துகின்றது. சிவனடியார்கள் சிவனடியே சிந்திக்கும்

திருப்பெருகும் சிவஞானம் உடையவர்கள். குருவை வழிபடுவது போல இவர்களை வழிபடுவதும் இறைவனை வணங்குவதற்குச் சரியாகும்.

**சைவசித்தாந்த வழிபாட்டு முறைகள்**
சைவசித்தாந்தம் இறைவனை வணங்கி முக்தியினைப் பெறும் முறைகளை நான்காக வகுத்துள்ளது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இறை நெறி, மார்க்கம், சாதனம், பாதம் எனப் பல சொற்களால் வழங்கப்பெறும். இவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொன்றையும் ஒவ்வொரு படிநிலையாகவும் கொள்ளலாம்; தனிநெறியாகவும் கொள்ளலாம்.

**சரியை:** இது சிவபெருமானைக் கோயில்களில் உருவ வடிவில் உள்ளத்தால் வணங்கி, உடலால் தொண்டு செய்கின்ற வழிபாட்டைக் குறிக்கும். கோயில்களில் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், நந்தவனம் அமைத்தல், மாலை கட்டுதல் முதலாய திருப்பணிகள் வாயிலாக இறைவனை வணங்குதல் சரியை நெறி எனப்படும். சரியை நெறியில் நின்று ஒழுகியவர் திருநாவுக்கரசு நாயனார். தொண்டு செய்பவர் இறைவனைத் தலைவனாகவும் தம்மை அடிமையாகவும் கொண்டு செய்வதால் இந்நெறி **அடிமை** நெறி என்றும் **தாச மார்க்கம்** என்றும் அழைக்கப்படும். தொண்டு செய்பவர் எல்லா இடங்களுக்கும் செல்லும் தன்மையையும் இறைவனோடு உறையும் தன்மையையும் பெறுவர். இவ்வுரிமை **சாலோகம்** எனப்படும்.

**கிரியை:** இது இலிங்க மூர்த்தியை அகத்திலாயினும் புறத்திலாயினும் எழுந்தருள்வித்துப் பூசை முறையால் வழிபடும் நெறி கிரியை எனப் பெயர் பெறும். இதில் அருவ உருவத் திருமேனிகளின் வழிபாடு நடைபெறுகிறது. இந் நெறியிலே நின்று இறைவனை வழிபட்டு வீடுபேறு அடைந்தவர் திருஞானசம்பந்த நாயனார். கிரியை நெறி **சற்புத்திர மார்க்கம்** எனப்படும். தந்தை - மைந்தர் உறவு போல இறைவனுக்கு அருகில் இருக்கும் பயன் இதனால் கிடைக்கிறது. இப் பயன் அல்லது உரிமை **சாமீபம்** எனப்படும்.

**யோகம்:** அகத் தொழிலால் மட்டும் இறைவனது அருவத் திருமேனியை நினைத்துச் செய்யும் வழிபாடு யோகம் எனப்படும். இதில் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய எட்டு நிலையில் படிப்படியாக நின்று இறைவனை வழிபடுதலாகிய தொழில் நடைபெறும். இந்த நெறிக்கு உதாரணமாக சுந்தரமூர்த்தி நாயனார் வழிபாட்டு முறை அமைகின்றது. அவர் இறைவனோடு தோழமை பூண்டு ஒழுகியவர். தோழமை வழிபாடு **சக மார்க்கம்** என்றும் தோழமை கொள்ளும் உரிமை **சாரூபம்** என்றும் சொல்லப்படும்.

**ஞானம்:** இது ஞான குருவின் உபதேசத்தைக் கேட்டலும், கேட்டுச் சிந்தித்தலும், சிந்தித்து தெளிதலும், தெளிந்த வண்ணம் நிட்டையில் நீந்துதலுமாகிய நெறியைக் குறிக்கும். இந்நிலை சரியை, கிரியை, யோகம் ஆகிய படிமுறைகள் வழியாக வந்த முதிர்ச்சியைப் பெற்ற ஒரு நிலை என்பதனை உணர்தல் வேண்டும். நான்கு மார்க்கங்களுமே ஞானசம்பந்தமானவை. எனினும் இவற்றுக்கு வளர்ச்சி நிலைகள் உண்டு என்று பாடுகின்றார் தாயுமானவர்.

விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய் கனிபோல் அன்றோ பராபரமே

என்பது அவரது பாரபரக் கண்ணிகளில் ஒன்று. இதில் சரியை முதலாய நான்கு நெறிகளையும் மெய்ஞ்ஞானத்துக்குரிய நெறிகளாகக் குறிப்பிட்டுச் சரியையை அரும்புக்கும், கிரியையை மலருக்கும், யோகத்தைக் காய்க்கும், ஞானத்தைக் கனிக்கும் அவர் ஒப்பிடுவதைக் காண்கின்றோம். ஞானநெறியில் நின்று இறைவனை வழிபட்டவர் மாணிக்கவாசக சுவாமிகள். ஞானநெறியில் சிவனுடன் இரண்டறக் கலக்கும் நிலையை எய்துவதால் இது **சாயுச்சிய நெறி** என்றும் அதனாற் கிடைக்கும் உரிமை **சிவனுருவாதல்** என்றும் அழைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் என்னும் தோணி

ஆன்மாவுக்கு உடல்கள் இரண்டு. ஒன்று உருவ உடம்பு. மற்றையது அருவ உடம்பு. கண்களுக்குத் தெரிவது உருவ உடம்பு. உருவ உடம்பினுள்ளே கண்களுக்குப் புலப்படாத ஓர் உடம்பு இருக்கின்றது. இதுவே அருவ உடல் அல்லது சூக்கும உடல் எனப்படுகின்றது. இதன் முக்கியமான ஓர் அங்கம் மனம்.

'மனம் என்னும் தோணி' என்கிறார் அப்பர் சுவாமிகள். இந்தத் தோணியிலேதான் ஆன்மாவின் வாழ்க்கைப் பயணம் தொடர்கிறது. பிறவி என்னும் பெருங் கடலிலே மனம் என்னும் தோணி ஓடிக் கொண்டிருக்கிறது.

கடலிலே அலைகள் அதிகம். அந்த அலைகளிலே அலைவுறும் தோணி போல மனமும் எந்நேரமும் தத்தளித்துக் கொண்டிருக்கும் இயல்புடையது. இதனாலேயே அங்கும் இங்கும் அலைகின்ற, தாவுகின்ற மனத்தை குரங்குக்கு ஒப்பிடுவர் பெரியோர். கடலிலே தத்தளிக்கும் தோணியைத் துடுப்பினால் வலித்து வழிப்படுத்துவது போல ஒரு நிலையில் நில்லாத மனத்தையும் மதி என்னும் கோல் கொண்டு ஆன்மா அவ்வப்போது கட்டுப்படுத்த முயல்வது இயல்பு.

அவ்விதம் கட்டுப்படுத்துகின்ற ஒரு காட்சியை எம் பொருட்டுத் தேவாரத்திலே சித்திரிக்கின்றார் திருஞானசம்பந்தப் பெருமான்.

> நன்னெஞ்சே உனையிரந்தேன் நம்பெருமான் திருவடியே
> உன்னஞ்செய் திருகண்டாய் உய்வதனை வேண்டுதியேல்
> அன்னஞ்சேர் பிரமபுரத்து ஆரமுதை எப்போதும்
> பன்னுஞ்சீர் வாயதுவே பார்கண்ணே பரிந்திடவே.

'நல்ல நெஞ்சமே! உணவுக்குக் குறைவில்லாத வளம் மிகுந்த திருப்பிரமபுரத்தின் கண்ணே எழுந்தருளி இருக்கின்ற நிறைவான அமுதத்தை தத்த தோணியப்பரை வாய் வாழ்த்திய வண்ணம் இருக்கின்றது. நீயும் வாயினைப் போல உய்வடைய விரும்பினால் எம்பெருமானுடைய திருவடிகளை சிந்தித்திருக்கும்படி உன்னைத் தயவாக வேண்டுகிறேன். இந்தப் புவியிலே தன்னிலும் அதிக பத்தியோடு வணங்க இன்னொருவன் வந்துவிட்டானே என்று வாய் உன்னைக் கண்டு வருந்தும் வகையில் தொடர்ந்து இறைவனை நினைத்திருப்பாயாக' என்று நெஞ்சுக்கு அறிவுரை சொல்லுகின்றார் ஞானசம்பந்தப் பெருமான்.

இந்தத் தேவாரத்திலே இறைவனை வழிபடுகின்ற அடியவர்களுக்கு இருக்கக் கூடிய நடைமுறைப் பிரச்சனை ஒன்றுக்குத் தீர்வு காண முயல்கின்றார் திருஞானசம்பந்தர்.

பிரச்சனை இது தான். வாய் இறைவன் புகழைப் பாடுகின்றது. மனம் அந்த நேரம் பார்த்து எங்கேயோ ஓடுகின்றது. வகுப்பு ஒன்றிலே ஆசிரியர் கற்பித்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்றார். மாணவர்கள் எல்லோரும் அவரையே பார்த்த வண்ணம் இருக்கின்றனர். அவர்கள் தான் சொல்வதை உற்றுக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று ஆசிரியர் நினைக்கின்றார். ஆனால் அவர்களிற் சிலர் 'எப்படா இந்த மணி அடிக்கும்' என்று நினைத்துக் கொண்டிருப்பதை அவர் அறியார். அங்கே கண்கள் ஒன்று செய்ய மனம் இன்னொன்று செய்கின்றது.

இங்கே வாய் ஒன்று செய்ய மனம் இன்னொன்று செய்கின்றது. புலன்களோடு மனமும் இணைந்தாலே செயல் முழுமை பெறும். முற்றுப் பெறும். பயனும் உண்டாகும்.

ஒரு தேவாரத்தை ஓதுகின்ற பொழுது அதன் பொருளை உணர்ந்து ஓதுதல் வேண்டும். இறைவனை நினைந்து ஓதுதல் வேண்டும். உணர்வதற்கும், நினைப்பதற்கும் மனம் ஒத்தாசையாக இருத்தல் வேண்டும். அது இல்லாத போது வாயினுடைய தொழிற்பாடு வறுமையடைகின்றது.

பிரிந்து வாழுகின்ற கணவனையும் மனைவியையும் இணைப்பது போல வயையும் மனத்தையும் ஒன்று சேர்க்க முயல்கின்றார் ஞானசம்பந்தப் பெருமான். இந்த முயற்சியிலே அவர் கையாளுகின்ற தந்திரோபாயங்கள் நினைந்து நினைந்து இன்புறத் தக்கன.

ஓர் அலுவலை ஒருவரைக் கொண்டு செய்விக்க வேண்டுமாயின் அவரைக் கொஞ்சம் புகழுதல் எமது இயல்பு. 'உன்னாலேதான் இதனைச் செய்ய முடியும், உன்னை விட்டால் எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்' என்றெல்லாம் நாம் சொல்வதில்லையா?

சொல்வழி கேளாத நெஞ்சத்தை 'நல்ல நெஞ்சே' என்று ஒரு புகழுரையோடு பேச்சை ஆரம்பிக்கின்றார். அடுத்து 'உனையிரந்தேன்' என்கிறார். 'ஏய் இதனைச் செய்' என்று கட்டளை இடுவதிலும் 'எனது இராசாவே உன்னை மன்றாட்டமாகக் கேட்கின்றேன்' என்கின்ற உத்திமுறையால் கல்லையும் கரைக்கலாம் அல்லவா?

'நல்நெஞ்சே' என்றும் 'உனையிரந்தேன்' என்றும் சொன்னதோடு நின்றுவிடாது ஒரு போட்டி மனப்பான்மைக்கும் வித்திடுகின்றார் ஆளுடையபிள்ளையார்.

'வாய் சும்மா அலம்புகிறது. அது உன்னைப் பார்த்துப் பொறாமைப்படும் அளவுக்கு நீ இறைவனை நினைந்துருக வேண்டும்' என்று நெஞ்சுக்கு அறிவுறுத்துகின்றார்.

அறிவுறுத்துவதும் நெஞ்சுதான் என்பதனைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். அதாவது, நெஞ்சுக்கு நெஞ்சே புத்தி சொல்கிறது. பொறுப்புள்ள நெஞ்சு பொறுப்பற்ற நெஞ்சைத் திருத்த முயல்கிறது. எனவே நெஞ்சு இருவகைப்பட்டு நிற்கின்ற நிலையைக் காணுகின்றோம். புத்தியோடு கூடிய மனம் பொறுப்புள்ள மனம். நல்ல மனம். புத்திகெட்டு நடக்கின்ற மனம் தீயமனம். ஆக, ஒவ்வொருவர் இடத்திலும் நல்ல மனமும் இருக்கிறது, தீய மனமும் இருக்கிறது. இதிலிருந்து பல விடயங்கள் எமக்குப் புலனாகின்றன:

1. கெட்டவர்கள் கெட்டவர்களுமல்லர். நல்லவர்கள் முழுமையாக நல்லவர்களுமல்லர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மனம் ஒரு மாயக் குரங்கு என்று சொல்லி அதனைப் புறக்கணித்தல் ஆகாது. அது தீமைகள் புரிந்தாலும் அது ஒரு நல்ல நண்பனாகவும் உதவக் கூடியது என்பதனை உணரல் வேண்டும்.
3. முள்ளை முள்ளால் எடுப்பதைப் போல மனத்தை மனத்தால் வழிப்படுத்தல் வேண்டும்.
4. மனத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எமக்கு வரவேண்டும். மனம் போகும் போக்கெல்லாம் போகல் ஆகாது என்பதை அனுபவத்தால் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.
5. மனக் கட்டுப்பாடு முன்னேற்றத்துக்கு மிகவும் அவசியம்.

மனத்தைக் கட்டுப்படுத்தல் என்பது எளிதான காரியமன்று. நல்ல மனத்திலும் தீயமனத்துக்கு அகங்காரம் அதிகம். அகங்காரம் உள்ள மனம் தானே எல்லாம் என்று நினைக்கும். மற்றையவர்களின் சொல்லைக் கேட்க மறுக்கும். நில்லாவுலகை நிலையானதென்றும் அழுக்கு உடலை அழகானதென்றும் அனைத்து உலகத்தையும் ஆளலாம் என்றும் அது நினைக்கும் என்று அப்பர் பெருமான் பாடுகின்றார்.

தினைத்தனையோர் பொறையிலா வுயிர்போங் கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியால் இந்த
அனைத்துலகும் ஆளலாம் என்று பேசும்
ஆங்காரம் தவிர்நெஞ்சே அமரர்க் காக
முனைத்துவரும் மதில்மூன்றும் பொன்ற அன்று
முடுகியவெஞ் சிலைவளைத்துச் செந்தீ மூழ்க
நினைத்தபெருங் கருணையன்நெய்த் தானம் என்று
நினையுமா நினைந்தக்கால் உய்ய லாமே.

'நன்னெஞ்சே உனையிரந்தேன் உய்வதனை வேண்டுதியேல்' என்று தொடங்கி நெஞ்சம் உய்வதற்கான அறிவுரையைத் திருஞானசம்பந்தர் சொல்லியதை முன்னர் கண்டோம். இந்தத் தேவாரத்தில் திருநெய்த்தானத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வணங்கினால் 'உய்யலாமே' என்கிறார் அப்பர் பெருமான்.

உய்தல் என்றால் என்ன? ஈடேற்றம் இது இரு நிலைகளைக் குறிக்கும். முதலாவது இந்தப் பிறப்பில் நல்ல வண்ணம் வாழுதல், நல்வினைகளை ஈட்டுதல். இரண்டாவது பரகதி பெறுதல். பரகதி - சிவகதி. உலகில் நல்ல வண்ணம் வாழ்வதற்குப் பற்றி நின்ற பாவங்கள் நீங்க வேண்டும். பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில் சுற்ற நின்ற சூழ்வினைகள் வீழ வேண்டும். சூழ்வினை முன்வினை. முன்வினை அனுபவம் முடிய முன்னர் பரகதியை அடைய முடியாது. பரகதியே முடிவான ஈடேற்றம். பிறப்பு இறப்பு என்னும் பெருஞ் சூழியில் அகப்பட்டு அவதிப்படாது பெருந்தலைவனின் திருவடி நீழலிலே நீந்துகின்ற பேரானந்தம். அது ஒன்றே நிலையானது. அந்த நிலையைப் பெறுவது எங்ஙனம்? அப்பரே கூறுகின்றார்.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெறுவதற்கு, அதாவது உய்தியடைவதற்கு ஒரே வழி இறைவழிபாடுதான் என்கின்றார் அப்பர் பெருமான். அவர் சரியை வழியில் நின்று சிவபெருமானை வழிபட்டவர். சிவபெருமானை உருவ வடிவில் கண்டு உடலால் தொண்டு செய்து வணங்குவது சரியை. இதிலே கோயிலைக் கூட்டித் துப்புரவு செய்தல், மெழுகுதல், நந்தவனம் அமைத்தல், மலர் பறித்தல், மாலை கட்டுதல் முதலிய திருத்தொண்டுகளும் புகழ்ந்து பாடுதல், தலையாரக் கும்பிடுதல், ஆனந்தக் கூத்தாடுதல் போற்றி போற்றி அன்று அலறி உருகுதல் ஆகிய வழிபாட்டு முறைகளும் இடம்பெறும். இவற்றையெல்லாம் செய்யும் வண்ணம் நெஞ்சுக்குரைக்கின்றார் திருநாவுக்கரசர்.

கடவுள் வழிபாட்டினால் மேலான ஈடேற்றத்தை அடையலாம் என்று சுந்தரமூர்த்தி நாயனாரும் நெஞ்சுக்குக் கூறுவதைக் காண்கின்றோம்.

பிணிகொள் யாக்கைப்பி றப்பென்னும் இதனை
நீக்கியீசன் திருவடி யிணைக்காள்
துணிய வேண்டிடிற் சொல்லுவன் கேள்நீ
அஞ்சல் நெஞ்சமே வஞ்சர்வாழ் மதில்மூன்(று)
அணிகொள் வெஞ்சிலை யாலுகச் சீறும்
ஐயன் வையகம் பரவிநின் றேத்தும்
திணியும் வார்பொழில் திருத்தினை நகருள்
சிவக்கொழுந்தினைச் சென்றடை மனமே.

'துன்பப்படுகின்ற நெஞ்சமே, நோய் துன்பம் மிகுந்த இப் பிறப்பை நீக்க வேண்டுமா? நீக்கி ஈசன் திருவடிக்கு ஆட்பட வேண்டுமா? கவலையை விடு. இங்கே வா! யான் சொல்வதைக் கேள். தாரகாசுரன் குமாரராகிய வித்துன்மாலி, தாரகாட்சன், கமலாட்சன் ஆகிய வஞ்சகரின் மதில்கள் மூன்றையும் ஆற்றல் மிக்க அம்பினாலே அழித்த எம்பெருமானாகிய சிவபெருமான் வையகம் முழுவதும் தொழுது, ஏத்தும் வகையில் திருத்தினை நகரத்தின் கண்ணே எழுந்தருளியிருக்கின்றான். அந்தப் பெருமானைச் சென்று அடையவாயாக' என்று நெஞ்சுக்கு அறிவுரை கூறுகின்றார் சுந்தரமூர்த்தி நாயனார்.

மனம் இலையானைப் போன்றது. என்னதான் அறிவுரை என்கின்ற சர்க்கரை உருண்டையை அதன் முன் வைத்தாலும் அருகிலே ஓர் அழுக்குக் கூடை இருப்பின் அது உடனே அதிலே சென்று குந்திவிடும். சிற்றின்பங்களிலே அழுந்தி அதுவே வாழ்வு என்றிருக்கும் மனத்தைப் பேரின்பத்துக்குத் திருப்புவது என்பது கடினமான காரியம். முயன்று முயன்று அலுத்துப் போனவர் போல மணிவாசகப் பெருமான் நெஞ்சத்தைக் கண்டித்துப் பாடுகின்றார். திருச்சதகத்திலே வரும் அந்த அருமையான தேன் துளி இது:

ஆடுகின்றிலைக் கூத்துடை யான்கழற்கு
அன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலைப் பதைப்பதும் செய்கிலைப்
பணிகிலைப் பாதமலர்
சூடுகின்றிலைச் சூட்டுகின் றதுமிலைத்
துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலைத் தெருவுதோ றலறிலைச்
செய்வதொன் றறியேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகப் பெருமான் ஞான நெறியிலே நின்று இறைவனை வழிபட்டவர். ஞான நாடகம் ஆட மறுக்கின்ற நெஞ்சைத் 'துணையிலி' என்றும் 'பிண நெஞ்சே' என்றும் ஏசுகின்றார். 'உன்னை வைத்துக் கொண்டு யான் என்ன செய்வது?' என்று சலிப்புடன் கேட்பது போல 'செய்வதொன்று அறியேனே' என்கின்றார்.

நாயன்மார்கள் பக்குவம் பெற்றவர்கள்; திருவருள் வயப்பட்டவர்கள். அவர்களுக்கு ஐம்புலன்களாலோ அந்தக் கரணங்களாலோ தொல்லைகள் ஏற்படுவதில்லை. அவர்கள் எம்போன்றவர்களுக்கு உரைப்பதை எல்லாம் தங்கள் நெஞ்சுக்கு உரைப்பது போல அடக்கமாகச் சொல்லிச் சென்றிருக்கின்றார்கள். 'நெஞ்சு' என்று அவர்கள் குறிப்பிடுவதெல்லாம் பக்குவப்படாத, சொல்வழி கேளாத, அவத்தைப்படுகின்ற எம்போன்றவர்களின் நெஞ்சைத்தான் என்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

மனம் யார் சொன்னாலும் கேளாது. கேட்பதற்கு அதன் அகங்காரம் விடாது. அனுபவத்தினாலேயே அது அறிவு பெறவல்லது. அந்த நிலையிலும் நல்லுணர்வு பெறுவதற்கு இறையருள் வேண்டும் என்கிறார் அப்பர் பெருமான்:

மனமெனும் தோணிபற்றி மதியெனும் கோலையூன்றிச்
சினமெனும் சரக்கையேற்றிச் செறிகடல் ஓடும்போது
மதமெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணா(து)
உனையுனும் உணர்வைநல்காய் ஒற்றியூர் உடைய கோவே.

அந்தக் கரணங்களால் அலைவுறும் ஓர் ஆன்மாவை இப்பாடலிலே சித்திரிக்கின்றார் அப்பர் பெருமான். அந்தக் கரணங்கள் நான்கு. அவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனப்படும். 'மனம் என்னும் தோணியிலே மதி என்னும் கோலையூன்றிச் சினம் என்னும் சரக்கை ஏற்றிக் கொண்டு பிறவிக் கடலில் ஆன்மா ஓடுகின்றது. ஒரு கட்டத்தில் மதம் என்னும் பாறையில் மோதிச் செய்வதறியாது அது தத்தளிக்கின்றது. அந்த நிலையிலாவது திருவொற்றியூரிலே எழுந்தருளியுள்ள எம் பெருமானே உன்னை நினைக்கும் நல்லுணர்வைத் தந்தருள்வாயாக' என்பது இதன் பொருள்.

இதில் மதி புத்தியையும் சினம் சித்தம் எனப்படும் குண தத்துவங்களில் ஒன்றையும் மதம் அகங்காரத்தையும் குறித்து நிற்கின்றன. இதிலிருந்து மனத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் புத்தி, சித்தம், அகங்காரமாகிய ஏனைய கருவிகளின் உதவியும் வேண்டும் என்பது புலனாகின்றது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு திக்கிலே செல்லவல்ல இக் கருவிகளை ஒருசேரக் கட்டுப்படுத்தும் வல்லமையை இறைவழிபாட்டினாலே பெற முடியும் என்பதனையும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

இப்பொழுது நாம் தொடங்கிய இடத்துக்கே செல்வோம். 'நன்னெஞ்சே உனையிரந்தேன்' என்ற தேவாரத்திலே மனம் ஒன்றை நினைக்க வாய் இன்னொன்றைச் செய்த நிலையினைப் பார்த்தோம்.

மனத்தைக் கட்டுப்படுத்தினால் அது வாயுடன் இணைந்து இறைவனை வணங்கும். இந்த ஒற்றுமையை திருஞானசம்பந்தரின் பின்வரும் பாடல் எடுத்துக் காட்டுகின்றது:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடு மதனாலே

இப்பொழுது வாழ்த்துவது வெறும் வாய் மட்டுமன்று. மனமும் அதனோடு ஒருமைப்பட்டு நிற்கின்றது. மனமே வாயாரப் பன்னி ஆதரித்துப் போற்றிப் பாடி இறைவனை வழிபடுகின்றது.

என்ன ஆச்சரியம்! அங்கும் இங்கும் எங்கும் அலைந்து திரியும் மனம் எங்ஙனம் இருந்தாற் போல் இப்படி மாறியது? ஒரு நிலைப்பட்டது? ஏதோ புண்ணியம் செய்த மனம் போலும் என்று வியக்கின்றார் ஞானசம்பந்தப் பெருமான். புண்ணியம் நல்வினைகளினாலே வருவது. அதனாலே தான் 'முன்னை நீபுரி நல்வினைப் பயன்' என்கின்றார்.

எனவே நாமும் நல்வினைகளைச் செய்வோம். நல்வினைகளாவன நல்லதையே நினைத்தல், நல்லதையே செய்தல், நல்லதையே பேசுதல். நல்லதென்பது எமக்கும் பிறருக்கும் நன்மை தருவது. எமக்கு நன்மை தருவது பிறருக்குத் தீமையாகுமெனில் அதனைச் செய்யாது விடுவோமாக.

நல்வினைகளில் மிகவும் மேலானது எமது நெஞ்சத்தைச் சுத்தப்படுத்துதல்; வழிப்படுத்துதல்; கட்டுப்படுத்துதல். 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' என்றார் வள்ளுவர் பெருமான். சுத்தமாக மனத்தை வைத்துக் கொண்டால் அதுவே பெரிய அறம்.

அழுக்குள்ள மனம் தீய மனம். அது எமக்குப் பகை. அழுக்கற்ற மனம் தூய மனம். அது எமக்கு உறவுடையது. மனத்தைப் பகைவனாகக் கொள்ளாது நண்பனாக வைத்திருந்தால் அது என்றும் எமக்கு உதவியாக இருக்கும். சேவகனாக இருக்கும். அதாவது, மனம் போகும் போக்கில் நாம் போவதற்குப் பதிலாக நாம் போகும் போக்கிற்கு மனம் கட்டுப்பட்டு நிற்கும். இந்தக் கட்டுப்பாட்டுக்குச் சிறந்த வழிகள் இறைவழிபாடு, தியானம், விரதம் முதலியன. முயல்வோம் வெல்வோம். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

-திருநாவுக்கரசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி வைராக்கியம்

இந்து சமயம் பல தெய்வங்களை வணங்குகின்ற சமயம். அதன் பிரதான பிரிவுகளில் ஒன்று சைவ சமயம். சைவ சமயம் சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக் கொள்ளுகின்ற போதிலும் இன்றைய சைவர்கள் பலர் வைணவ சமயத்துத் தெய்வங்களையும் வணங்கி வருகின்றனர்.

சைவ சமயத்திலும் தெய்வங்கள் பல. எனினும் பராசக்தி, விநாயகர், முருகன் ஆகிய தெய்வங்கள் சிவமூர்த்தங்கள் என்னும் தத்துவத்தின் அடிப்படையில் அவர்களை வணங்குவது சிவனை வணங்குவதற்குச் சரியாகின்றது.

எந்தத் தெய்வத்தை எந்த வடிவத்தில் வணங்கினாலும் அந்தத் தெய்வத்தை முழுமையாக நம்பிப் பக்தி செலுத்துவது ஏகதெய்வ வழிபாடு எனப்படும். ஒரு தெய்வத்தில் உள்ளத்தை ஒப்படைத்து விட்டால் பிற தெய்வங்களை உள்ளம் நாடாமல் இருப்பது இயல்பு. இது, ஓர் ஆடவனிடத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்த ஒரு பெண் பிற ஆடவரை விரும்பாத நிலையை ஒத்தது.

நாயன்மார்கள் சிவபெருமானை மட்டுமே வழிபட்டு அருள் பெற்றவர்கள். சிவபெருமான் மாதொரு பாகன் ஆதலால் அவரை வணங்குவது சக்தியையும் வணங்குவதற்குச் சரி என்று கருதினார்களேயன்றிச் சக்தியைத் தனியாக வழிபடவில்லை. மணிவாசகப் பெருமான் சிவனை முழுமுதலாகக் கொண்டவர். எப்போதும் சிவசிந்தனையில் வாழ்ந்தவர். மற்றொரு வகையாகச் சொன்னால் தன்னை முழுமையாகவே சிவபெருமானுக்கு அர்ப்பணித்தவர். எல்லாம் சிவனே என்று இருந்த அவருக்கு, பிற தெய்வங்களில் நாட்டம் இருக்கவில்லை. இதனை வெளிப்படையாகவே

கொள்ளேன் புரந்தரன் மால் அயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினது அடியாரொடு அல்லால் நரகம்புகினும்
எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னை அல்லாது எங்கள் உத்தமனே

என்று சொல்லி வணங்குவதைப் பார்க்கின்றோம்.

'எங்கள் உத்தமனே! என் குடியே கெடினும் இந்திரன், திருமால், நான்முகன் ஆகியோரை வணங்கி வாழும் வாழ்வை மேற்கொள்ள மாட்டேன். நரகம் செல்ல நேர்ந்தாலும் உனது அடியார்களோடு அல்லால் பிற நெறியாளர் உறவை விரும்ப மாட்டேன். நீ என்னை ஆட்கொள்ளாது இந்த உலகத்திலே தொடர்ந்து இருக்க அருளினாலுங் கூட, உன்னை வெறுக்க மாட்டேன். இறைவனே! நீ என்னைக் கைவிட்டாலும் உன்னையல்லாது பிற தெய்வத்தை மனத்தாலும் நினைக்க மாட்டேன்;' என்பது இத் திருவாசகத்தின் பொருள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போன்ற ஒரு பாடலை அபிராமிப்பட்டரும் பாடியிருக்கின்றார். அபிராமிப்பட்டர் சக்தியை ஏக தெய்வமாகக் கொண்டவர். அவர் பாடிய பக்திச் சுவை சொட்டும் நூல் அபிராமி அந்தாதி. அதில் ஓர் இடத்தில்

> கொள்ளேன் மனத்தில் நின் கோலமல்லால் அன்பர் கூட்டந்தன்னை
> விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன் மூவுலகுக்(கு)
> உள்ளே அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
> கள்ளே களிக்கும் களியே அளிய என் கண்மணியே

என்று பாடுகின்றார்.

'மூன்று உலகங்களுக்கு உள்ளேயும் அவற்றுக்கு அப்பாலும் மட்டும் அன்றி என் உள்ளத்திலும் செறிந்து செழுமையாக இருக்கும் தேனையொத்த தேவியே! நினைக்க நினைக்கக் களிப்பூட்டும் இன்பமே! அன்புக்குரிய என் கண்மணியே! உன்னுடைய அழகிய வடிவத்தையல்லாது வேறு எதனையும் மனத்தினில் நினைக்க மாட்டேன். உன் அடியார் கூட்டத்தை விட்டும் பிரிய மாட்டேன். வேறு சமயங்களையும் விரும்ப மாட்டேன்'

என்று சொல்லி மணிவாசகரைப் போன்று அபிராமிப்பட்டரும் தமது ஏக தெய்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதைப் பார்க்கின்றோம்.

இப் பாடல்களாற் பல விடயங்கள் தெளிவாகின்றன:
- ஒரு தெய்வத்தை நம்பினால் பிற தெய்வ நம்பிக்கை தேவையில்லை.
- ஒரு தலைவனிடம் தன்னை அர்ப்பணித்து விட்ட மனம் பிற தலைவர்களை நாடாது.
- அன்புக்குரியவனே பெரியவன். அவன் மூலம் கிடைக்கும் நன்மையே சிறந்தது.
- அவன் நன்மை செய்யாது போனாலும் அவன் மீது கொண்ட பக்தி மாறாது; வேறு ஒருவருக்குத் தாவாது.
- மனம் அங்கிங்கு தாவும் இயல்புடையது ஆயினும் உறுதியை கைவிடலாகாது.
- ஆராத அன்பு அந்த உறுதியை, கட்டுப்பாட்டை வளர்க்க வல்லது.
- மனக் கட்டுப்பாடு இல்லாதவர் கடவுள் அனுபவத்தைப் பெறுவது கடினம்.
- ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று போற்றி அலைபவர்கள் அறிவிலிகள்.
- ஒரு தெய்வத்தை நம்பி, அதனையே அன்போடு வணங்கிவரின் அதன் மூலம் நன்மைகள் பெறுதல் அல்லது ஈடேற்றம் அடைதல் எளிதாகும்.

ஒரு தெய்வத்தையே நம்பி, வணங்கி வரும் உறுதிப்பாட்டுக்குப் பக்தி வைராக்கியம் என்று பெயர். இந்த வைராக்கியத்தை ஒரு கதை மூலம் விளக்குகின்றார் அப்பர் பெருமான்.

ஒரு பெண். வயது பதினாறிருக்கும். அழகுடைய மங்கை. அவளுக்கு ஒரு நாள் அவன் காட்சி தந்தான். அண்ணலும் நோக்கினான். அவளும் நோக்கினாள். அவன் மீது அவளுக்குக் காதல் உண்டாயிற்று. அவனைப் பற்றி அதிகம் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆவலும் உண்டாயிற்று. யாரிடம் கேட்கலாம்? தனக்குப் பிடித்த ஒரு தோழியை அணுகித் தான் ஒருவனிடம் மனத்தைப் பறிகொடுத்த செய்தியைக் கூறி, அவனது தோற்றம் அழகு எல்லாவற்றையும் வருணித்து, அவனது பெயரை அறிய ஆவலாக இருக்கிறது என்று சொன்னாள். தோழிக்கு அவள் யாரைக் குறிப்பிடுகின்றாள் என்பது ஓரளவுக்குத் தெரிந்து விட்டது. விசாரித்து வந்து சொல்கிறேன் என்று புறப்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. உணவுக்கு மனம் இல்லை. உறக்கமும் வரவில்லை. தோழி வரும் வழியில் விழியை வைத்துக் காத்திருந்தாள். தோழி வந்தாள். தலைவி 'என்னடி! விசாரித்தாயா? அவரது பெயர் என்ன' என்று கேட்டாள். 'அவனுக்கு மாதொருபாகன் என்று பெயர். அவனுக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகிவிட்டது. அவனை அடியோடு மறந்து விடு' என்றால் தோழி.

தலைவி மற்றும் ஒரு கேள்வியைக் கேட்டாள் 'அவர் என்ன தொழில் பார்க்கின்றார்?'

தோழி சொல்கிறாள். 'அந்த ஆளுக்கு குறிப்பிடும்படியாகத் தொழில் எதுவும் கிடையாது. பொருள் ஈட்ட வேண்டும் என்னும் நோக்கமும் கிடையாது. அவன் ஒரு பிச்சைக்காரன். பகலிலே ஓடேந்திப் பிச்சை எடுக்கிறானாம். இரவிலே உடுக்கடித்துச் சுடலைப் பக்கத்தில் நின்று கூத்தாடுகின்றானாம்.'

'அவனது சொந்த ஊர் எது?' தலைவி மீண்டும் கேட்கிறாள். 'அடியே! அவனுக்குச் சொந்த ஊர் என்று எதுவும் இல்லை. இங்கும் இருப்பானாம். எங்கும் இருப்பானாம். தற்சமயம் பக்கத்துத் திருவாரூர்க் கோயிலிலே தங்கி இருக்கிறானாம். அவன் உனக்குச் சரிப்பட்டு வரமாட்டான். அவனைப் பற்றிய நினைவை விட்டு விடு' என்றாள் தோழி.

இவ்வளவற்றையும் கேட்ட பின்னரும் தலைவி தலைவன் நினைவால் ஏதோ ஏதோவெல்லாம் பைத்தியக்காரி போலப் பேசி, 'வாழ்ந்தால் அவனோடுதான் வாழ்வேன்' என்று அவனைக் காணப் புறப்பட்டாள். தாயும் தந்தையும் தடுத்தார்கள். சுற்றத்தவர்களும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். தலைவி கேட்கவில்லை. எக்கேடு கெட்டாலும் அவனோடுதான் வாழ்வேன் என்னும் வைராக்கியத்தில் பெற்றாரையும் உற்றாரையும் துறந்து, அவனை அடைய அவள் புறப்பட்டாள்.

இவ்வித பக்தி வைராக்கியத்தை விளக்கும் அப்பர் பெருமானின் தேவாரம் இது:

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
  மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
  பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
  அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்
  தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!

இது எமது வாழ்க்கையில் நாம் கண்டு, கேட்டு வரும் சாதாரண காதற் கதையல்ல. எமது சமயத்தின் பிரதான தத்துவம் ஒன்றை விளக்கும் பக்தி பரவசக் கதை. சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் உண்மையில் வளர்ந்தது. பாசத்தை விட்டொழித்தால் பசு பதியை அடையும் என்பதில் அசையாத நம்பிக்கையுடையது. இத் தேவாரத்திலும் அப்பர் பெருமான் அதனையே வலியுறுத்துகின்றார். பதி - தலைவன், பசு - ஆன்மா. அது இங்கே ஒரு பெண்ணாக உருவகிக்கப்பட்டுள்ளது. பாசம் - உலக பந்தம் - ஆணவம், கன்மம், மாயை முதலாய மலங்கள். இம் மலங்கள் எதுவும் இல்லாத ஆன்மா பக்குவம் பெற்ற ஆன்மா ஆகின்றது. அத்தகைய பக்குவமுடைய ஆன்மா பதியை அடையும் வேட்கை மிகுதியை வைராக்கியத்தை இத் தேவாரம் முன் வைக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பக்தி உறுதிப்பாட்டை,

> மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து
> மறையோதும் எங்கள் பரமன்
> நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்தென்
> உளமே புகுந்த அதனால்
> கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
> கொடுநோய்க ளான பலவும்
> அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
> அடியார் அவர்க்கு மிகவே.

என்று பாடும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரிடத்திலும் காண்கின்றோம். 'சிவபெருமான் என் உள்ளத்திலே இருக்கின்ற காரணத்தினாலே ஊழிக் காலத்து நெருப்புக்கோ, இயமனுக்கோ, அவனது தூதுவருக்கோ, கொடிய நோய்களுக்கோ வேறு பிற துன்பங்களுக்கோ நான் அஞ்சப் போவதில்லை. ஏனென்றால் அவை எல்லாம் சிவனடியார்களுக்கு நல்லனவாகவே அமையும்' என்று கூறும் துணிச்சலைக் கவனித்தல் வேண்டும்.

இத்தகைய துணிச்சலை இன்னும் அதிக உள்ளத்தால் வீப்புடன் வெளிப்படுத்துகின்றார் அருணகிரிநாதர்:

> தண்டா யுதமும் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
> திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்
> தொண்டாகிய வென் அவிரோத ஞானச் சுடர்வடிவாள்
> கண்டா யடாஅந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே.

அருணகிரிநாதரும் ஏகதெய்வ வழிபாட்டுக்காரர்தாம். முருகன் அவரது முதன்மைக் கடவுள். அவர் பாடிய திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம் ஆகியவற்றில் முருகனே புகழப்படுகின்றான். முருக அனுபவமே பேசப்படுகின்றது. விநாயகப் பெருமான், சிவபெருமான், உமாதேவியார் பற்றி அவர் பல இடங்களிற் குறிப்பிட்டிருப்பினும் அவரது குலதெய்வம் - நம்பிக்கைத் தெய்வம் முருகப் பெருமானாவார். முருகன் மீது அவர் வைத்திருக்கும் பக்தி வைராக்கியம் இயமனுக்கே சவால் விடுகின்றது. 'இயமனே நீ என் உயிரை எடுக்க வருவாயாகில் நான் வணங்கும் தெய்வம் முருகன் உன்னையும் கொல்வான்' என்று சொல்வது தான் ஒரு பக்தனுக்கு இயல்பு. ஆனால் அருணகிரிநாதர் முருகன் செய்ய வேண்டிய வேலையைத் தானே செய்வதாகச் சவால் விடுகின்றார். அவரது சவாலில் இருவகைச் சிறப்புகள் மேலோங்கி இருப்பதைப் பார்க்கின்றோம்.

ஒன்று அவர் இயமனை எச்சரிக்கின்ற முறை. எடுத்த எடுப்பிலேயே, 'இயமனே உனது தண்டாயுதமும் திரிசூலமும் விழும்படியாக உன்னைத் தாக்குவேன்! திண்டாட வைப்பேன்! வெட்டுவேன்! வெட்டி விழுத்துவேன்' என்று கர்ச்சிக்கின்றார்.

இயமன் சிரிக்கின்றான். 'இப்படி எத்தனை பேர் எனக்குச் சவால் விட்டிருக்கின்றார்கள். எனக்குத் தெரியாதா? அதுவும் வாய்ச் சொல்லில் வல்ல தமிழனின் மிரட்டலுக்கு நான் பயந்து போவேனா, என்ன' என்று சிரிக்கின்றான். அருணகிரிநாதர் அவன் சிரிப்பை அடக்குகின்றார். 'கண்ணில்லாதவனே! என் கையில் இருப்பது சாதாரண வாள் அன்று. செந்தில் வேலனையே சதா தியானித்துப் பெற்ற அவிரோத ஞானச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்வாள்! அருகில் வந்து பார்!' என்று கடைசியாகத் தனக்கு இருக்கும் சக்தியினை வெளிப்படுத்தி இயமனை நடுங்க வைக்கின்றார்.

ஆக, சவால் வந்து ஒரு சாட்டுக்காகச் சொன்ன சவால் அன்று. அப்படியானால் அது முருகனுக்குத்தான் இழுக்காகும்.

அவர் பாவித்திருக்கும் வார்த்தைகள் அவரது பக்தி வைராக்கியத்தை மேலும் வலுப்படுத்துகின்றன. ஒருவருக்குத் துணிவு வரும் பொழுது, கோபம் வரும் பொழுது கடும் மொழிகள் வருவது இயல்பு. முருகன் மீதுள்ள பக்திச் சிறப்பால், அவனது அருளிலே குளித்துத் திளைத்த உறுதிப்பாட்டினால் அருணகிரிநாதருக்கு இயல்பாகவே வல்லினச் சொற்கள் வந்து குவிகின்றன. அவரின் கந்தரலங்காரப் பாடலை மீண்டும் கவனிக்கவும்.

இவ்விதம் இறைவனை வழிபடுகின்றவர்கள், பக்தியிற் சிறந்தவர்கள் ஆங்காரத்தோடு பேசலாமா, பாடலாமா என்னும் ஒரு கேள்வி இந்த இடத்திலே சிலருக்கு எழக்கூடும்.

இது அகங்காரம் அன்று. உண்மையிற் சிவனடியார்கள் அகங்காரம் கெட்டவர்கள். பக்தி வைராக்கியம் காரணமாக அவர்களிடத்திலே எழும் வீரமே இவ்விதம் அவர்களைப் பேச வைக்கின்றது. திருக்கூட்டச் சிறப்பைப் பேச வந்த சேக்கிழார் பெருமான் அவர்களின் 'வீரம் என்னால் விளம்பும் தகையதோ' என்று வியப்பதைப் பார்க்கின்றோம்.

இயற்பகை நாயனார் சிவனடியாருக்குத் தமது மனைவியையே தானமாகக் கொடுத்தமை, எறிபத்த நாயனார் பூக்குடலையைப் பிடித்திழுத்துச் சிதறிய பட்டத்து யானையை வெட்டியமை, கண்ணப்ப நாயனார் தமது கண்ணையே குத்தி எடுத்துக் காளத்தி அப்பருக்கு அப்பியமை, கலிக்கம்ப நாயனார் சிவனடியாரை வழிபட மறுத்த தமது மனைவி கையை வெட்டியமை, சண்டேசுவர நாயனார் அபிஷேகப் பாற்குடத்தை தந்தையின் காலை வெட்டியமை எல்லாம் இடறிய வீரம், பக்தியால் விளைந்த வீரம் என்பதை உணர்தல் வேண்டும்.

இதனால் சைவ சமயத்துக்கு வீரசைவம் என்ற ஒரு பெயரும் உண்டு. வீரம் பக்தி வைராக்கியத்தால் பிறக்கின்ற விறல். பக்தி வைராக்கியம் ஒரு குறிப்பிட்ட தெய்வத்தின் மீது வைத்திருக்கும் உறுதியான நம்பிக்கையின் விளைவு. இது உன்னதமானவொரு சக்தி. ஈர்ப்புச் சக்தி, இறைவனை ஈர்க்கும் சக்தி.

நாம் பொதுவாக எல்லாத் தெய்வங்களையும் வணங்கிப் பழக்கப்பட்டவர்கள். விநாயக சதுர்த்தி விரதத்தை அனுட்டிப்போம். பின்னர் கந்தசட்டி விரதத்தைப் பிடிப்போம். அடுத்துக் கேதார கௌரி விரதம் இருப்போம். இதில் ஒன்றும் தவறு இல்லை. ஆனால் இவ்விதம் தெய்வத்துக்குத் தெய்வம் பாய்வதனால் எந்த ஒரு தெய்வத்திலும் எமக்கு முழுமையான நம்பிக்கை இல்லை என்றாகி விடுகின்றது. இவ்வித வழிபாடு பக்குவம் குறைந்தவர்கள் மத்தியிலேயே காணப்படுகின்றது. பக்குவம் உள்ளவர்கள் ஒரு தெய்வத்தையே சிக்கெனப் பிடித்துச் சிறப்படைவார்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி

தீபாவளி என்றால் தீபங்களின் வரிசை என்று பொருள். தீபம் + ஆவளி = தீபாவளி. ஆவளி - வரிசை. தீபங்களை வரிசையாக ஏற்றி வணங்கும் பண்டிகை தீபாவளி.

கனடாவிலே தமிழீழத்து சைவ மக்கள் தீபாவளியைக் கொண்டாடி வருகின்றார்கள். புத்தாடைகள் அணிந்து, கோயிலுக்குச் சென்று அர்ச்சனைகள் செய்து வழிபபடுகிறார்கள். உறவினர்களை சந்தித்தல், அன்பளிப்புகள் வழங்குதல், நண்பர்களை வாழ்த்துதல், விருந்துகள் வைத்தல் என்று பலவிதமாக உறவாடி மகிழ்ந்திருக்கிறார்கள். ஆனால் தீபங்களை வரிசையாக வைத்து யாரும் கொண்டாடுவதாகத் தெரியவில்லை. கொண்டாடவும் முடியாது. இங்குள்ள குடியிருப்பு முறைகள் அவ்விதமான கொண்டாட்டங்களுக்கு இடம் தருவதாக இல்லை. சில கோயில்களிலே தீபங்கள் வரிசையாக ஏற்றப்படுகின்றன.

தீபங்களை எப்பொழுது ஏற்றுதல் வேண்டும், ஏன் ஏற்றுதல் வேண்டும், யாரை வணங்குதல் வேண்டும், எதற்காக வணங்குதல் வேண்டும் என்பன பற்றிச் சிறிது சிந்திப்போம். தீபாவளி தைப்பொங்கலைப் போன்று தமிழர்களோடு மட்டும் சம்பந்தப்பட்ட ஒரு விழாவன்று. அது இந்துக்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு புண்ணிய தினமாகும். சைவத்தமிழரும் ஏனைய தென்னாட்டவரும் ஐப்பசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச திரயோதசி இரவில் சதுர்த்தசி சம்பந்தம் அடைகையில் அதாவது, ஐப்பசி மாதத்து அமாவாசைக்கு முன் தினம் தீபாவளியைக் கொண்டாடுகின்றனர். வட நாட்டவர் அமாவாசையையும் அதனை அடுத்த பிரதமையையும் பிரதானமாகக் கொண்டு இதனைக் கொண்டாடுகின்றனர்.

இந் நாளை விஷ்ணு பகவான் நரகாசுரனைக் கொன்ற நாளாகப் புராணங்கள் கூறுகின்றன.

நரகாசுரன் என்பான் பிராகசோதிடபுரியின் மன்னன். பல வரங்களைச் சிவபெருமானிடத்திலும் விஷ்ணு பகவானிடத்திலும் பெற்று வலிமையடைந்தவன். அந்த வலிமையினாலே அகங்காரம் கொண்டு தேவர்களைத் துன்புறுத்திப் பல தீங்குகளை விளைத்தான். அவற்றைத் தாங்கொணாத தேவர்கள் சிவபெருமானை வணங்கி முறையிட்டார்கள். கருணைக் கடவுளாகிய சிவபெருமான் விஷ்ணு பெருமானை அனுப்பி நரகாசுரனைக் கொல்வித்தார். அதனால் சிவனை முழுமுதற் கடவுளாக வணங்கும் சைவர்களும் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகப் போற்றும் வைணவர்களும் இத்தினத்தை ஒரு சேரக் கொண்டாடுகின்றனர்.

சாவதற்கு முதல் நரகாசுரன் தனது இருளாகிய அகந்தை அழிந்த நாளை ஒளியேற்றி உலகத்தவர் எல்லோரும் கொண்டாட வேண்டும் என்று விஷ்ணு பெருமானைக் கேட்டுக் கொண்டான். அவரும் அவ்விதமே ஆகுக என வரம் அளித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தினாலே உலகத்தவர் இத் தினத்தை தீப வரிசைகள் வைத்துக் கொண்டாடி வருகின்றார்கள். வட இந்தியாவில் ஒரு சாரார் இராமர் இராவணனை வென்று அயோத்தி மாநகரை அடைந்த பொழுது மக்கள் நகரத்தைத் தீபங்களால் அலங்கரித்துக் கொண்டாடினார்கள் என்றும் அக் கொண்டாட்டத்திலிருந்தே தீபாவளி பிறந்தது என்றும் நம்புகின்றனர்.

எது எப்படியாயினும் நன்மை தீமையை வென்ற நாளாகத் தீபாவளி விளங்குகின்றது. ஒளி நன்மையின் சின்னம். இருள் தீமையின் பிரதிநிதி.

ஒளி இருளைப் போக்கும் இயல்புடையது. ஒளி இருக்கும் இடத்தில் இருள் இருக்க முடியாது. சூரியன் உதிக்கும் பொழுது இருள் மறைந்து விடுகிறது.

எமக்கு அதிகம் தீமை விளைக்கின்ற ஒன்று ஆணவம். ஆணவம், கன்மம், மாயை என்று கூறப்படுகின்ற மும்மலங்களுள்ளே மிகவும் கொடியது ஆணவம். அது இருளிலும் கொடியது. இருள் தன்னைக் காட்டும். ஆனால் தன்னிடத்திலேயுள்ள பொருள்களைக் காட்டாது. ஆணவ மலமோ தன்னையும் காட்டாது தன்னியல்புகளையும் காட்டாது மறைந்திருக்கின்றது.

மறைந்திருப்பதும் மாயம் புரிவதும் அசுர குணங்கள். அழுக்காறு, அவா, வெகுளி என்பன அதன் ஏனைய குணங்கள். இவை தீமை விளைவிப்பவை.

அழுக்காறு என ஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்

என்று அழுக்காற்றினை ஒரு பாவி என்கின்றார் திருவள்ளுவ நாயனார். அந்தப் பாவி தனிவகையானது. எதனுடனும் ஒப்பிட முடியாதது. ஏனெனில் அது யாரை அண்டி இருக்கின்றதோ அவருடைய இம்மைச் செல்வங்கள் எல்லாவற்றையும் கெடுத்து, மறுமையில் நரகத்திற் புகுத்திவிடும் இயல்புடையது.

ஆணவ இருளைப் போக்கவல்ல ஒரே ஒளி இறை ஒளிதான். இறைவனே ஒளிமயமானவன் தான்; சோதிவடிவானவன் தான்.

ஒளிகொள் மேனிஉடையாய் உம்பராளீ என்
அளியராகி அழுதுற்று ஊறும் அடியார்கட்(கு)
எளியான் அமரர்க் கரியான் வாழும் ஊர்போலும்
வெளிய வுருவத்தானை வணங்கும் வெண்காடே

என்றும்

சோதியைச் சுண்ணவெண் ணீறணிந் திட்டவெம்
ஆதியை ஆதியும் அந்தமும் இல்லாத
வேதியை வேதியர்தாம் தொழும் வெண்ணியில்
நீதியை நினையவல் லார்வினை நில்லாவே

என்றும் பாடுகின்றார் திருஞானசம்பந்தப் பெருமான். 'சோதியாய்ச் சுடருமானார்' என்று அப்பர் பெருமானும் 'சோதியிற் சோதியெம்மானை' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பாடுகின்றனர். மணிவாசகப் பெருமான் 'சோதியே சுடரே சுடரொளி விளக்கே' என்றும் 'சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே' என்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானை ஒளிவடிவாகக் காண்கின்றார். எனவே ஒளிமயமான இறைவனை ஒளியேற்றி வழிபடும் கொண்டாட்டமே தீபாவளி. ஒளி தெய்வீகத்துக்கு வழி, இருள் அசுர பாவங்களின் குழி என்பதையே தீபாவளி குறித்து நிற்கின்றது.

தீபங்களை ஏற்றுகின்ற பொழுது இறை ஒளியை ஏற்றுகின்றோம் என்னும் சிந்தனையுடன் ஏற்றுதல் வேண்டும். அவற்றைப் புறத்தே ஏற்றுவது போல உள்ளத்திலேயும் ஏற்றுதல் வேண்டும். சிறப்பு என்னவென்றால் இறைவன் எமது உள்ளங்களிலேயே எழுந்தருளி இருக்கின்றான். ஆனால் நாம் அவனை இனம் கண்டு கொள்வதில்லை.

தேடிக் கண்டுகொண்டேன்
திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்.

என்கின்றார் அப்பர் பெருமான். அவரைப் போன்று நாமும் எம்முள்ளே தேடிக் கண்டு கொள்ள வேண்டும் அவ்விதம் கண்டு கொள்ளின் உள்ளம் கோயில் ஆகின்றது. எமது சிந்தனைகள் செய்கைகள் யாவும் தெய்வீகமாகின்றன. இந்தத் தத்துவத்தைத் திருமூல நாயனார்

உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே

என்று விளக்குகின்றார்.

இந்த உள்ளொளி சார்ந்த தெய்வீக வாழ்வு குறித்த நோக்கத்தைப் பலர் மறந்து விடுகின்றார்கள்.

தீபாவளியைக் குடித்து வெறிக்கும் ஒரு நாளாகக் கழிப்பது எமக்குள்ளே இருக்கும் அசுரத் தன்மையை மேலும் வளர்ப்பதற்கு வழி சமைப்பதாகவுள்ளது. இது குளிக்கப் போய்ச் சேறு பூசுவதைப் போன்றது.

தீபாவளியை உள்ளத்துக்கு ஒளியேற்றும் ஒரு தெய்வீக தினமாகக் கொண்டு அறத்தை வளர்க்கும் செயல்களிலே ஈடுபடுவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசட்டி விரதம்

கந்தசட்டி விரதம் ஐப்பசி மாதச் சுக்கிலபட்ச பிரதமை முதல் சட்டி வரையிலான ஆறு தினங்களுக்கு மேற்கொள்ளப்படுகின்றது. இந்த ஆறு என்கின்ற எண் முருகப் பெருமானுடன் இணைந்து மேலோங்கி நிற்கும் ஓர் எண். அதன் பெறுமதி முருகப் பெருமானின் எல்லையற்ற கருணைத் திறத்தைப் போல அதிகரிக்கும் தன்மையுடையது.

இந்த எண்ணின் சிறப்புகள் பலவகையாயினும் மூன்று விடயங்களை இங்கு முக்கியமாகக் குறிப்பிடுதல் பொருந்தும்.

முதலாவதாக, முருகப் பெருமானின் அவதாரமும் ஆறு நிலைகளைக் கொண்டதாக இருந்தது. முதலாவது நிலை சிவபெருமானது நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகளாகப் பிறந்தமை. இத்தீப்பொறிகளை அக்கினியும் வாயுவும் கங்கையில் கொடுத்தமை இரண்டாவது நிலை. கங்கை தீப்பொறிகளைச் சரவணப் பொய்கையில் சேர்த்தமை மூன்றாவது நிலை. சரவணப் பொய்கையில் தீப்பொறிகள் ஆறு குழந்தைகளாக வடிவம் பெற்றமை நான்காவது நிலை. கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்தமை ஐந்தாவது நிலை. உமாதேவியார் ஆறு குழந்தைகளையும் அணைத்து ஆறுமுகங்கள் கொண்ட ஒரு திருமுருகன் ஆக்கியது ஆறாவது நிலை.

இந்த ஆறு வளர்ச்சி நிலைகளும் பிரதமை முதல் சட்டி வரையிலான ஆறு நாட்களில் நடந்ததென்றும் ஞானிகள் கருதுகின்றனர்.

இரண்டாவதாக, முருகப் பெருமானுக்கு முகங்கள் ஆறு ஆக இருப்பதனாலும் இந்த எண் சிறப்புப் பெறுகின்றது. ஆறு உடல்களையும் ஒன்றாக்கிய உமாதேவியார் திருமுகங்களை ஒன்றாக்கவில்லை. அவர் ஆறு குழந்தைகளையும் அணைத்தது மார்புக்குக் கீழேதான். எந்தத் தாயாவது தலையிலே பிடித்துக் குழந்தைகளைத் தூக்குவாளா? கைகளுக்குக் கீழே பிடித்து அணைத்த பொழுது உடல்கள் இணைந்தன. தலைகளும் கரங்களும் அப்படியே இருந்துவிட்டன. அதனால் 'பங்கய முகங்கள் ஆறும் பன்னிரு கரமும் கொண்டு' பாலகன் வளரலானான்.

இந்த ஆறு முகங்களும் சிவபெருமானின் சக்தியோசாதம், வாமதேவம், தத்புருடம், ஈசானம், அகோரம், அதோமுகம் ஆகிய ஆறுமுகங்களைக் குறிக்கும் என்றும் கூறப்படுகின்றது. அதனால் ஆறுமுகன் வேறு யாருமல்லன், சிவபெருமானின் மற்றொரு வடிவமே என்கிறார் கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவமும் உருவு மாகி
  அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
  பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
  கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்(கு)
  உதித்தன் உலகம் உய்ய

என்று பாடுகின்றார் அவர்.

'அருவமும் உருவமாகவும் ஆதியும் அந்தமும் அற்றதாகவும் ஒன்றாகவும் பலவாகவும் பரப்பிரம்மமாகவும் விளங்குகின்ற சோதிப் பிழம்பாகிய சிவபெருமானே கருணை மிக்க ஆறு முகங்களையும் திருக்கரங்கள் பன்னிரண்டையும் கொண்ட திருமேனியைப் பெற்றுக் கொண்டு ஒப்பற்ற அழகிய முருகனாக உலகம் உய்ய உதித்தான்' என்பது இதன் பொருள்.

மூன்றாவதாக முருகனுடைய படைவீடுகள் ஆறு ஆக இருப்பதனாலும் இந்த எண் முக்கியத்துவம் பெறுகின்றது.

இத்தகைய சிறப்புகளினால் கந்தசட்டி விரதமும் ஆறு நாட்கள் அனுட்டிக்கப்படுகின்றன.

சட்டியிலே தான், அதாவது ஐப்பசி மாத அமாவாசையைத் தொடர்ந்து வரும் ஆறாவது நாளிலே தான் முருகப்பெருமான் சூரபத்மனைக் கொன்றார். சூரபத்மன் ஆணவம் முதலாய தீமைகளின் சின்னம். அதனால் ஆணவமும் அநீதியும் அழிந்த நாளாக அடியார்கள் இந்நாளைக் கொண்டாடி ஆறுமுகப் பெருமானிடம் ஆறுமுகமான நன்மைகளை வேண்டி நிற்கின்றனர்.

அருணகிரிநாதர் 'ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்' என்று வேண்டுகின்றார். ஆறுமுகமான பொருள் என்றால் என்ன? உறுதிப் பொருள்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றோடு முருகனைத் தொடர்ந்து வணங்குதற்கான வரம், அவரது கருணையாகிய இரண்டையும் சேர்த்து ஆறு பொருள்களைத் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் வேண்டுவதாகக் கொள்ளலாம். அல்லது எல்லாவற்றுள்ளும் மேலான வீடுபேற்றை மட்டுமே ஆறுமுகமான பொருளாகவும் அவர் கொண்டிருக்கலாம்.

எவ்விதமாயினும் வேண்டுவார்க்கு வேண்டுவன ஈய்வதே முருகப் பெருமானின் கருணை. வேண்டுவனவற்றைச் சாதாரணமாகக் கேட்பதற்கும் நோன்பு இருந்து கேட்பதற்கும் நிறையவே வேறுபாடு உண்டு. நோன்பு அல்லது விரதம் என்றால் உணவை உண்ணாமல் இருப்பது என்று பலர் நினைக்கின்றார்கள். உணவை உண்ணாமல் இருந்து கொண்டு தீய எண்ணங்களில் அல்லது செயல்களில் ஈடுபடுவது விரதமன்று. அதனால் ஆகக்கூடிய பயன்களும் எதுவுமில்லை.

விரதங்கள் உள்ளத்தைத் தூய்மைப் படுத்துவதற்கான வழிமுறைகளில் ஒன்று. உள்ளத்தைக் கோயில் ஆக்கினால் இறைவனே அங்கு எழுந்தருளுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தருளும் இறைவனை இனங்கண்டு பூசித்து வணங்கின் இன்னல்கள் தீரும்; நன்மைகள் வந்து சேரும்.

இவ்விதம் முருகப் பெருமானைக் குறித்து விரதம் இருந்து வேண்டியவற்றைப் பெற்ற ஒருவரைப் பற்றிக் கந்தபுராணம் பேசுகின்றது.

கருவூரைத் தலைநகராகக் கொண்டு முசுகுந்தன் என்னும் மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். இவன் சிறந்தவொரு முருக பக்தன். வசிட்ட முனிவர் மூலம் முருகப் பெருமானுக்கு உரிய விரதங்களையும் அவற்றை அனுட்டிக்கும் விதிமுறைகளையும் அறிந்து கொண்டான்.

வெள்ளிக்கிழமை விரதம், சட்டிவிரதம், கார்த்திகை விரதம் ஆகிய மூன்று விரதங்களையும் பல ஆண்டுகளாக முறைப்படி அனுட்டித்து வந்தான். அவனது பக்திக்குப் பணிந்து முருகப் பெருமான் அவனுக்குக் காட்சி அளித்து, 'பல காலமாக என்னையே நினைந்து பூசிக்கின்றனை. வேண்டியவற்றைக் கேட்பாயாக' என்று அருளினார்.

முசுகுந்தன் மிகவும் மகிழ்ந்து, 'பெருமானே! இப் புவி முழுவதையும் எனது செங்கோல் வழிநடத்த வீரவாகுத் தேவர் முதலிய வீரர்களை நண்புடன் என் படைகளுக்குத் தலைவராகத் தருதல் வேண்டும்' என்று கேட்டான். முருகப் பெருமானும் அவ்விதமே அருளிச் சென்றார்.

வீரவாகுத் தேவர் முருகப் பெருமானுக்குத் தம்பி முறையானவர். சூரனுடன் அவர் செய்த போரில் படைத் தலைவராக இருந்தவர். அத்தகையவரையும் அவரது தம்பிகள் எண்மரையும் பூமியிற் பிறந்து முசுகுந்தன் படைகளுக்குத் துணையாக இருக்கப் பெருமான் பணித்தார் என்றால் விரதங்களின் பலன்களை அளவிட முடியுமா, என்ன?

சேந்தனைக் கந்தனைச் சேங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே

என்று கந்தரலங்காரத்தில் அருணகிரிநாதர் பாடுவது போன்று கந்தப் பெருமானைச் சாந்துணையும் மறவாது விரதத்தை மேற்கொண்டு தாழ்வில்லாத வாழ்வினை வாழ்வோமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கார்த்திகை விரதம்

திருக்கார்த்திகை விரதம் முருகப் பெருமானது அடியார்களால் அனுட்டிக்கப்பட்டு வரும் முக்கியமான ஒரு விரதமாகும். முக்கியமான விரதம் என்று குறிப்பிட்டது, அதனை முறையாக அனுட்டித்தால் அதிக பயன் கிடைக்கும் என்கின்ற காரணத்தினால். . விரதம் இருப்பதுவும் ஒருவகை வைராக்கியந் தான். முருகனை ஏக தெய்வமாகக் கொண்டவர்கள், முருகனைக் குலதெய்வமாக வணங்கி வருகின்றவர்கள் அவசியம் அனுட்டிக்க வேண்டிய விரதம் திருக்கார்த்திகை விரதம்.

அழுத பிள்ளை பால் குடிக்கும் என்பது பழமொழி. பக்தியோடு விரதமிருந்தாற் சித்தி கிடைக்கும் என்பது அனுபவ மொழி. விரதம் என்றால் இடைவிடாது நினைத்தல் என்று பொருள். இடைவிடாது முருகனையே நினைப்பது என்பது இந்த அவசரயுகத்திலே, பல சோலிகள் நிறைந்த வாழ்க்கையிலே, இலகுவான காரியமன்று. மனத்தை ஒருநிலைப்படுத்தல் வேண்டும். மனத்தை முருகனிடம் தூது அனுப்பி அவனை வரவழைக்க வேண்டும். அதுவே உண்மையான விரத பலனாகும். மனத்தை ஒருநிலையில் நிறுத்தி, முருகனை நினைந்து, அவன் பெருமைகளை உணர்ந்து, உருகி வழிபட்டால் அவன் வருவான், அருள் தருவான் என்று விரதம் இருந்து பலன் பெற்றவர்கள் கூறிச் சென்றிருக்கின்றார்கள்; இன்றும் கூறி வருகின்றார்கள்.

முருகப் பெருமானுக்கும் கார்த்திகைக்கும் என்ன தொடர்பு?

முருகப் பெருமானுக்குள்ள பல பெயர்களிலே கார்த்திகேயன் என்பதுவும் ஒன்று. இந்தப் பெயர்க் காரணம் பற்றி அறிந்து கொண்டால் திருக்கார்த்திகை விரதத்தின் மகிமையை விளங்கக் கூடியதாக இருக்கும்.

சூரபன்மனின் கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்கள் சிவபிரானை அடைந்து சூரனைக் கொன்று தம்மைக் காக்குமாறு வேண்டினார்கள். சூரனும் சிவபிரானின் அடியவன் தான். சிவபிரானை நோக்கிக் கடுந்தவம் இருந்து பல வரங்களைப் பெற்றவன். அந்த நல்ல .வரங்களை அவன் தீய செயல்களுக்குப் பயன்படுத்தியதால், அவனைக் கொன்று தேவர்களைக் காத்தருளத் திருவுள்ளங் கொண்டார். எனினும் வரங்களை வழங்கிய தாமே அவனைக் கொல்லுதல் தருமம் ஆகாது என்று கருதித் தமது சக்தி கலந்த ஒரு குழந்தையைப் படைத்து அந்தக் குழந்தையைக் கொண்டு தேவர்களின் குறையைத் தீர்க்கத் துணிந்தார்.

இறைவனின் கண்களிலிருந்து ஆறு தீப்பொறிகள் பிறந்தன. அவற்றை இறைவனின் ஆணைப்படி வாயுவும் அக்கினியும் சுமந்து சென்று கங்கையிற் சேர்த்தார்கள். கங்காதேவி அப்பொறிகளைச் சரவணம் என்னும் பொய்கையிலே சேர்த்தனள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்கையை அடைந்ததும் தீப்பொறிகள் வடிவம் பெற்றன. வேதங்களாலும் அளக்க முடியாத சிவபெருமானின் சக்தி படைத்த அப்பொறிகள் ஆறு திருமுகங்களையும் பன்னிரு திருக்கரங்களையும் கொண்டு திருமுருக வடிவம் பெற்றன. இவ்விதம் சரவணப் பொய்கையில் குமரக்கடவுள் திரு அவதாரம் செய்து தாமரை மலரில் வானுலகும் மண்ணுலகும் போற்ற வீற்றிருந்தார். அப்பொழுது காத்தற் கடவுளாகிய திருமால் கார்த்திகைப் பெண்கள் அறுவரையும் அழைத்துக் குழந்தைக்கு அவர்களுடைய திருமுலைப் பாலையூட்டி வளர்க்குமாறு பணித்தார். குமரப் பெருமானும் அவர்கள் பாலைப் பருகுதற் பொருட்டு ஆறு குழந்தைகளாக மாறி ஆறு பெண்களின் கரங்களிலே தவழ்ந்தார்.

இந்த இடத்திலே இந்தக் கார்த்திகைப் பெண்களைப்பற்றிச் சிறிது சொல்லுதல் வேண்டும்.

கார்த்திகை என்ற சொல் கிருத்தி அல்லது கிருத்திகை என்ற சொல்லில் இருந்து பிறந்தது. கிருத்திகை என்பது அத்திரி, காசிபர், கௌதமர், பரத்துவாசர், விசுவாமித்திரர், சமதக்கினி என்னும் ஆறு முனிவர்களதும் தேவிமாரைக் குறிக்கும் ஒரு பொதுப் பெயர். அக்கினி பகவானின் மனைவியாகிய சுவாகை தனது கணவனைக் காப்பாற்ற மேற்கொண்ட ஒரு சூழ்ச்சி காரணமாக இந்த ஆறு முனிவர்களும் தமது தேவிமாரிளின் நடத்தையைச் சந்தேகிக்க நேர்ந்தது. அதனால் கிருத்திகைப் பெண்கள் கூட்டாக நட்சத்திரமாகி விரதம் இருந்தனர். இவர்களே கார்த்திகைப் பெண்கள். இவர்கள் அறுவரும் முருகப் பெருமானுக்கு முலைப்பால் ஊட்டி விரத பலனைப் பெற்றனர் என்பது புராணம்.

கார்த்திகைப் பெண்களின் கதை எமக்கு இரு விடயங்களை வலியுறுத்துகின்றது. ஒன்று முருகப் பெருமானுக்கு முதன் முதலில் வைக்கப்பட்ட பெயர் கார்த்திகேயன் என்பது. மற்றையது கார்த்திகை நட்சத்திரம் அவருக்கு உகந்த நட்சத்திரம் என்பது.

இந்த இரண்டு விடயங்களையும் சிவபெருமான் திருவாயினாலேயே எமக்கு உணர்த்துகின்றார் கந்தபுராணத்தைப் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார்.

சரவணப் பொய்கையிலிருந்து தமது குழந்தையைக் கைலாயத்துக்கு அழைத்துச் செல்ல உமாதேவியாரோடும் எழுந்தருளினார் சிவபெருமான். உமாதேவியார் ஆறு குழந்தைகளையும் அள்ளி அணைத்து எடுத்த பொழுது குழந்தைகள், ஆறு முகங்களும் பன்னிரு தோள்களும் கொண்ட ஓர் உருவமாகின. குழந்தைக்குத் தமது திருமுலைப் பாலையூட்டினார் உமாதேவியார். பின்னர் குழந்தையோடும் அம்மையாரோடும் சிவபெருமான் திருக்கையிலைக்கு எழுந்தருளும் வேளை, கார்த்திகைப் பெண்கள் வந்து வணங்கி நின்றார்கள்.

அவர்களைப் பார்த்து சிவபெருமான், 'நீங்கள் நம் குழந்தைக்குப் பால் ஊட்டி வளர்த்தமையால் உங்கள் பெயரால் இவன் கார்த்திகேயன் என்றும் அழைக்கப்படுவான். மேலும் கார்த்திகை நட்சத்திர நாளில் விரதம் இருப்பவர்களுக்கு எல்லா நன்மைகளையும் நாம் அருளுவோம்' என்று கூறி விடை கொடுத்தருளினார்.

விரத மகிமை

இது கார்த்திகைப் பெண்களுக்குச் சிவபெருமான் அளித்த பாராட்டு. அந்தப் பாராட்டை அன்று முதலாக உலகம் எல்லாம் சீராட்டி வருகின்றது. கார்த்திகை மாதத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் கார்த்திகை நட்சத்திரம் திருக்கார்த்திகை எனப்படுகின்றது. பரணியிலே முருகப்பெருமானது பெருமைகளைக் கேட்டாவது படித்தாவது உள்ளத்தைத் தயார்ப்படுத்திக் கொண்டு மறுநாள் முறைப்படி கார்த்திகை விரதம் அனுட்டிக்கப்படுகின்றது. இதனை நாரதர் அரிச்சந்திரன், அந்திமான், சந்திமான் முதலியோர் அனுட்டித்துப் பல சித்திகளைப் பெற்றனர். இவர்களுள் நாரத முனிவர் திருக்கார்த்திகை விரதம் இருந்த வரலாறு மிகவும் பிரபல்யமானது.

நாரதர் பிரமதேவரின் புதல்வர். இவர் பிறந்த வேளை மழையில்லாது வாடிய உலகம் மழையைப் பெற்றதால் இவருக்கு நாரதர் என்ற பெயர் உண்டாயிற்று. நாரம் என்றால் மேகம் என்று பொருள். ஆன்மா என்ற பொருளும் அதற்கு உண்டு. நாரதர் சிறுபிள்ளையாக இருந்தபோதே தம்மோடு கூடியிருந்த சிறுவர்களுக்கு நாரம் என்னும் ஆன்ம ஞானத்தை உபதேசித்தமையால் அவருக்கு நாரதர் என்ற பெயர் வந்தது என்ற வரலாறும் உண்டு.

இவர் கந்தப்பெருமானுக்குரிய கார்த்திகை நாள் விரதத்தைப் பன்னிரண்டு ஆண்டுகள் கடைப்பிடித்துப் பல சித்திகளைப் பெற்ற சிறப்புடையவர். வசிட்டர், அத்திரி, காசிபர், கௌதமர், பரத்துவாசர், விசுவாமித்திரர், சமதக்கினி என்று சொல்லப்படுகின்ற சப்த முனிவர்களிலும் மேலான தகைமைகளைப் பெற்றவர். நினைத்த பொழுது உலகங்களில் எவ்விடத்துக்கேனும் செல்லும் ஆற்றலைப் பெற்றவர். இதனால் திரிலோக சஞ்சாரி என்ற பெயரும் இவருக்கு உண்டு. இறந்த காலம், நிகழ், வருங்காலம் ஆகிய முக்கால நிகழ்வுகளையும் உடனுக்குடன் அறியும் ஆற்றலும் படைத்தவர்.

கார்த்திகை விரதத்தின் மகிமை சொல்லில் அடங்காது. இந்த விரதம் மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழ் மக்களால் அனுட்டிக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஒரு விழாவாகவே இதனைக் கொண்டாடி வந்தனர் என்பதனை திருஞானசம்பந்தப் பெருமான் தேவாரம் ஒன்று தெரிவிக்கின்றது.

> வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
> துளக்கில் கபாலீச் சரத்தான் தொல் கார்த்திகைநாள்
> தளத்தேந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்
> விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்

என்பது அவரது தேவாரம்.

திருமயிலாப்பூரில் வாழ்ந்த சிவநேசர் சிவபக்தியிலே சிறந்தவர். திருஞானசம்பந்தருடைய பெருமைகள் பற்றிக் கேள்விப்பட்டு அவர்மீது பெரும் மதிப்புக் கொண்டது மட்டுமல்லாது தம்முடைய மகள் பூம்பாவையை அவருக்கு மணஞ் செய்து கொடுக்கப் போவதாகவும் ஊராருக்குச் சொல்லி வைத்தார். பூம்பாவை ஒரு நாள் பூஞ்சோலையில் பாம்பினால் தீண்டப் பெற்று இறந்து போயினள். சிவநேசர் மகளைப் பிள்ளையாருக்குக் கொடுப்பதென்று முடிவு செய்தபடியால் உடலைத் தகனஞ் செய்து, எலும்பையும் சாம்பலையும் ஒரு குடத்திற் சேமித்து வைத்தார்.

திருஞானசம்பந்தர் திருவொற்றியூருக்கு வந்தபோது சிவநேசர் அங்கு சென்று அவரைத் தரிசித்தார். அடியார்கள் மூலம் அவரது மகள் இறந்ததைக் கேட்ட பிள்ளையார் மயிலாப்பூருக்கு எழுந்தருளினார். அங்குள்ள கபாலீசுவரர் கோயிலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநேசர் சேமித்து வைத்த எலும்புக் குடத்தைக் கொண்டு வரச் செய்து, 'மட்டிட்ட புன்னை' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடிப் பூம்பாவையை உயிர்ப்பித்தருளினார். இப் பதிகத்திலே வருவது தான் 'வளைக்கை மடநல்லார்' என்று தொடங்கும் இத் தேவாரம்.

விளக்கீடு

இத்தேவாரத்திலே, மயிலாப்பூரிலே எழுந்தருளியிருக்கும் கபாலீச்சரத்தானுக்கு இளம் பெண்கள் கார்த்திகைத் திருநாளிலே கொண்டாடும் விளக்கீட்டு விழாவினைக் காணாது போதியோ பூம்பாவாய் என்று பிள்ளையார் பாடுகின்றார்.

திருக்கார்த்திகை பற்றி மூன்று செய்திகளைக் குறிப்பிடுகின்றார் பிள்ளையார். 1. தொல் கார்த்திகை நாள் என்பதனால் இது மிகப் பழங்காலத்திலிருந்தே கொண்டாடப்பட்டு வரும் ஒரு விழா என்பது தெரிகின்றது. 2. 'இளமுலையார் தையலார் கொண்டாடும்' என்கின்ற தொடர் இவ்விழாவைப் பெரிதும் பெண்களே கொண்டாடினர் என்பது தெரிகின்றது. 3. 'விளக்கீடு காணாது போதியோ' என்பதனால் விளக்குகள் கொளுத்திக் கொண்டாடுவது இவ்விழாவின் ஒரு சிறப்பு அம்சம் என்பதுவும் அறியக் கிடக்கின்றது.

திருஞானசம்பந்தப் பெருமான் 'தொல் கார்த்திகை' என்று பாடியதற்கு அமைய கார்த்திகை விளக்கீடு பற்றிய குறிப்புகள் அகநானூறு, கார் நாற்பது போன்ற பழந்தமிழ் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. சீவகசிந்தாமணியும் கார்த்திகை விளக்கீட்டைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

அகநானூற்றிலே வரும் குறிப்புகளிலே ஒன்று சங்க காலத்து அவ்வைப் பிராட்டியார் பாடிய பதினோராவது பாடலில் உளளது. அதன் ஒரு பகுதி இது:

> வானம் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம்
> நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் அங்கட்டு
> இலையில மலர்ந்த முகையில் இலவம்
> கலிகொள் ஆயம்மலிபு தொகுபு எடுத்த
> அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி....
>
> -அகம்.11)

'வானத்திலே ஊர்ந்து செல்லுகின்ற இயல்பினையுடையது ஒளி பொருந்திய சூரியன். அதன் வெப்பம் தீயெனச் சுட்டதால் அழகிய காடு வாடிக் கிடந்தது. அந்தக் காட்டிலே இலையும் முகையும் இல்லாதிருந்த இலவ மரம் பூத்தது. இலவம் அவ்விதம் பூத்திருந்த தன்மை, ஆரவாரிக்கும் மகளிர் கூட்டம் மகிழ்வுடன் கொண்டாடிய அழகிய கார்த்திகை விளக்கீட்டில் நெடிய வரிசையாக வைக்கப்பட்ட விளக்குகள் போலத் தோன்றின' என்பது இதன் பொருள். அஞ்சுடர்- அழகிய விளக்கு. நெடுஞ்சுடர் - நீண்ட வரிசை.

திருக்கார்த்திகையில் விளக்கேற்றி வழிபடும் வழக்கம் இன்றும் தொடர்கின்றது. குமராலய தீபம், சர்வாலய தீபம், வீட்டு விளக்கீடு என மூவகையாக கொண்டாடப்படுகிறது. முருகன் கோயிலில் தீப வரிசைகள் வைத்து வழிபடுதல் **குமராலய தீபம்** எனப்படும். விநாயகராலயம், சிவன் கோயில், அம்மன் கோயில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாக மற்றைய எல்லாக் கோயில்களிலும் விளக்கிட்டு வணங்குதல் **சர்வாலய தீபம்** எனப்படும். வீடுகளில் சட்டி விளக்குகளை வரிசையாக வைத்துக் கொண்டாடுதல் **வீட்டு விளக்கீடு** எனப்படும். குமராலய தீபம் கார்த்திகை நட்சத்திர நாளிலும், சர்வாலய, வீட்டுக் கொண்டாட்டங்கள் அடுத்த நாளும் நடத்தப்படுவது வழக்கமாக இருந்து வருகின்றது.

கார்த்திகை நாளோடு தீபம் தொடர்பு பட்டமைக்கு முக்கிய காரணம் கார்த்திகையின் அதிதேவதை அக்கினி என்பதனாலாகும். இதனால் கார்த்திகைக்கு அழல் என்பது பெயராயிற்று. 'ஆடிய அழல் குட்டத்து ஆரிருள் அரையிரவில்' என்று புறநானூற்றிலும் (புறம் - 229) 'அழல் சேர் குட்டத்து அட்டமி' என்று சிலப்பதிகாரத்திலும் கார்த்திகை அழல் என்று குறிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கின்றோம்.

மற்றுமொரு பிரதான காரணம் பழந்தமிழ் மக்களின் அக்கினி வழிபாடாகும். அக்கினிப் பிழம்பாகிய சூரியன் பெரிதும் போற்றப்பட்டான். சிலப்பதிகாரத்தில் மங்கல வாழ்த்துப் பாடலில் 'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என்று வருவது சூரிய வழிபாட்டின் வெளிப்பாடேயாகும். சூரிய வழிபாடு இன்றும் தொடர்கின்றது. சௌர சமயத்தினர் சூரியனையே முழு முதற் கடவுளாக வணங்குகின்றனர். சூரியனைக் குலக் குறியீடாகவும் நம் முன்னோர் கொண்டிருந்தனர். சோழர் குலம் சூரிய குலம் என்று வழங்கப்படுகின்றது. வேதங்களிலும், வேதங்கள் வலியுறுத்தும் வேள்விகளிலும் அக்கினி முக்கியத்துவம் பெறுகின்றது.

பிற்காலத்தில் அக்கினி சிவபெருமானின் சக்திகளில் ஒன்று படைக்கருவிகளில் ஒன்று, என்னும் தத்துவம் வளர்ந்தோங்கியது. சிவபெருமான் ஒளி வடிவானவன், சோதி வடிவானவன், சுடர் வடிவானவன் என்கின்ற கருத்துகள் வலுப்பெற்றன.

சோதி அந்தம் ஆயினும்
சோதியுள் ஒரு சோதியானும்

என்று சிவபெருமானைப் போற்றுகின்றார் திருஞானசம்பந்தப் பெருமான்.

திருவே என் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவே.....

என்று உருகுகின்றார் அப்பர் சுவாமிகள்.

சோதியே சுடரே சூழொளி விளக்கே

என்று அழைக்கின்றார் மணிவாசகர்.

சிவம் என்னும் பெயர் சிவப்பு என்ற சொல்லில் இருந்து பிறந்தது. தீ சிவப்பு நிறமானது. சிவபெருமான் சோதி வடிவானவன். தீ அருவமாகவும் உருவமாகவும் இருப்பது போல சிவபெருமானும் அருவமாகவும் உருவமாகவும் விளங்குகின்றார். தீ பல வடிவங்கள் ஆதல் போல் சிவனும் பல வடிவங்களாக - மூர்த்தங்களாகத் திகழ்கின்றார். நெருப்பு அழுக்குகளைச் சுட்டெரிப்பது போல இறைவனும் ஆன்மாக்களின் மலங்களை நீக்குகின்றான் என்பன போன்ற தத்துவக் கருத்துகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனுக்கும் அக்கினிக்கும் உள்ள தொடர்பை நன்கு விளக்குகின்றன. கார்த்திகை விளக்கீட்டில் அஞ்ஞானமாகிய இருளை அகற்றி மெய்ஞ்ஞானமாகிய ஒளியை ஏற்ற வேண்டும் என்னும் குறியீட்டுத் தத்துவமும் பொதிந்திருக்கின்றது. அப்பர் சுவாமிகள் இக் கருத்தை மேலும் விளக்குகின்றார்.

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே.

அஞ்ஞான இருளை அகற்றும் விரதம்

உடம்பு தான் மனை. உள்ளந்தான் தகளி. உணர்வுதான் நெய். உயிர்தான் திரி. ஞானமே தீ. உடலாகிய வீட்டிலே சிவமான பொருள் இருக்கின்றது. ஆனால் அறியாமை என்கின்ற இருள் அதனை மறைத்திருக்கின்றது. இருளை அகற்ற ஞான விளக்கை எப்படி ஏற்ற வேண்டும்? 'உண்மையாகிய அகலிலே, அதாவது விளக்குச் சட்டியிலே பசு ஞானம் எனப்படும் நெய்யை விட்டு, உயிர் என்கின்ற திரியிலே சிவஞானமாகிய தீயைப் பற்றவைக்க வேண்டும்' என்கின்றார் அப்பர் பெருமான். அவ்விதம் செய்தால் அந்த வெளிச்சத்தில் சிவப்பொருளைக் காணலாம்.

இவ்விதம் யோக முறையால் சிவப்பொருளைக் காண முடியாதவர்கள் திருவிளக்கிடுதல் ஆகிய சரியை வழிபாட்டினால் திருவருளைப் பெற முடியும். கணம்புல்ல நாயனார், கலிய நாயனார், நமிநந்தி அடிகள் ஆகியோர் திருவிளக்கிடும் சரியைத் தொண்டு செய்து இறையருள் பெற்ற வரலாற்றைத் திருத்தொண்டர் புராணம் எடுத்துக் காட்டுகின்றது.

அவர்கள் வழியிலே நாமும் கார்த்திகைத் திருநாளிலே முருகப் பெருமானை நினைந்து, விரதமிருந்து விளக்கிட்டு வணங்கி எமது உள்ளங்களிலே ஒளியை ஏற்றுவோமாக! எமது ஒளி மயமான வாழ்வுக்கு மட்டுமல்லாது எமது இனத்தின் நல்வாழ்வுக்காவும் உலக சமாதானத்துக்காகவும் விளக்குகளை ஏற்றுவோம்.

ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததொ ரானந்தத் தேனே அநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வா முகம் ஆறுடைத் தேசிகனே.

-கந்தரலங்காரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

மார்கழி மாதம் மார்கழி நீராடலுக்கும் திருவாசக விழாக்களுக்கும் பெயர் பெற்றது. மிகவும் முக்கியமாக மார்கழித் திருவாதிரைக்குப் பத்து நாட்களுக்கு முன்பிருந்து திருவாதிரை வரையான காலம் திருவெம்பாவைக் காலம் என்றே அழைக்கப்படுகின்றது. இக்காலம் கன்னிப் பெண்களுக்குரிய நோன்புக் காலம். அதனால் **பாவை நோன்பு** அல்லது **மார்கழி நோன்பு** என்றும் இது பெயர் பெறும். கன்னிப் பெண்கள் அதிகாலையில் எழுந்து நீராடி தமக்கு நல்ல கணவரைத் தந்தருளுமாறு இறைவனை வணங்குவதால் இது பாவை நோன்பு எனப்படுகின்றது.

பாவை நோன்பு மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழர்கள் மத்தியில் நிலவி வருகின்றது. சங்க நூல்களில் தை நீராடல் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. எட்டுத் தொகையுள் ஒன்றாகிய நற்றிணை நானூற்றில் 22வது பாடலில்

வான்பெயல் நனைந்த புறத்த நோன்பியர்
தையூண் இருக்கையில் தோன்று நாடன்

என வரும் அடிகள் தை நோன்பு பற்றி குறிப்பிடுகின்றன. நோன்பியர் தையூண் இருக்கை' என்பதற்கு 'நோன்புடையார் தைத்திங்களில் நீராடி நோன்பிருந்து அதன் முடிவில் அன்று ஆக்கப் பெற்ற உணவை உண்ண இருத்தல்' என்று பொருள். தைநீராடலும் நோன்பும் காலப்போக்கில் மார்கழி நீராடல் ஆகவும் மார்கழி நோன்பாகவும் மாறிவிட்டன.

இந்த மாற்றத்துக்கு ஒரு முக்கிய காரணம் திருவாதிரை நட்சத்திரமாக இருக்கலாம். ஆரியர்களுடைய வருகையைத் தொடர்ந்து வேதாகம அறிவும் சாத்திர சம்பிரதாயங்களும் தமிழர் மத்தியில் பரவலாயின. சங்கிர சங்கிதை என்னும் வடமொழி நூலில் உபதேச காண்டத்தில் திருவாதிரை விரதத்தின் சிறப்பு விளக்கப்பட்டுள்ளது.

நடராசப் பெருமான் தமது நடனத்தை பதஞ்சலிக்கும் வியாக்கிரபாதருக்கும் மார்கழித் திருவாதிரை நாளன்றே ஆடிக் காட்டினார் என்று நம்பப்படுகின்றது. நடராசப் பெருமானுடைய நடனத்திலிருந்தே நாதம் பிறக்கின்றது. இதனால் அவருக்கு நாதன் என்ற பெயரும் உண்டாயிற்று. நாதத்திலிருந்தே ஓசை ஒலிகள் பிறந்தன. 'ஓம்' என்னும் ஓங்கார ஓசையும் இவற்றுள் ஒன்று. 'ஓம்' என்பது பிரணவ மந்திரம். இதுவே வேதங்களுக்கெல்லாம் மூல மந்திரம் ஆகும். வேதங்கள் கலைகள் உலக இயக்கம் என்பவற்றுக்கெல்லாம் நடராசப் பெருமானின் நடனமே காரணமாகும். சுருக்கமாகச் சொன்னால் அண்ட சராசரங்கள் ஒழுங்காக இயங்குவதற்கு வேண்டிய சக்தி சிவபெருமானின் நடனத்திலிருந்தே பிறக்கின்றது என்பது சைவசமயத்தவரின் நம்பிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய பூரணை நாள் சிவபெருமானுக்கு மிகவும் உகந்த நாளாகக் கருதப்பட்டு தை நோன்பு மார்கழிக்கு மாற்றப்பட்டிருக்க வேண்டும். சிவபெருமானுக்கு உகந்த திருவாதிரையில் விரதம் இருப்பது சிறப்புடையதாகவும், நல்ல பயன்களுக்குரியதாகவும் கருதப்பட்டது.

மார்கழித் திருவாதிரையில் தில்லையில் நடனமாடிக் காட்டிய சிவபெருமானுக்கு **ஆதிரையான்** என்ற பெயரும் உண்டாயிற்று. தில்லையில் நடராசப் பெருமானுக்கு இந்நாளில் சிறப்புத் திருவிழாக்களோடு கூடிய வழிபாடுகள் நடைபெறும். நோன்பிருக்கும் சைவர்கள் தில்லைக்குச் சென்று 'ஆருத்திரா தரிசனம்' செய்வதைப் பெரும் பேறாகக் கருதுவர். **ஆருத்திரா** என்பது ஆதிரைக்கு மற்றொரு பெயர்.

இந்தத் திருவாதிரை நோன்பை வைத்தே மணிவாசகர் திருவெம்பாவையையும், ஆண்டாள் திருப்பாவையையும் பாடியருளியுள்ளனர். ஆண்டாள் பெருமாளால் ஆட்கொள்ளப்பட்டவர். சூடிக் கொடுத்த நாச்சியார் என வைணவர்களால் போற்றப்படுபவர். அவர் பாவை நோன்பை பாடியிருப்பதிலிருந்து வைணவத் தமிழர்களும் இந்த நோன்பை அனுட்டித்து வந்தனர் என்பது தெரிகின்றது. சைவ மக்களுக்குத் திருவெம்பாவை போல் வைணவ சமயத்தவருக்குத் திருப்பாவை விளங்குகின்றது.

மணிவாசகர் திருவெம்பாவையைத் திருவண்ணாமலையில் இருந்த காலத்தில் பாடியருளினார். அங்கு அவர் எழுந்தருளிய காலம் மார்கழி மாதம். கார்த்திகை, மார்கழி, தை மாதங்கள் தமிழ் நாட்டுக்கு மழைக்காலம். எங்கும் பசுமை நிறைந்து, சோலைகள் வளர்ந்து, வளங்கள் பொலிந்து விளங்கும் காலம். திருவெண்ணாமலையும் பசுமையும் குளிர்ச்சியும் பொருந்திப் பொலிந்திருந்தது. தடாகங்கள் நீர் நிரம்பப் பெற்றுத் தாமரை, குவளை ஆகிய மலர்களைக் கொண்டு அழகுடன் விளங்கின. இத்தகைய தடாகங்களில் மார்கழி நீராடுவதற்காக இளம் பெண்கள் அதிகாலையிலே எழுந்து செல்வதை மணிவாசகப் பெருமான் அவதானித்தார். அவர்கள் வீடு வீடாகச் சென்று தமது தோழியர்ளையும் எழுப்பிக் கொண்டும் இறைவன் புகழைப் பாடிக் கொண்டும் சென்ற காட்சியையும் அவர் கவனித்தார்.

மணிவாசகர் திருப்பெருந்துறையில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர். ஆவணி மூலத்திலே இறைவர் நரியைப் பரியாக்கிய திருவிளையாடலையும் அதன் பின் வைகை ஆற்றங்கரையில் மண்சுமந்த திருவையாடலையும் நினைந்து நினைந்து உருகிப் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவண்ணாமலைக்கு வந்தவர். அவரது சிவனடியே சிந்திக்கும் சிவஞானம் எல்லாவற்றிலும் சிவனையே கண்டது.

துயில் நீங்கி எழும் பெண்கள் ஆன்மாக்களாகவும் அவர்கள் நீராடும் தடாகம் ஆன்மாக்கள் மலங்களைக் கழுவும் திருவருட் குளமாகவும் அவருக்குத் தெரிகின்றன. ஈற்றில் நீராடி விட்டுப் பெண்கள் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்குதல் மலங்கள் நீக்கம் பெற்ற ஆன்மாக்கள் பதியை அடைவதாகக் காண்கின்றார். இவ்விதம் இறைவழிபாட்டோடு கூடிய ஒரு சமூக நிகழ்ச்சியை பதி, பசு, பாச தத்துவமாக்கி திருவெம்பாவையைப் பாடியிருக்கிறார் மணிவாசகர்.

திருவெம்பாவை 20 பாடல்களைக் கொண்டது. கொச்சகக் கலிப்பா என்னும் செய்யுள் வடிவிலே அழகான தமிழில் ஒவ்வொரு செய்யுளும் 'ஏல் ஓம் எம்பாவாய்' என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும் வகையிலே பாடப்பட்டுள்ளது. முதல் எட்டுப் பாடல்கள் தோழியரைத் துயில் எழுப்பும் வகையிலும், அடுத்த மூன்று பாடல்கள் இறைவனைப் புகழ்ந்த வண்ணம் அவர்கள் எல்லோரும் தடாகத்துக்குச் செல்லும் பாவனையிலும் 12ம் பாடல் முதல் 18ம் பாடல் வரை இறைவனைப் பலவாறு புகழ்ந்தும் மழை வேண்டியும் நீராடும் பாவனையிலும் அமைந்துள்ளன. இறுதி இரண்டு பாடல்களும் பெண்கள் கோயில் அடைந்து கற்பு நிலை தவறாத தமது உறுதிப்பாட்டினைக் கூறி இறைவனை வாழ்த்துவதாக உள்ளன.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய் மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேஎம் தோழி பரிசேலோ ரெம்பாவாய்

என்று தொடங்குகிறது திருவெம்பாவை முதலாவது பாடல்.

முன்னதாகவே துயில் விட்டெழுந்த இரு பெண்கள் தமது தோழி ஒருத்தியின் வீட்டு வாசலுக்குச் சென்று அவளை எழுப்புகின்றார்கள். 'அகன்ற கண்கள் உடைய பெண்ணே!' முதலும் முடிவும் அற்ற பரஞ்சோதியின் புகழை யாம் பாடிக் கொண்டு வருகின்றோம். நீ அதைக் கேட்டு எழுந்திராமல் இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கிறாயே. உனது காது என்ன செவிடா?' என்று ஒரு பெண் கேட்கிறாள். அதற்கும் அவள் எழுந்திருக்கவில்லை. அவளோடு கூட வந்த மற்றைய பெண் 'மாதேவனின் நெடிய திருவடிகளை நாம் வாழ்த்திய வாழ்த்து ஒலிகளை வீதியில் கேட்ட பொழுது ஒருவள் விம்மி அழுது தன்னை மறந்து படுக்கையினின்றும் விழுந்து நிலைகுலைந்து கிடக்கின்றாள். அவள் அன்பை என்ன என்பது. அவளின் இயல்பு இப்படியாக இருக்க, நீ இன்னும் தூங்குகிறாயே. உன்னை என்ன சொல்லி அழைப்பது. எமது தோழியே உனது துயிலை விட்டு எழு. இறைவனின் பெருமையை உணர்ந்து அவனது அன்பைப் பெற விரைந்து வா' என்று சொல்லி எழுப்புகின்றாள்.

பதி, பசு, பாசம் என்பன சைவ சமயத்தின் முப்பொருள் உண்மைகள். அந்த உண்மைகளை மறைமுகமாக உருவகமாக முதற் பாடலிலேயே வைத்து விடுகிறார் மணிவாசகர்.

'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி' பதி. கன்னிப் பெண்கள் பசு. உறக்கம் பாசம். பாசம் இங்கே மலங்களைக் குறிக்கின்றன. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களுக்குள்ளே ஆணவம் ஆன்மாவை அறியாமையாகிய இருளிலே வைத்திருக்கும் இயல்புடையது. ஆன்மா ஆணவ இருளிற் கட்டுண்டிருக்கும் நிலையே உறக்கம். ஆணவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுபடும் நிலையே துயில் நீங்கி எழுதல். மலங்களின் ஆதிக்கம் நீங்கிய தன்மை மலபரிபாகம் எனப்படும். மலபரிபாகம் பெற்ற ஆன்மாக்களே முன்னதாக துயில் விட்டு எழுந்த கன்னிப் பெண்கள். உறங்கிக் கொண்டிருக்கும் பெண்கள் மலபரிபாகம் அடையாத ஆன்மாக்கள். மலபரிபாகம் பெற்ற ஆன்மாக்களை பக்குவமடைந்த ஆன்மாக்கள் என்றும் கூறப்படும். பக்குவம் பெற்றவர்கள் பக்குவம் பெறாதவர்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவப்படுத்தி இறையருளில் தோய்வித்தலே மார்கழி நீராடலின் உட்பொருளாகக் காண்கின்றார் மணிவாசகப் பெருமான்.

இவ்விதம் பக்குவம் பெற்ற ஆன்மாக்கள் மற்றைய ஆன்மாக்களை பக்குவப்படுத்தும் முயற்சி அதாவது துயிலெழுப்பும் முயற்சி, எட்டுப் பாடல்களிலே தொடர்கிறது. ஒன்பதாம் பத்தாம், பதினொராம் பாடல்கள் துயிலெழுந்த எல்லோரும் சேர்ந்து பாடுவதாக உள்ளன. ஒன்பதாவது பாடலில் நோன்பின் முக்கியமான நோக்கம் பேசப்படுகிறது.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாழ் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்.

நல்ல கணவரைப் பெற வேண்டும் என்னும் மனக் கருத்துடனேயே கன்னிப் பெண்கள் மார்கழி நோன்பை, அதாவது திருவாதிரை நோன்பை அனுட்டிக்கின்றனர். அந்தக் கருத்தை அவர்கள் இறைவனுக்குச் சொல்லி வேண்டுவதுபோல் இப் பாடல் அமைந்திருக்கின்றது.

பழைமைக்குப் பழைமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் விளங்குகின்ற இறைவனே! நாம் உன்னைத் தலைவராகப் பெற்றோம். அதனால் உன்னடியார்கள் தாள்களையும் பணிவோம். அவர்களுக்கே நாம் உரிமையாவோம். அத்தகையவரே எமக்குக் கணவராக வருவதை விரும்புகின்றோம். அவர் விரும்பிச் சொல்வதைப் பணிவுடன் கேட்டு அதன்படி நடப்போம். எம்பெருமானே! இப்படி நல்ல கணவர் கிடைக்குமாறு நீ அருள் புரிந்தால் எங்களுக்கு எந்தக் குறையும் இல்லை' என்று பெண்கள் இறைவனை வேண்டுகிறார்கள்.

இந்த வேண்டுதல் இறைவனை அடைவதற்கு நல்லதொரு ஏணியைப் போன்றது. சிவனடியார்களைத் திருமணம் செய்தால் சிவசம்பந்தம் அதிகரிக்கும். கணவன்மாருக்குச் செய்யும் தொண்டு கடவுளுக்குச் செய்யும் தொண்டாகப் பரிமளிக்கும். இதனால் மலபரிபாகத்தை முழுமையாக அடைய வாய்ப்பு ஏற்படும்.

கணவன்மார்கள் இறைவனுடைய அம்சத்தைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்னும் கருத்து மாணிக்கவாசகருடையது. அத்தகையவர்களுக்கு ஆட்படுதலே இறையருளை உணர்வதற்குத் தகுந்த வழி. இது அவரது அனுபவ அறிவு. மாணிக்கவாசகராகிய ஆன்மாவை இறைவன் குரு வடிவில் வந்து ஆட்கொண்டான். இந்தப் பெண்களை இறைவன் கணவன்மார் வடிவில் வந்து ஆட்கொள்ள வேண்டும் என்னும் அவரது விருப்பமே இப் பாடலில் வெளிப்பட்டு இருக்கின்றது.

இவ்விதம் வேண்டியும் இறைவனை வாழ்த்தியும் பெண்கள் பூத்திகழும் பொய்கையில் இறங்கி நீராடுகிறார்கள். அந்தப் பொய்கையும் ஒரு திருவருட் பொய்கையாகவே மணிவாசகருக்குத் தெரிகின்றது. காரணங்கள் காட்டி அதனை எமக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரூபிக்கின்றார். எல்லாமே சிவம் என்றிருப்பவருக்கு இது ஒரு கடினமான காரியமா! என்ன?

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கும் மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கையப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்.

அழகான தமிழ், அருமையான கற்பனை உண்மையான அனுபவம், உயர்வான தத்துவம் அனைத்தும் கலந்த அற்புதமான ஒரு பாடல் இது. மணிவாசகர் சிறந்த சிவபக்தர் மட்டுமல்லர். தமிழ் அறிந்த பெரிய புலவரும் கூட. அவர் பாடிய திருவாசகத்தில் அன்பு மட்டும் பெருக்கெடுக்கவில்லை. கூடவே தமிழும் பெருக்கெடுக்கின்றது. இந்தப் பாடலில் அவரே பெண்களாக மாறிவிடுகின்ற ஒரு தெய்வீக அனுபவத்தைப் பார்க்கின்றோம்.

தடாகத்திலே பூத்திருக்கின்ற அழகிய கருங்குவளை மலர் உமாதேவியையும் செந்தாமரைகள் சிவபெருமானையும் அவருக்கு நினைவூட்டுகின்றன. வெள்ளைக் கொக்குகள் திருநீற்றைப் போலவும், நீர்ப் பாம்புகள் பெருமானின் பாம்பு அணிகள் போலவும் இருக்கின்றன. நீராடுகின்றவர்கள் திருவருளாலே மலங்களைக் கழுவ முயல்பவர்களைப் போல் இருக்கிறார்கள். இத்தகைய காரணங்களினாலே தடாகத்தை 'எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த பொங்கும் மடு' என்கின்றார் மணிவாசகப் பெருமான்.

பதினாறாவது பாடல் தனித்து நிற்கின்றது. பன்னிரண்டாம் பாடல் முதல் பதினெட்டாம் பாடல் வரையானன ஏழு பாடல்களும் பெண்கள் நீராடிக் கொண்டு பாடும் பாடல்கள். அவற்றுள் ஆறு பாடல்களும் 'ஆடு ஏலோரெம்பாவாய்' என்று முடிய அவற்றுக்கு இடையில் பதினாறாவது பாடல் அவ்வாறு முடியாது. 'ஏலோரெம்பாவாய்' என்று முடிகின்றது.

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை ஏலோர் எம்பாவாய்.

குளித்துக் கொண்டிருந்த பெண்கள் குளியலைச் சற்று நிறுத்திப் பாடியதாக இப் பாடலைக் கொள்ளுதல் வேண்டும்.

'கடற் பரப்பை அணுகி அதிலிருந்து எழுந்த நீராவியை உட்கொண்டு மேலே எழுந்துள்ள மேகமே! எம்மை ஆண்டு கொண்டருளிய எம்பிராட்டியாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையம்மையின் வண்ணம் போன்று கருநீல நிறத்தைக் கொண்டிருக்கின்றாய். அவளது சிற்றிடை போன்று மின்னி மின்னிப் பொலிகின்றாய். எம்பிராட்டி திருவடிகளில் அணிந்துள்ள பொன்னாலாகிய அழகிய சிலம்பின் ஒலியைப் போல இடி முழக்கம் செய்கின்றாய். அவளது அழகிய புருவங்களைப் போன்று வானவில்லைக் காட்டுகின்றாய். எங்களையெல்லாம் ஆண்டு தனது பிள்ளைகளாகக் கொண்டிருக்கின்ற எமது தாயாகிய உமையம்மையிடமிருந்து பிரியாது என்றும் மாதொரு பாகனாக இருக்கின்ற சிவபெருமானுடைய அடியவர்களுக்கும் எங்களுக்கும் அவளே எதிர்ப்பட்டு முந்திச் சுரக்கின்ற இன்னருளைப் போல நீ மழையைப் பொழிவாயாக' என்று எல்லோரும் சேர்ந்து முகிலுக்கு விண்ணப்பிக்கின்றார்கள்.

இரு விடயங்களை இந்தப் பாடலிலே ஒன்றாக்கி இருக்கிறார் மணிவாசகர். முதலாவதாக எல்லோருக்கும் நன்மை தரும் மழை வேண்டிப் பாடுகிறார்கள் பெண்கள். இது பாவை நோன்பு. 'நல்ல கணவன்மார் கிடைக்க வேண்டும்' என்னும் நோக்கத்துடன் அவர்களோடு சேர்ந்து இல்லறம் நடத்தவும், தான தருமங்கள் செய்யவும் உதவியாக இருக்கும் மழையும் வேண்டும் என்னும் வணக்கப்பாட்டை முன்வைக்கின்றது. மேலும் உலகத்தவர் நல்வாழ்வுக்கும் மழை அவசியம். கடவுள் வழிபாட்டுக்கும் மழை வேண்டும்.

சிறப்பொடு பூசனை செலலாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

என்கின்றார் திருவள்ளுவர். 'மழை பெய்யாது வானம் வறண்டு விடுமானால் இவ்வுலகத்தில் தேவர்களுக்குச் செய்யப்படும் விழாவும் பூசைகளும் நடைபெற மாட்டா' என்பது இக் குறளின் பொருள்.

கூடிக் குளித்துக் கொண்டிருந்த பெண்களுக்கு இருந்தாற் போல் மழை ஞாபகம் எப்படி வந்தது? பூத்திகழும் பொய்கையிலே நீர் பொங்கி வழிகின்றது. அந்தக் குளிர்ந்த நீரிலே அதிகாலையிலே 'காதார் குழையாட பைம்பூண் கலனாட கூந்தல்கள் ஆட வண்டின் குழாமாட நீராடுவது அவர்களுக்கு அளவில்லாத மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்த மகிழ்ச்சிக்குக் காரணம் மழைதான் என்னும் எண்ணம் மேலிட அவர்கள் மழையை வேண்டிப் பாடினார்கள் என்று கொள்ளலாம். அல்லது அவர்கள் குளித்துக் கொண்டிருக்கையில் மழை முகில் வானத்தில் கூடி இடி முழக்கம் செய்திருக்க வேண்டும. இதுவே பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. ஏனெனில் பாடலில் இடி முழக்கம் பற்றிய குறிப்புகள் வருகின்றன.

வானவில் பற்றிய குறிப்பு சூரியன் உதயமாகி விட்டதை உணர்த்துகின்றது. ஏனெனில் சூரிய கதிர்கள் இன்றி வானவில் தோன்ற முடியாது. அதிகாலையில் எழுந்த பெண்கள் தோழிமார்களை எழுப்பிக் கொண்டு தடாகத்தை அடைவதற்கிடையில் பொழுது புலர்ந்திருக்கலாம். இடி முழக்கம், வானவில் ஆகிய இவை எதுவும் இல்லாமலே மழை முகிலைக் கண்ட அளவில் முந்திய அனுபவங்களை வைத்துக் கொண்டு பாடியதாகவும் கொள்ளலாம்.

இந்த இடத்திலே சொற்பொருள் விளக்கம் ஒன்றையும் தருதல் வேண்டும். 'முன்னிக் கடல்' என்பதற்குப் பலர் முன்பு இக்கடல் என்று பொருள் சொல்கிறார்கள். அவ்விதம் கொள்ளின் 'இக்கடல் எக்கடல்?' என்னும் கேள்விக்கு இடம் அளிக்கின்றது. பெண்கள் நீராடிக் கொண்டிருப்பது கருங்குவளையும் செந்தாமரையும் நிறைந்த அழகிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடாகம், கடலன்று. எனவே இக் கடல் என்னும் சுட்டுப் பொருள் பொருந்துவதாக இல்லை. அதனால் முன் இக் கடல் என்று சொல்லைப் பிரியாது'முன்னி' என்பதை ஒரு சொல்லாகவே கொண்டு கடலை நெருங்குதல் அல்லது அணுகுதல் என்று பொருள் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

இனி, இந்தப் பாடல் கொண்டிருக்கும் இரண்டாவது பொருள் பற்றிச் சிந்திப்போம். இரண்டாவது பொருள் என்று ஒரு விளக்க ஒழுங்கு கருதியே கூறப்பட்டது.. மற்றும்படி மணிவாசகரைப்
பொறுத்தவரை அதுவே உரிப் பொருள் என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அந்தப் பொருள் உமையம்மையின் - சத்தியின் திருவருள். சத்தியை வியத்தலே திருவெம்பாவையின் உள்ளுறைப் பொருள் என்பது சைவசித்தாந்தச் சான்றோர் கருத்தாகும். அதனால் 'சத்தியை வியத்தல்' என்று திருவெம்பாவைப் பாடல்களுக்குத் தலைப்பும் இட்டிருக்கின்றார்கள்.

சத்தி சிவத்தோடு வேறுபாடின்றி இருக்கும் பொழுது பராசத்தி எனப்படுவர். பராசத்தி காரியோன்முகியாகும் போது தமது சத்தியில் ஆயிரத்தொரு கூறாக ஆதிசத்தியையும் அந்த ஆதிசத்தி வழியாக இச்சா சத்தி, ஞானாசத்தி, கிரியா சத்தியையும் தோற்றுவிப்பர். இச்சத்தி எல்லையற்ற ஆன்மாக்களைப் படைத்தும் வளர்த்தும் மலபரிபாகத்தில் சிவபெருமானின் திருவடியாகிய பேரின்பத்தைப் பெறுவதற்கு ஆதாரமாக இருப்பதால் உலக மாதா என அழைக்கப்படுவர். எனவே உலக மாதா ஆன்மாக்களிடம் வைத்திருக்கும் கருணையினாலே பராசத்தி, ஆதிசத்தி, இச்சா சத்தி, ஞானாசத்தி, கிரியாசத்தியாகி இறைவனின் ஐந்தொழில்களுக்கு உதவுகின்றாள். அந்தச் சத்தியின் கருணையை வியந்து அவளது இன்னருளைப் போன்று மழை பெய்ய வேண்டும் என்று பெண்கள் வேண்டுகின்றார்கள். பராசத்தி கருணையே வடிவானவள்.

> ஆரணமும் உலகேழும் ஈன்றருளி அனைத்தினுக்கும்
> காரணமாய் வளம்பெருகு கருணைதிரு வடிவான
> சீரணங்கு

என்று திருத்தொண்டர் புராணத்திலே பாடுகின்றார் சேக்கிழார் பெருமான். இத்தகைய சீரணங்கின் கருணை மழையினாலே உலகங்கள் வாழ்கின்றன. அந்தக் கருணை மழையிலே தோய்ந்தால் இவ்வுலகச் சிறப்பும் அவ்வுலகப் பதவியும் கிடைக்கும். மணிவாசகப் பெருமானும் இச் சத்தி தத்துவத்தையே தமது திருவெம்பாவைப் பாடலுக்குப் பொருளாகக் கொண்டுள்ளார். 'எம்பாவாய்' என்ற தொடர் சத்தியை குறிக்கும் என்றும் சில அறிஞர்கள் கூறுவர்.

பதினெட்டாவது பாடல் அண்ணாமலையானுக்குரிய சிறப்புப் பாடலாகவுள்ளது. இதுவரை நேரமும் சிவபெருமானைப் பொதுப்படையாகப் பாடித் துதித்து நீராடிய பெண்கள் இப் பாடலில் தமது ஊரிலே எழுந்தருளியிருக்கும் சிவனுக்கு விசேட வணக்கம் செலுத்துவதைப் பார்க்கின்றோம்.

> அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
> விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
> கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
> தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல் பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

திருவண்ணாமலைச் சிவன் கோயில் தமிழ் நாட்டில் உள்ள மிகப் பெரிய கோயில்களில் ஒன்று. பஞ்சபூத தலங்களில் ஒன்றாகவும் இது போற்றப்படுகின்றது. காஞ்சிபுரத்தில் பிருதிவிலிங்கமும் (பிருதிவி - பூமி) திருவானைக்காவில் அப்புலிங்கமும் (அப்பு - நீர்) திருவண்ணாமலையில் தேயுலிங்கமும் (தேயு - நெருப்பு) திருக்காளத்தியில் வாயுலிங்கமும், சிதம்பரத்தில் ஆகாயலிங்கமும் உள்ளன.

திருவண்ணாமலையிலே முன்பு ஒரு காலத்திற் பிரம தேவருக்கும் திருமாலுக்கும் முன்பாக சிவபெருமான் அடிமுடி காணவொண்ணாத பெரும் சோதி மலையாகத் தோன்றினார் என்பது புராண வரலாறு. இதனால் நெருப்பு இத்தலத்துடன் தொடர்பு பெறலாயிற்று. கோயில் வீதியில் தலவிருட்சமாக மகிழ மரம் விசாலமாக வளர்ந்துள்ளது. பல கோபுரங்களைக் கொண்ட இக்கோயிலை முழுமையாகத் தரிசனம் செய்ய விரும்பும் அடியார்கள் எட்டு மைல் தூரமுள்ள மலையைச் சுற்றி வலம் வந்தும் மலை உச்சியில் ஏறியும் வழிபடுவர்.

கோயிலைச் சுற்றி, ஆங்காங்கு சோலைகள், தடாகங்கள் காணப்படினும் மழைப் பருவத்தைத் தவிர மிகுதிக் காலத்தில் திருவண்ணாமலையில் வெயில் அதிகம். எனினும் அடியார்கள் வெப்பத்தைப் பொருட்படுத்துவதில்லை. மணிவாசகருக்குத் திருவண்ணாமலை வெப்பம் இறைவனுடைய திருவடி வெளிச்சம் போலத் தெரிகின்றது.

திருவண்ணாமலையில் வீற்றிருக்கும் அருணாசலேசுவரரின் திருவடிக் கமலத்தைத் தேவர்கள் வந்து வணங்குகின்றார்கள். அவ்விதம் வணங்குகின்ற பொழுது அவர்களது மகுடங்களில் உள்ள நவமணிகள் இறைவன் திருவடி வெளிச்சத்தில் ஒளியிழந்து விடுவதைப் போலக் கண்ணான கதிரவன் உதயத்தால் இருள் நீங்கி விடுகின்றது என்கிறார் மணிவாசகர். மனித நிகழ்ச்சிகளை மட்டுமல்லாது இயற்கை நிகழ்வையும் இறையருளோடு கலந்து காண்கின்றது 'எல்லாமே சிவமயமான' அவரது உள்ளம்.

எல்லாமே சிவமயமான உள்ளம் சிவனன்றி வேறெப் பொருளையும் காணாது. இந்த நிலைக்கு நீராடுகின்ற பெண்கள் இன்னும் வரவில்லை. அவர்களையும் 'கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க' என்று அடுத்த பாடலிற் பாட வைக்கின்றார் - இறைவனை வேண்ட வைக்கின்றார் மணிவாசகர்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம் கேள்
எங்கொங்கை நின் அன்பர் அல்லாதார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழின் என் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராடலை முடித்துக் கொண்டு அண்ணாமலையான் சந்நிதானத்தை அடைந்து கன்னிப் பெண்கள் வேண்டுகின்றார்கள். மார்கழி நோன்பின் தலையாய நோக்கம் நல்ல நாயகர்களைப் பெற வேண்டும் என்பது. நல்ல நாயகர்கள் என்பவர் சிவனடியார்கள். 'உனது அன்பர்களில் ஒருவர்தான் கணவனாக வரவேண்டும்' என்று எல்லோருமே வேண்டுகின்றனர்.

'எங்கள் பெருமானே! உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று திருமண வைபவங்களிலே சொல்லப்பட்டு வரும் அந்தப் பழைமை வாய்ந்த சொல்லை நினைக்கையில் எமக்கு என்றும் இல்லாத அச்சம் தோன்றுகின்றது. அதனாலே உனக்கு ஒன்று சொல்ல விரும்புகின்றோம். கேட்டருள்வாயாக! எமது மார்புகள் உனது அன்பர் அல்லாத பிறர் தோள்களைச் சேரலாகாது. எமது கைகள் சிவப்பணி தவிர்ந்த அவப்பணிகளைச் செய்யலாகாது. எமது கண்கள் கனவிலும் நினைவிலும் உன்னையன்றி வேறு எதையும் காணலாகாது. எங்கள் இறைவனே! எமது இந்த விருப்பத்தை நீ எமக்குத் தந்தருள்வாயாகில் சூரியன் எங்கே உதித்தாலும் என்ன, எமக்கு அதுபற்றிக் கவலையில்லை!'

இந்தப் பாடல் தமிழர் திருமண முறையில் நிகழும் ஒரு முக்கியமான கட்டத்தைக் குறிப்பிடுகின்றது. திருமணத்தின் போது பெண்ணின் தந்தை பெண்ணின் கைகளை மணமகனின் கைகளில் ஒப்படைத்து 'உன்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் அவளைக் கண் கலங்காது பார்த்துக் கொள்வாயாக' எனறு சொல்லிக் கொடுக்கும் வழக்கம் தமிழர் மத்தியில் நெடுங்காலமாகவே நிலவி வருவதொன்று. அதனால் 'பழஞ் சொல்' என்று குறிப்பிடுகின்றார் மணிவாசகர். பெண்ணைக் கொடுக்க மாப்பிள்ளை கொள்ளும் வழக்கம் மிகவும் பழைமை வாய்ந்தது. தொல்காப்பியத்தில் இந்த மரபு

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே

என்று கூறப்படுகின்றது. இன்றும் இவ் வழக்கம் கன்னிகாதானம் என்ற சடங்காக விளங்கி வருகின்றது.

கன்னிப் பெண்களுக்குத் திருமண நினைவு மகிழ்ச்சியைத் தருதல் வேண்டும். ஆனால் இந்தப் பெண்களுக்கு அது அச்சத்தைத் தருகின்றது. 'புதுக்கும் அச்சம்' என்பதனால் ஒவ்வொரு முறையும் திருமணம் பற்றிச் சிந்திக்கும் பொழுது இந்த அச்சம் புதுப்பிக்கப்படுகின்றது என்று கூறுகின்றார்கள். ஏன் இந்த அச்சம்? 'உன்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்று சிவபெருமானிடத.தில் அன்பில்லாத ஒருவன் கரங்களிலே தமது பெற்றோர்கள் தம்மை ஒப்படைத்தால் என்ன செய்வது' என்று நினைக்கின்ற பொழுது பெண்களுக்கு அச்சம் ஏற்படுகின்றது. அதனாலே 'எங்கொங்கை நின்அன்பர் அல்லார் தோள் சேரற்க' என்ற உறுதிப்பாட்டை முன் வைக்கின்றார்கள். மணிவாசகர் காலத்தில் பௌத்த சமயமும் பரவியிருந்தது. வசதியான பௌத்த ஆடவனுக்குச் சைவப் பெற்றோர் தமது பெண்ணைக் கட்டி வைக்கும் நிலையும் இருந்திருக்கலாம். மணிவாசகர் புத்தரோடு வாதிட்டு வென்றவர். திருமணம் என்ற பெயரில் பௌத்த சமயத்துக்குச் சைவப் பெண்கள் மாறக்கூடாது என்ற கருத்தும் அவருக்கு இருந்திருக்கலாம் என்று நினைப்பதில் தவறில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பாடலில் பாவை நோன்பின் நோக்கத்தை மட்டுமல்லாது பெண்களின் இலட்சியம் என்னவாக இருக்க வேண்டும் என்பது பற்றியும் பிரசாரம் செய்கின்றார் மணிவாசகர். நோக்கம் நல்ல கணவரைப் பெறுதல். அவர்கள் சிவனடியார்களாக இருக்க வேண்டும்.

ஆனால் மணிவாசகர் இவ்வளவோடு பெண்கள் திருத்தியடையலாகாது என்கிறார். இல்லறத்தை நன்கு நடத்துபவர்களாக மட்டும் இருக்காது அதற்கு அப்பாலும் அவர்கள் பணிகள் செய்தல் வேண்டும். அப்பணிகள் அவரைப் பொறுத்தளவில் சைவப் பணிகளாக அமைய வேண்டும்.

எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க

என்னும் அடிகள் இதனையே உணர்த்துகின்றன. மிகுந்த வலிமை கொண்ட வார்த்தைகள் இவை.

இப்பாடலின் இறுதி இரண்டு அடிகளும் சைவப் பெண்களின் உறுதிப்பாட்டை உச்சத்துக்கு எடுத்துச் செல்கின்றன. பயத்தோடு தொடங்குகின்ற பாடல் பத்தி வைராக்கியத்தோடு முடிகின்றது.

இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்.

இந்தப் பாடலை ஒன்பதாவது பாடலின் தொடர்ச்சியாகவே கொள்ளுதல் வேண்டும். அப் பாடலில்

இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம்

என்றவர்கள் இப் பாடலில்

இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கு.

என்கிறார்கள். ஞாயிறு திசை மாறி எழுந்தால் விபரீதங்கள் நடக்கும். அவ்விதமான உலக அழிவுகள் நடந்தாலும், எமது குடியே போனாலும் சிவனுக்கு அன்பானவர்கள் எமக்குக் கணவராக வந்தால் அதுவே போதும்; எப்பொழுதும் சிவப்பணி புரிகின்ற பரிசு கிடைத்தால் எமக்கு அதுவே போதும் என்கின்ற உறுதிப் பாட்டிலே நிற்கின்றார்கள் இந்தப் பெண்கள். மற்றும் ஒரு வகையில்நோக்கினால் சிவ வழிபாடும் சிவத் தொண்டும் முறையாக நடந்தால் உலகம் ஒழுங்காக நடக்கும், விபரீதங்கள், அமைதியின்மைகள் போன்றவற்றுக்கு இடம் இருக்காது என்னும் நம்பிக்கை 'எங்கெழிலென் ஞாயிறு' என்று அவர்களைச் சொல்ல வைத்தது என்றும் கொள்ளலாம்.

நிறைவாக வாழ்த்தொன்று பாடி வணக்கத்தை முடித்துக் கொள்கின்றார்கள் பெண்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லாவுயிர்க்கும் ஈறாம்இணை அடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்..

இது இறைவனின் திருவடிகளின் மகிமை, ஐந்தொழில்கள் ஆகியவற்றைக் கூறி வாழ்த்தும் பாடலாக அமைகின்றது.

நாம் பொதுவாகத் தெய்வங்களை வீழ்ந்து அல்லது சிரந்தாழ்த்தி வணங்குவது திருவடிகளில், அதாவது எமது தெய்வ தரிசனம் திருவடிகளிலேயே தொடங்குகிறது. இதனாற் சைவ சமயத்தில் திருவடி வணக்கம் முதன்மை பெறலாயிற்று.
சிவபெருமானின் திருவடி வணக்கத்துக்கு மேலும் பல சிறப்புக் காரணங்கள் உள்ளன. சிவபெருமானின் திருவடிகள் முத்தியின்பம் அளிப்பன. சிவபெருமானின் திருவடிகள் அண்ட சராசரங்களை இயக்குவன. சிவபெருமானின் திருவடிகள் ஆனந்த நடஞ் செய்வன. சிவபெருமானின் திருவடிகள் ஐந்தொழில்களைப் புரிவன.
ஐந்தொழில்களாவன படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன.

சிவபெருமான் ஆன்மாக்களின் பொருட்டு இந்த ஐந்தொழில்களையும் சுத்த மாயையில் தாமே செய்வார். அசுத்த மாயையில் இவற்றைப் பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் ஆகிய மூர்த்திகளைக் கொண்டு செய்விப்பார். இங்கே சுத்த மாயை நிலையிலே நின்று இறைவன் தாமே செய்யும் ஐந்தொழில்களும் பேசப்படுகின்றன.

தோற்றமாம் பொற்பாதம் - படைத்தல்
போகமாம் பூங்கழல்கள் - காத்தல?
ஈறாம் இணையடிகள் - அழித்தல்
மால் நான்முகனும் காணாத புண்டரிகம் - மறைத்தலையும்
யாம் உய்ய ஆட்கொண்டு அருளும் பொன்மலர்கள் - அருளல்

மேலும் சிவபெருமானின் நடனத்தைப் பூவுலகத்தார் முதன் முதலாகக் காண நேர்ந்தது திருவாதிரை நாளில் ஆதலால் அவரது எடுத்த பொற் பாதத்தால் ஆகும் படைப்புத் தொழில்களைக் கூறித் திருவெம்பாவைப் பாடல்களை நிறைவு செய்கின்றார் மணிவாசகர். மார்கழி நோன்பில் மற்றுமொரு சிறப்பு இருக்கிறது. மார்கழி மாதம் இறைவனது படைப்புத் தொழிலுக்கு உகந்த காலமாகும். எமக்கு ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள். அவர்களுக்கு தை முதல் ஆனி வரையும் பகலாகவும் ஆடி முதல் மார்கழி வரை இரவாகவும் கருதப்படுகின்றது. மார்கழி மாதம் தேவர்களுக்கு அதிகாலை நேரம். இந் நேரத்தில் இறைவர் தமது ஞானசத்தியைக் கொண்டு ஐந்தொழில்களையும் செய்தருளுகின்றார்.

மார்கழி நோன்பு பெண்களுக்குரிய விரதமாயினும் தேவர்களின் உதய காலம் வணக்கத்துக்குச் சிறந்த நாள் என்னும் கருத்தாலும் திருவாதிரை சிவபெருமானுக்கு உவப்பான நாள் என்பதாலும் சைவ வைணவத் தமிழர்கள் எல்லோருமே இக் காலத்திற் சிவபெருமானை வழிபட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா சிவராத்திரி

கடவுள் வழிபாடு உலகெங்கும் நடைபெறுகின்றது. கடவுள் என்ற சொல் எல்லாவற்றையும் கடந்தும் அவற்றினுள்ளே நிறைந்தும் நிற்கும் பரம்பொருள் என்னும் கருத்தைக் கொண்டுள்ளது. கடவுள், இறைவன், ஆண்டவன் என்பன ஒரு பொருட் சொற்கள்; பரம்பொருளைக் குறிக்கும் பொதுச் சொற்கள்.

எல்லா உலகத்துக்கும் எல்லா உயிரினத்துக்கும் பொதுவான கடவுளுக்கு உலகத்தவர் வெவ்வேறு பெயர்களைச் சூட்டித் தமது சூழல், பண்பாடு முதலியவற்றுக்குத் தகுந்தாற் போல வழிபாடுகளை நடத்தி வருகின்றனர்.

நாம் கடவுளைச் சிவன் என்று அழைக்கின்றோம். கடவுள் சிவப்பு நிறமானவர் என்ற கருத்தில் சிவன் என்ற பெயரை அவனுக்குச் சூட்டினார் நம் முன்னோர். இந்தத் தமிழ்ச் சொல்லே வேதங்கள் கூறும் உருத்திரனுக்கும் சூட்டப்பட்டது என்பது அறிஞர்கள் கருத்து. முதன் முதலில் சிவம் என்ற சொல் பெயர்ச் சொல்லாக சிவேதாசுவதர என்னும் உபநிடதத்திலேயே இடம்பெற்றுள்ளது. அதில் மங்கலம், இன்பம் என்ற பொருளிற் 'சிவம்' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

சிவனை முழு முதற் கடவுளாக வணங்கும் சமயம் சைவ சமயம் எனப்படும். முற் காலத்தில் சிந்துவெளிப் பள்ளத்தாக்கு வரை இச் சமயம் பரவியிருந்தது என்பதனை அப் பள்ளத்தாக்கில் மேற்கொண்ட அகழ்வாய்வுகள் தெரிவிக்கின்றன. பிற்காலத்தில் தென்னாட்டிலேயே இது பெருநெறியாக விளங்கலாயிற்று. இதனாலேயே மணிவாசகப் பெருமானும் 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று பாட நேர்ந்தது.

தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன். உலகங்களுக்கெல்லாம் கருத்தாவாக இருப்பவர் சிவபெருமான். அவர் ஆதியும் அந்தமும் இல்லாதவர். அதாவது, பிறப்பு இறப்பு இல்லாதவர்; நித்தியர். அவர் எல்லாம் வல்லவர்; எல்லாம் அறிபவர்; எங்கும் நிறைந்தவர்.

எங்கும் நிறைந்தவர் என்னும் பொழுது அவர் எம்முள்ளேயும் இருப்பவர் என்பதும் பொருளாகின்றது. இதனை நாம் பொதுவாக உணர்ந்து கொள்வதில்லை. உலக பந்த பாசங்கள் அதற்குத் தடையாக இருக்கின்றன. பந்தபாசங்களின் மத்தியிலும் எமக்குள்ளே இருக்கும் சிவனை, எமக்குச் சொந்தமான சிவனை உணர்ந்து கொள்வதற்கு விரதங்கள் உதவியாக இருக்கின்றன.

சிவனுக்குச் சிறப்பாகவுள்ள விரதங்கள் ஒன்பது. அவை சோமவார விரதம், திருவாதிரை விரதம், உமா மகேசுவர விரதம், சிவராத்திரி விரதம், கேதார விரதம், கலியாணசுந்தர விரதம், சூல விரதம், இடப விரதம், பிரதோஷ விரதம் என்பன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ வழிபாட்டுக்குரிய இரவுகள் நித்திய சிவராத்திரி, யோக சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாத சிவராத்திரி, மகா சிவராத்திரி என ஐந்து வகைப்படும். நித்திய சிவராத்திரி ஒவ்வொரு சதுர்த்தசியிலும் அனுட்டிக்கப்படும். அமாவாசையை முழு நாளும் கொண்ட திங்கட்கிழமைகளில் பிடிக்கப்படும் விரதம் யோக சிவராத்திரி எனப்படும். தை மாதத்தில் கிருஷ்ண பட்சம் பிரதமை முதல் 13 நாட்கள் பட்ச சிவராத்திரியாகும். மாசியில் வரும் கிருஷ்ண சதுர்த்தசி, பங்குனி முதல் கிருத்தியை, சித்திரை மாதக் கிருஷ்ண அஷ்டகம் ஆகியவை மாத சிவராத்திரி விரதங்களாவன.

மகா சிவராத்திரி விரதம் மாசி மாதத்தில் கிருஷ்ண பட்ச சதுர்த்தசித் திதியிலே அனுட்டிக்கப்படுகின்றது. இதில் உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் விரதம் இருந்து நான்கு யாமமும் உறங்காது சிவபூசை செய்தல் சிறப்புடையது. இரவு பதினான்கு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்தம் இலிங்கோற்பவ காலமாகும். நான்கு யாமமும் விழித்திருக்க முடியாதவர் இலிங்கோற்பவ காலம் வரையேனும் நித்திரையைத் தவிர்த்துச் சிவ வழிபாடு செய்தல் வேண்டும். இக் காலத்திலே சிவதரிசனஞ் செய்வது அதியுன்னத புண்ணியமாகக் கருதப்படுகின்றது.

அதற்கு ஒரு காரணம் உண்டு. இலிங்கோற்பவ காலம் நள்ளிரவுக்கு முன் ஒரு நாழிகையையும் பின்னுள்ள ஒரு நாழிகையையும் உள்ளடக்கிய காலப் பகுதியைக் குறிக்கும். இலிங்கோற்பவம் என்றால் இலிங்க உற்பத்தி அல்லது இலிங்கத் தோற்றம் என்பது பொருள்.

மாசி மாதக் கிருஷ்ண சதுர்த்தசி நள்ளிரவிலேதான் சிவபெருமான் இலிங்க வடிவில் தோன்றியருளினார். அதனால் ஒவ்வொரு வருடமும் இந்த இரவில் உலகம் எங்ஙனும் உள்ள இலிங்கங்களில் தோன்றி வருகிறார் என்பது நம்பிக்கை. அவ்விதம் தோன்றியருளும் காலத்தில், அதாவது, இலிங்கோற்பவ காலத்தில் சிவ வழிபாடு செய்வது சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது.

**வரலாறு**

சிவபெருமான் இலிங்க வடிவாகத் தோன்றிய வரலாறு ஒன்று கந்தபுராணத்திலே வருகின்றது.

முன்னொரு காலத்திலே படைப்புத் தொழில் செய்யும் பிரம்மதேவரும் காத்தல் தொழில் புரியும் திருமாலும் தத்தம் தொழிலே பெரியதென வாதிட்டனர். அவ்வேளை இருவருக்கும் இடையிற் சிவபெருமான் சோதி மயமான மலை போலத் தோன்றியருளி, அதன் அடியையாயினும் முடியையாயினும் எவர் முதலிற் கண்டறிவாரோ அவரே பெரியவர் என்று கூறியருளினார்.

உடனே முடியினைக் காண்பதாகப் பிரம்மா கூற, திருமால் தான் அடியைக் காண்பதாகக் கூறினார். பிரம்மா பெரிய அன்னப் பறவை வடிவம் கொண்டு சோதி மலையின் முடியைக் காண மேல் நோக்கிப் பறந்தார். திருமால் பெரும் பன்றி வடிவந் தாங்கிப் புவியினைத் தோண்டிச் சோதி மலையின் அடியினைக் காணத் தலைப்பட்டார். நெடுங்காலமாகியும் பிரமாவால் முடியையும் காண முடியவில்லை, திருமாலால் அடியையும் தேட முடியவில்லை. இருவரும் சோர்வுற்றுத் தொடங்கிய இடத்துக்கே மீண்டும் வந்து சிவபிரானை வழிபட்டனர். அப்பொழுது சோதி வடிவான உலகநாதர் உமாதேவியாருடன் அவர்களுக்குக் காட்சி கொடுத்தருளினார். பிரமதேவரும் திருமாலும் தமது அறியாமையைப் பொறுத்தருள வேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானை வணங்கிப் பணிந்தனர். இறைவர், 'நீங்கள் பிழை எதுவும் செய்யவில்லை. உங்களின் அறிவை யானே மயக்கினேன். உயிர்களில் மட்டுமன்றி. உயிர்கள் செய்யும் தொழில்களிலும் யான் இருக்கின்றேன். அதனால் தொழில்களில் ஏற்றத் தாழ்வு பார்க்கலாகாது என்பதனை உங்கள் மூலம் உலகத்தவருக்கு உணர்த்தவே இவ்விளையாட்டைச் செய்தோம்' என்று கூறிச் சோதிமலையின் அடிமுடியை அவர்கள் காணும் வகையில் ஓர் அழகிய இலிங்க வடிவமாக ஒடுக்கியருளினார்.

சிவலிங்கத்தைப் பிரமாவும் திருமாலும் முறைப்படி வணங்கி மகிழ்ந்தார்கள்.

சிவபெருமான் உயிர்கள் தம்மை வணங்கும் பொருட்டு இலிங்க வடிவிலே தோன்றியருளிய தலம் திருவண்ணாமலை என்று வழங்கப்படுகின்றது. இதனலே திருவண்ணாமலையில் உள்ள இலிங்கம் தேயுலிங்கம் என்று அழைக்கப்படுகின்றது. **தேயுலிங்கம்** என்றால் சோதிலிங்கம் அல்லது நெருப்பு இலிங்கம் என்று பொருள். சிவராத்திரியும் இங்கு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

புராணங்களிலன்றித் தேவார திருவாசகங்களிலும் அடிமுடி தேடிய வரலாறு பெரிதும் பேசப்படுகின்றது. திருஞானசம்பந்தப் பெருமான் பதிகங்கள் தோறும் ஒன்பதாவது பாடலிலே இவ்வரலாற்றைக் குறிப்பிடுகின்றார். உதாரணத்துக்காகத் திருகோணமலைப் பதிகத்திலே வரும் ஒன்பதாவது பாடலைப் பார்ப்போம்:

அருவரா தொருகை வெண்டலை ஏந்தி
அகந்தொறும் பலியுடன் புக்க
வெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம் நள்ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநல் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே.

திருநாவுக்கரசு நாயனார் இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை முழுவதிலுமே இவ்வரலாற்றை வெளிப்படுத்துகின்றார்.

செங்க ணானும் பிரமனும் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென்றி லிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே

என்பது இக் குறுந்தொகையின் இறுதிப் பாடல்.

மணிவாசகப் பெருமானும் பல இடங்களிலே இந்த வரலாற்றைக் குறிப்பிடுகின்றார். திருத்தோணோக்கம் என்ற பதிகத்தில் இதனை

பிரமன் அரியென்(று) இருவருந்தம் பேதைமையால்
பரமம்யாம் பரம் என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனார் அழல் உருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ

என்று விளக்கமாகவே விவரிக்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலிங்கம் இறைவனின் அருவுருவ வடிவம். ஆன்மாக்களின் நலன் குறித்துச் சிவபெருமான் அவ்வப்போது திருவடிவம் தாங்குதல் உண்டு. அவ்வடிவங்கள் அருவம், உருவம், அருவுருவம் என்று மூவகைப்படும்.

அருவம் கண்ணுக்குத் தெரியாத வடிவம். சக்தி வடிவமாக இருந்தே சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் வடிவம் இது. உருவம் கண்ணுக்குப் புலனாகும் வண்ணம் திருமேனி கொள்வது. அருவுருவம் வடிவமாகவும் வடிவமற்றதாகவும் உள்ள ஒரு நிலை. சோதி வடிவம், இலிங்க வடிவம் என்பன இறைவனின் அருவுருவத் திருமேனிக்கு நல்ல உதாரணங்கள்.

இலிங்கம் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. உயிர்கள் யாவும் ஒடுங்கும் இடம் என்பது அவற்றில் ஒன்று. நாவலர் பெருமான் இலிங்கம் என்பதற்கு 'படைத்தல் காத்தல் முதலியவைகளினால் உலகத்தைச் சித்திரிப்பது' என்று பொருள் கூறியிருக்கின்றார் (சைவ வினாவிடை - இரண்டாம் புத்தகம்). மேலும் இலிங்கம் என்பது ஒரு பொருளின் சிறப்பியல்பை உணர்த்தும் அடையாளம் அல்லது குறி என்றும் கொள்ளப்படுகின்றது. அவ்வகையில் சிவலிங்கம் என்பது சிவத்துக்கு அடையாளம் ஆகின்றது.

'காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்' என்பர் சேக்கிழார பெருமான்.

சிவலிங்க வழிபாடு வேதகாலத்துக்கு முற்பட்டது. இது சிந்துவெளி அகழ்வாய்வு கரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களிலே வெளிப்படுத்திய சிவலிங்கத்தை ஒத்த சின்னங்களால் தெரியவருகின்றது.

சிவலிங்கம் பரார்த்தலிங்கம் இட்டலிங்கம் என இருவகைப்படும். **பரார்த்தலிங்கம்** சிவபெருமான் சங்கார காலம் வரையும் சாந்நித்தியராக இருந்து ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் இலிங்கமாகும். இது **தாவரலிங்கம்** என்றும் அழைக்கப்படும். தாவரலிங்கம் அல்லது பரார்த்த லிங்கம் ஐந்து வகைப்படும். அவை சுயம்புலிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம் என்பன.

**சுயம்புலிங்கம்** தானே தோன்றியது. **காணலிங்கம்** விநாயகர், சுப்பிரமணியர் முதலிய கணர்களாலே எழுந்தருளச் செய்யப் பெற்றது. **தைவிகலிங்கம்** திருமால் முதலிய தேவர்களினாலே எழுந்தருளச் செய்யப்பெற்றது. **ஆரிடலிங்கம்** இருடிகள், அசுரர், இராக்கதர் முதலியோரால் நிறுவப்பட்டது. **மானுடலிங்கம்** மனிதரால் தாபிக்கப்பட்டது.

**இட்டலிங்கம்** என்பது ஆசாரியார் ஒருவரிடமிருந்து சீடன் ஒருவன் வழிபடுதற் பொருட்டுப் பெறும் இலிங்கத்தைக் குறிக்கும். இது **ஆன்மலிங்கம்** எனவும் **சலலிங்கம்** எனவும் பெயர் பெறும்.

இட்டலிங்கம் வாணலிங்கம், படிகலிங்கம், இரத்தினலிங்கம், லோகச லிங்கம், சைலலிங்கம் எனப் பலவகைப்படும். ஆன்மாக்களினாலே பூசித்து வழிபடப் பெறும் இலிங்கம் சதாசிவ வடிவம் எனப்படும். இதிலுள்ள பீடம் சக்தியையும் இலிங்கம் சிவத்தையும் குறிக்கும். சக்தியின்றி சிவனில்லை, சிவனின்றிச் சக்தியில்லை என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவத்தை விளக்கும் சின்னமாகவும் இது விளங்குகின்றது. சிவபெருமானின் இடப்பாகத்திலே சக்தி இருக்கின்றார். முன்னொரு காலத்திலே பார்வதி தேவியார் கௌதமர் ஆச்சிரமத்திலே தவஞ்செய்து சிவபெருமானின் திருமேனியிற் பாதியுருப் பெற்றனள் என்பது வரலாறு. அதன் காரணமாகவே இறைவன் மாதொரு பாகன், பார்வதி சமேதன், அர்த்தநாரீசன் போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றான்.

எனவே சிவலிங்கத்தை வணங்குகின்ற பொழுது சிவனையும் சக்தியையும் சேர்த்தே வணங்குகின்றோம். சிவராத்திரிகள் சிவலிங்க வழிபாட்டுக்குரிய சிறந்த தினங்கள். அதுவும் மகா சிவராத்திரி மகோன்னதமானது. அன்றைய தினம் சிவபெருமான் எல்லா இலிங்கங்களிலும் எழுந்தருளி அருள் பாலிப்பதினாலே அடியார்கள் விழித்திருந்து சிவலிங்க வழிபாட்டில் ஈடுபடுவர்.

## விழிப்பு

விழித்திருத்தல் சிவனுக்கு விருப்பமான வழிபாடாகக் கருதப்படுகிறது. ஒரு சிவாரத்திரியிலே உலக முடிவாகிய ஊழிக்காலம் வந்தது. உயிர்கள் ஒடுங்கின. உலகங்கள் அழிந்தன. எங்கும் இருள் சூழ்ந்தது. அந்த இரவிலே உமாதேவியார் விழித்திருந்து தமது தலைவரை நோக்கி வழிபாடு செய்து உலகங்களையும் உயிர்களையும் மீண்டும் படைக்கும் வண்ணம் வேண்டினார். அதனால் சைவ மக்களும் சிவராத்திரியிலே விழித்திருந்து சிவனை வழிபடலாயினர்.

அறிந்தோ அறியாமலோ சிவராத்திரியன்று விழித்திருப்பவருக்கும் வீடுபேறு கிடைக்கும்.

ஒரு முறை வைகாவூர்க் காட்டிலே வேட்டைக்குச் சென்ற ஒருவனைப் புலியொன்று துரத்திக் கொண்டு சென்றது. வேடன் ஓடிச் சென்று உயர்ந்த ஒரு வில்வமரத்தில் ஏறிக் கொண்டான். துரத்தி வந்த புலி மரத்தடியில் நின்றதைக் கண்டான். பின்னர் அதனைக் காணவில்லை. அது மரத்துக்குக் கீழ் இருந்த பற்றையில் பதுங்கியிருக்க வேண்டும் அன்று வேடன் பயந்தான். பொழுதும் பட்டு விட்டது. புலிக்குப் பயந்து வேடன் இரவு முழுவதையும் மரத்திலேயே கழித்தான். உறங்கினால் விழுந்து விடக்கூடும் என்று நினைத்து, விழிப்பாக இருக்கும் பொருட்டு அம் மரத்தின் இலையை ஒவ்வொன்றாகப் பிடுங்கி கீழே போட்டுக் கொண்டிருந்தான்.

அன்றைய தினம் சிவராத்திரி என்பது வேடனுக்குத் தெரியாது. அவன் எறிந்த வில்வம் இலை மரத்துக்குக் கீழே இருந்த சிவலிங்கத்தில் வீழ்ந்ததுவும் அவனுக்குத் தெரியாது. விடிந்ததும் புலி இன்னமும் பதுங்கி இருக்கிறதா என்று கூர்ந்து கவனிக்கையிலேதான் இலிங்கம் அவனது கண்களிலே பட்டது. கீழே இறங்கி 'பெருமானே நீதான் என்னைப் புலி வாயிலிருந்து காத்தருள் செய்தாய்' என்று சிவலிங்கத்தை வழிபட்டான். சிவபெருமான் உமாதேவியாருடன் காட்சி தந்து, 'நீ இரவு முழுவதும் விழித்திருந்து வில்வத்தால் எனக்கு அர்ச்சனை புரிந்தாய். நீ எமது உலகத்தில் என்றும் எம்மைப் பிரியாதிருக்கும் வரம் தந்தோம்' எனக் கூறி மறைந்தருளினார்.

இந்த அதிசய நிகழ்ச்சி நடந்தது திருவைகாவூர் என்னும் பதியில். இப் புனித தலத்திலே இன்றும் இக் கதை சிவராத்திரி விழாவிலே சொல்லப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிகழ்ச்சியிலிருந்து விழித்திருந்து பூசை செய்வது இறைவருக்கு விருப்பமானதொன்று என்பது தெரிய வருகின்றது. சிவராத்திரி ஒன்றுதான் விழித்திருந்து அனுட்டிக்கப்படும் விரதம். விழித்திருப்பது இருட்டிலே. அறியாமையாகிய இருட்டிலே அறிவே வடிவான இறைவனைத் தேடுகின்றோம். எப்படித் தேடுகின்றோம்? விழித்திருந்து கண்ணொளியாகிய விளக்கை ஏந்தியவாறு தேடுகிறோம். புற விளக்குகளைக் கொளுத்துகின்றவர்கள். புறத்தே இருக்கும் இறைவனைத் தேடுகின்றார்கள். நித்திரை கொள்ளாது கண்ணொளி விளக்குகளைக் கொளுத்துகின்றவர் தம்முள்ளேஇருக்கும் இறைவனைத் தேடுகின்றார்கள்.

தேடிக் கண்டுகொண்டேன்
திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்.

என்று பாடுகின்றார் அப்பர் பெருமான். ஒரு வகையில் சிவராத்திரிக்கு மிகவும் பொருத்தமான பாடல் இது. இன்று நாம் விரதமிருக்கின்ற சிவராத்திரி அன்று திருமாலொடு நான்முகனும் சிவபிரானின் சோதி வடிவத்தின் அடியையும் முடியையும் தேடிக் காண முடியாது களைத்துப் போன இராத்திரிதான். அவர்கள் அகத்திலே தேடாமல் புறத்தே தேடினார்கள். கண்டு கொள்ள முடியவில்லை.

உள்ளத்திற் காண்பாயெனில் - கோயில்
உள்ளேயும் காண்பாயெடி

என்று பாடினார் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை. இலிங்கம் இறைவனின் அருவுருவத் திருமேனி. அருவுருவம் உருவம் அற்றதாயும் உருவம் உற்றதாயும் இருக்கும் நிலை. இத்தகைய விளக்கமில்லாத நிலையில் இறைவனைக் காண வேண்டுமாயின் முதலிலே நாம் உள்ளத்தில் அவனைக் கண்டு தெளிவது நல்லது. கண் விழிப்பு இந்தத் தெளிவை உண்டு பண்ணவல்லது.

கண்விழிக்க வேண்டுமே என்பதற்காகக் களியாட்டங்களிலே ஈடுபடலாகாது. அந்தக் கரணங்களும் ஐம்பொறிகளும் சிவமயமாகும் வகையில் சிவலிங்க வழிபாடு செய்தல் வேண்டும். அவ்விதம் செய்து ஆறு நாட்களிலே வீடு பேறு அடைந்தவர் கண்ணப்ப நாயனார். கண் துஞ்சாது இறைவனை வழிபட்டுத் தமது ஆயுளை நீடித்தவர் மார்க்கண்டேயர்.

கண் துஞ்சாது இறைவனைக் கண்ணாரக் கண்டு வணங்க வேண்டிய இரவே சிவராத்திரி. துன்பங்களைத் தரும் ஆசாபாசங்களை உண்ணாது, உறங்காது விரதமிருந்து அறுக்கும் இரவே சிவராத்திரி. மலங்களால் ஏற்படும் மயக்கங்களுக்கு அடிமையாகாது விழிப்பாக இருக்க வேண்டும் என்னும் உணர்வை வளர்க்கும் இரவே சிவராத்திரி.

மலங்களுள்ளே மிகவும் கொடியது ஆணவ மலம். இது ஆன்மாவுக்குத் தன்னைக் காட்டாது மறைந்திருப்பதினாலே இருண்மலம் எனப்படுகின்றது. அதாவது இருள் ஆணவ மலத்தைக் குறிக்கின்றது. அந்த இருள் குறித்து நாம் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதையும் சிவராத்திரி வலியுறுத்துகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித குலப் பிரச்சனைகள் அனைத்துக்கும் ஆணவமே காரணமாகின்றது. அதனால் ஆணவமாகிய இருட்டிலே மனித குல நன்மைக்காகவும் நாம் ஒளியைத் தேடுகின்றோம். ஒளி - அறிவொளி. அறியாமையாகிய இருளை அறிவொளியால் அகற்ற முயல்கின்றோம்.

இத்தகைய தத்துவங்களும் நன்மைப்பாடுகளும் நிறைந்த சிவராத்திரியிலே நாமும் விரதமிருந்து அறிவொளியாகிய சிவ ஒளியைப் பெற்றுச் சிறப்படைவோமாக!.

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழ் ஒளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி

நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகள் என்று பொருள். ஆனாலும் இச் சொல் வெறும் ஒன்பது இரவுகளைக் குறித்து நிற்கவில்லை. ஒன்பது இரவுகள் தொடர்ந்து சக்தியை வழிபடுவதால் இது சக்தி வழிபாட்டுக்குரிய ஒன்பது இரவுகள் என்பது பலருக்கும் தெரிந்த ஒன்றாகும்.

இவ்வழிபாடு புரட்டாதித் திங்களில் வரும் அமவாசைக்கு அடுத்த நாள் முதல் ஒன்பது நாட்களுக்கு மேற்கொள்ளப்படுகின்றது. புரட்டாதிக்குக் கன்னி மாதம் என்ற சிறப்புப் பெயர் ஒன்று உண்டு. இம் மாதத்திலே கதிரவன் கன்னி ராசியில் வருகின்ற காரணம் பற்றி இது கன்னி மாதம் எனப்படுகின்றது. அதனாலே கன்னி மாதம் நித்திய கன்னியாகிய பராசத்தியின் வழிபாட்டுக்கு உரியதாயிற்று, உகந்ததாயிற்று.

தொன்மை வாய்ந்த வழிபாடு

நவராத்திரி வழிபாடு தொன்மை வாய்ந்தது. சுகேது என்னும் அரசன் அரசிழந்து வருந்திய காலத்தில் அவனது மனைவி துவேதியை பராசக்தியை ஒன்பது இரவுகள் விரதம் இருந்து வழிபட்டாள். அதன் பயனாக அவளுக்கு சூரியப்பிரதாபன் என்றொரு மகன் பிறந்தான். அவன் பகைவருடன் போரிட்டு வெற்றி பெற்று இழந்த அரசைத் தந்தைக்கு மீட்டுக் கொடுத்தான். அதனைத் தொடர்ந்து சுகேது மன்னன் நவராத்திரி வழிபாட்டை நாடு முழுவதும் வருடந்தோறும் நடத்தினான் என்பர்.

வங்கமொழி இராமாயணம் நவராத்திரி வழிபாட்டுக்கு இராமர் காரணமாக இருந்தார் என்று கூறுகின்றது. பெருவல்லமை படைத்த இராவணனைக் கொல்வதற்கு இராமர் சக்தியைப் பூசித்தார் என்றும் அவரது வழிபாடே இன்றும் நவராத்திரியாகக் கொண்டாடப்படுகின்றது என்றும் வங்காள இராமாயணம் கூறுகின்றது.

சாக்த சமயம்

தொடக்கம் எவ்வாறாயினும் நவராத்திரி வழிபாடு சாக்த சமயத்தவரால் வளர்க்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை. சாக்த சமயம் சக்தியை முழு முதல் கடவுளாகப் போற்றி வழிபடுவது. அதனால் அவர்களுக்கு நவராத்திரி தலையாய வழிபாட்டு காலமாகின்றது.

வீரம் - செல்வம் - கல்வி

சைவர்கள் நவராத்திரியில் சிவசக்தியை வழிபடுவர். சிவசக்தி சிவனோடு இரண்டறக் கலந்திருக்கும் நிலையில் பராசக்தி எனப் பெயர் பெறுவாள். பராசக்திக்குப் பல வடிவங்கள். அவற்றுள் துர்க்கை, இலக்குமி, கலைமகள் ஆகிய மூன்றும் நவராத்திரியில் சிறப்பாக வணங்கப்படுகின்றன. புரட்டாதி மாதம் பூர்வ பக்கப் பிரதமை முதல் திரிதிகை வரையான மூன்று நாட்களும் துர்க்கையாகவும், சதுர்த்தி முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டி வரையிலுள்ள மூன்று நாட்களும் இலக்குமியாகவும், சப்தமி முதல் நவமி ஈறாகவுள்ள மூன்று நாட்களும் கலைமகளாகவும் பராசக்தி வணங்கப்படுகின்றாள். தசமியில் வழிபாடு நிறைவுபெறுகின்றது.

துர்க்கை வீரத்திற்கும், இலக்குமி செல்வத்திற்கும், கலைமகள் கல்விக்கும் உரிய சக்தி பேதங்களாவர். எனவே இவர்களை வழிபடுவது வீரத்தையும், செல்வத்தையும், கல்வியையும் போற்றுவதாகின்றது. அவற்றைப் பராசக்தியிடமிருந்து வேண்டுவதற்குரிய வழிபாடே நவராத்திரியாகும். இவை மூன்றும் சிறப்பான வாழ்க்கைக்கு இன்றியமையாதவை.

வீரம்

வீரம் என்றதும் பகைவனுடன் போரிட்டுப் பெறும் வெற்றிக்குரிய வல்லமையே எனப் பலரும் நினைக்கிறார்கள். சரி அவ்விதமே போர், சண்டை, போட்டி என்பவற்றை எடுத்துக் கொண்டாலும் அவற்றிலே தோற்றுப் போகின்றவர் எல்லோரையும் வீரம் இல்லாதவர் என்று சொல்ல முடியாது. தோல்வியை ஏற்றுக் கொள்வதற்கும் வீரம் வேண்டும்.

வீரம் என்ற சொல்லுக்கு உறுதிப்பாடு, துணிவு, கட்டுப்பாடு, பொறுமை முதலியனவும் பொருள்களாக உள்ளன. இவை யாவும் மனித வல்லமைகள். தடைகளைத் தாண்டி வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்னும் வைராக்கியம் உள்ள அனைவருமே வீரர்கள் தாம்.

வைராக்கியம் அல்லது உறுதிப்பாடும் இரு வகைப்படும். ஒன்று மனவுறுதி; இரண்டு உடலுறுதி.

ஒருவருக்கு எவ்வளவுதான் படிப்பறிவு இருந்தாலும் வேறு திறமைகள் இருந்தாலும் மனவுறுதி, ஆர்வம், ஊக்கம் என்பவை இருந்தாலும் உடலுறுதி இல்லையாகில் அவரால் வாழ்க்கையில் முன்னேற முடியாது.

உடலுறுதிக்குப் பெரிதும் இடையூறாக இருப்பவை நோய நொடிகள். சுவர் இருந்தாலே சித்திரம் கீறலாம் என்பது பழமொழி. அது உடலுறுதியுடன் இருந்தாலே உழைத்து முன்னுக்கு வரலாம் என்பதனை உணர்த்த எழுந்த அனுபவ மொழி. உடலுக்கு உறுதியும் அழகும் நோயற்ற வாழ்வால் வருவன. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். இந்தச் செல்வத்தை வேண்டிப் பாடும் 'வச்சிர பஞ்சரம்' என்னும் சக்தி கவசத்தில் வரும் முதல் பாடல் இது:

அங்கையிற் கரகந் தாங்கும்
  பிரமாணி அருளி னோடும்
துங்கமென் சென்னி காக்க
  வயிணவி துகளி லாகம்
எங்கணுங் காக்கச் செய்ய
  வேந்தெழில் உருத்தி ராணி
தங்குமெண் டிசையும் அன்பு
  தழைத்திட வினிது காக்க

தேவர்களை நெடுநாள் வருத்திய துர்க்கன் என்னும் அவுணனை அழித்த காரணத்தினாலே பராசக்திக்கு துர்க்கை என்ற பெயர் வரலாயிற்று. துர்க்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரத்தின் வடிவம், வெற்றியின் சின்னம். வீரத்தையும் முயற்சிகளிலே வெற்றியையும் அதற்கு வேண்டிய உடல்நலத்தையும் வேண்டி நவராத்திரியில் முதல் மூன்று நாட்களிலும் துர்க்கைக்கு வழிபாடு செய்யப்படுகின்றது.

செல்வம்

'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை', என்பது திருவள்ளுவர் வாக்கு. இந்த உலகத்திலே வறுமையைப் போலத் துன்பம் தருவது வேறு எதுவும் இருக்க முடியாது. நெருப்பிலே கிடந்து தூங்கினாலும் வறுமையில் ஒருவனால் நிம்மதியாகத் தூங்க முடியாது. பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்கிறார் அவ்வைப் பிராட்டியார்.

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்.

இல்லானை ஈன்றெடுத்த தாயும் வேண்டாள். அதனாலே 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்றனர் நம் முன்னோர்.

செல்வத்திற்குரியவள் இலக்குமி. திருமகள் என்பது தமிழ்ப் பெயர். திருமகள் திருமாலின் சக்தி. மலர்களிலே அழகும், கவர்ச்சியும் மிகுந்தது செந்தாமரை. அழகிய செந்தாமரை மலரிலே வீற்றிருப்பவள். செல்வத்தின் நிறம் சிவப்பு. திருமகள் சிவப்பான ஆடையை அணிந்திருப்பவள். தாமரையில் உறையும் திருமகளை வழிபட்டால், இல்லத் தாமரையில் இருத்தினால் செல்வம் கொழிக்கும் என்பது நம்பிக்கை. அதனாலே நவராத்திரியில் நடு மூன்று தினங்களும் திருமகளுக்கு வழிபாடு நடத்தப்படுகின்றது.

மல்லநெடும் புவியனைத்தும் பொதுநீக்கித்
   தனிபுரக்கும் மன்னர் யாரும்
கல்வியினிற் பேரறிவிற் கட்டழகில்
   நிகரில்லாக் காட்சி யோரும்
வெல்படையிற் பகைதுரந்து வெஞ்சமரில்
   வாகைபுனை வீரர் தாமும்
அல்லிமலர்ப் பொருட்டுறையும் அணியிழைநின்
   அருள்நோக்கம் அடைந்துள்ளாரே.
- இலக்குமி தோத்திரம்.

கல்வி

தமிழ் மக்கள் கல்வியைக் கண்ணெனப் போற்றுகின்றவர்கள்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

என்பது வள்ளுவ நாயனார் வாக்கு. பொருட் செல்வத்திலும் கல்விச் செல்வமே மேலான செல்வம். பொருட் செல்வம் எடுக்க எடுக்கக் குறைந்து போகும். கல்விச் செல்வம் கொடுக்க கொடுக்க அதிகரிக்கும். பொருட் செல்வம் கள்வரால் திருடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியது. தீயினால் அழியக் கூடியது. பொருட் செல்வத்தை இந்தப் பிறப்பில் மட்டும் அனுபவிக்கலாம். ஆனால் கல்விச் செல்வத்தை ஏழேழு பிறப்பும் அனுபவிக்கலாம்.

அறிவு ஒருவருக்கு வரக்கூடிய கேடுகளைத் தீர்க்கும் கருவி; உண்மை எது பொய் எது என்பவற்றை பகுத்தறிய உதவும் உரைகல்; அறியாமையாகிய இருளைப் போக்கும் விளக்கு; உள்ளப் பக்குவத்தை அளிக்கும் தேனமுதம்.

கற்றவருக்குச் செல்லும் இடமெல்லாம் சிறப்பு. அவருக்கு யாதும் ஊராகும். யாவரும் உறவினர் ஆவர்.

கல்விக்கும் ஏனைக் கலைகளுக்கும் அரசி கலைவாணி. சரசுவதி, கலைமகள், கலையரசி, கலாவல்லி முதலிய பல பெயர்களைக் கொண்ட இத் தேவி பிரமதேவருக்கு சக்தியாவாள். வெண்ணிறக் கலையுடுப்பவள்; வெள்ளைப் பணி (அணிகலன்கள்) பூண்பவள்; வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பவள். இவர் பாற்கடலிலே தோன்றியதால் வெள்ளை இவருக்குரிய நிறமாயிற்று.

கல்வியிற் சிறந்த அறிவாளர்களும் கலைகளில் வல்ல கலைவாணர்களும் சொற்றமிழ் பாடும் பாவாணர்களும் நற்றமிழ் பேசும் நாவாணர்களும் கலைவாணியின் அருள் பெற்றவர்கள். இவ்விதம் அருள் பெற்றவர்களில் ஒருவர் பாண்டி நாட்டைச் சேர்ந்த குமரகுருபர சுவாமிகள். இவர் சரசுவதியைப் போற்றி பாடிய நூல் 'சகலக-லாவல்லி' மாலை என்பது. அதிலுள்ள பாடல்களில் ஒன்று வருமாறு:

பண்ணும் பரதமும் கல்வியும்
  தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்தநல்
  காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும்
  கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
  சகலகலா வல்லியே

நவராத்திரியில் இறுதி மூன்று நாட்களும் கலைவாணிக்குரியது. கல்வி, கலைகளில் சிறந்தோங்க கல்விக்கரசியின் அருள் வேண்டி அவருக்கு மேலான பூசனைகள் இயற்றும் நாட்கள் இவை.

விஜயதசமி

விஜயதசமி என்றால் வெற்றிக்குரிய பத்தாம் நாள் என்று பொருள். பராசக்தி மகுடாசுரனை வதைத்த வெற்றித் திருநாளாக இது கொண்டாடப்படுகின்றது. மகுடம் என்றால் எருமை. எருமைத் தலையை உடைய அசுரன் மகுடாசுரன். அவன் தாமத குணம் உடையவன். தேவி அவனுடைய தாமத குணத்தைப் போக்கி சாத்வீகக் குணத்தை அருளிய நாள் இந்த நாள். அகில நாயகி அவனை வெற்றி கொண்டு சாத்வீகப்படுத்தியது வன்னி மரக்காட்டில். அதனால் வன்னி மரம் வெற்றிக்குரிய மரமாகவும் பாவங்களைப் போக்கும் மரமாகவும் போற்றப்படுகின்றது. பாண்டவர் தமது அஞ்ஞான (மறைவான) வாசத்தின் போது தமது ஆயுதங்களை வன்னி மரத்தில் மறைத்து வைத்திருந்தனர். பின்னர் போரின் போது அவற்றை எடுத்து பகைவர் மீது பிரயோகித்து வெற்றி பெற்றனர். இதனாலேயே விஜயதசமியன்று கோயில்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பு வில் உற்சவம் நடைபெறுகின்றது. அக் கதையே விஜயதசமி அன்று செய்யப்படும் ஆயுத பூசைக்குக் காலாக இருக்க வேண்டும் என்பது நம்பிக்கை. விஜயதசமி வெற்றித் திருநாளாதலால் கல்வி, கலைகளில் சித்தி பெற வேண்டும் என்னும் வழிபாட்டுடன் பாடசாலைகளில் புதிய பிள்ளைகளுக்கு ஏடு தொடக்கும் வைபவம் நடத்தப்பெறுகின்றது.

கொலு

நவராத்திரி வழிபாட்டின் மற்றுமொரு சிறப்பு கொலு வைத்தலாகும் இதன் முக்கியத்துவத்தை உணர்த்தப் போலும் தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் நவராத்திரியைக் கொலு என்று அழைக்கின்றார்கள்.

இல்லங்களைச் சுத்தம் செய்து 5 அல்லது 7 அல்லது 9 என்று ஒற்றைத் தட்டுகளைக் கொண்ட மண்டபம் அமைத்து அவற்றில் பொம்மைகளை வைத்து வழிபடுதல் கொலு எனப்படும். பொம்மைகள் பொதுவாகத் தெய்வங்களையும் அவர்களின் ஆயுதங்கள், வாகனங்கள் முதலியவற்றையும் பிரதிபலிப்பனவாக இருக்கும். கொலுவின் முதல் தட்டின் நடுப் பகுதியில் நவதானியங்கள் கலந்த மணணின் மேல் நிறைகுடம் ஒன்று அமைக்கப்படும். நவதானியங்கள் சகல செல்வங்களையும், நிறைகுடம் அச் செல்வங்களை வழங்கும் பராசக்தியையும் குறிக்கும்.

மனித குல வளர்ச்சி

சிலபேர் நவராத்திரி வழிபாட்டில் கல்விக்கு ஏன் கடைசி இடம் தரப்பட்டிருக்கின்றது என்று கேட்கின்றார்கள். நவராத்திரி வழிபாடு சிவசக்தி வழிபாடு எனக் கண்டோம். சிவசக்தி சிவபெருமானின் வல்லமை. சிவபெருமானின் வல்லமையே மனித குல வல்லமைக்கும் வளர்ச்சிக்கும் ஆதாரம்.

நவராத்திரி வழிபாட்டு முறையைக் கூர்ந்து கவனிக்கின்ற போது அது மனித குல வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் ஒரு வழிபாடாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். மனித வளர்ச்சி வரலாறு மூன்று படிநிலைகளைக் கொண்டது. அவை பின்வருமாறு:

1. மனிதன் அம்போடும் வில்லோடும் ஆட்டுக்கும், மாட்டுக்கும் பின்னால் திரிந்த நிலை.
2. நாடோடி நிலையை விடுத்து ஆற்றோரங்களில் விவசாயம் செய்து குடியிருப்புக் கொண்ட நிலை.
3. சூழலை ஆராயத் தொடங்கி வளர்ச்சி பெற்ற நிலை.

இவற்றில் முதலாவது நிலை முற்றிலும் உடல் வல்லமையில் தங்கியிருந்தது. இரண்டாவது நிலையில் பொருட்செல்வம் செல்வாக்குப் பெறலாயிற்று. மூன்றாவது நிலை கல்வி விருத்தியையும் அதனாலாய முன்னேற்றங்களையும் குறிப்பது. மனிதனின் இவ் வளர்ச்சிப் படிநிலைகளின் அடிப்படையிலேயே வீரததுக்கும், உடல் உறுதிக்கும் உரிய துர்க்காதேவி வழிபாடு முதலிலும் பொருட் செல்வத்துக்குரிய இலக்குமி வழிபாடு அடுத்தும் கல்வி வளர்ச்சிக்குரிய கலைவாணி வழிபாடு மூன்றாவதாகவும் வைக்கப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனாய்வு

மனித குல வளர்ச்சி ஒரு புறம் இருக்க, நவராத்திரி ஒருவரின் தனிப்பட்ட திறன்களைப் பற்றிச் சிந்திக்கின்ற விழாவாகவும் அமைவதைக் காண முடிகின்றது. சக்தியை வழிபடுகின்ற பொழுது எமது சக்தி குறித்தும் நாம் ஒருவகையில் திறனாய்வு செய்கின்றோம். அதாவது நாம் எம்மைப் பற்றி எடை போடுகின்றோம். இதுவே 'மெய்யறிவு' எனப்படுகின்றது. உலக வாழ்க்கைச் சிறப்புக்கும் ஆன்ம ஈடேற்றத்துக்கும் இந்த மெய்யறிவு மிகவும் வேண்டப்படுவதொன்று. எவன் ஒருவர்குறை கண்டு குற்றம் கூறுவதை விடுத்து, தனது குறைகளை அறிந்து அவற்றை நிறைவு செய்ய முயல்கின்றாரோ அவரே தமது சக்தியை அறிந்தவர் ஆவார். இந்தச் சக்தியை அறியும் முயற்சியே சக்தி வழிபாடாகும். இக் கருத்தை உணர்த்தி சக்தியை வழிபடுகின்றார் அபிராமிப்பட்டர்:

வல்லபம் ஒன்றறி யேன்சிறி
  யேன்நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றொன்றி
  லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்
  பாய்வினை யேன்தொடுத்த
சொல்லவ மாயினும் நின்திரு
  நாமங்கள் தோத்திரமே.

என்குறை தீரநின்(று) ஏத்துகின்
  றேன்இனி யான்பிறக்கின்
நின்குறை யேயன்றி யார்குறை
  காண்கிரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற
  நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங் கோன்சடை
  மேல்வைத்த தாமரையே.

இவ்விதம்; எமது குறைகளைப் போக்கி நிறைவான வாழ்வு தருமாறு நவராத்திரியிலே சிவசக்தியை நாமம்வழிபட்டுச் சிறப்படைவோமாக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிலன் நினைவுப் பணிகள்

**அகிலன் நினைவு நூல்கள்**

அகிலன் நினைவுப் பணிகளை மேற்கொள்வதற்காக அவரது பெற்றோரால் உருவாக்கப்பெற்ற 'அகிலன் அசோஷியேற்ஸ்' நிறுவனம் வருடந்தோறும் நூல்களை வெளியிட்டு வருகின்றது. இந்த வரிசையில் அகிலனின் நினைவு நாட்களின்போது வெளியிடப்பட்ட நூல்களின் விபரம்:

1. நினைவுகளில் அகிலன் (அகிலன் பற்றிய தொகுப்பு நூல்)
2. அகிலன் (நித்திய பாராயண, உற்சவ. விரத கால தோத்திரங்களின் தொகுப்பு
3. பாரம்பரியமும் வழிபாடும் (கட்டுரைகளின் தொகுப்பு)
4. இயற்கைத் தமிழ் (கவிநாயகர் வி. கந்தவனம்)
5. ஈழமும் தமிழும் (கே. ஜவஹர்லால் நேரு)
6. ஓய்ந்தாய்ந்து பார்க்கையிலே (கலாநிதி கே. எஸ். நடராசா)
7. ஈழம் - குறுவரலாறு (கட்டுரைகளின் தொகுப்பு)
8. தமிழ் மொழியின் வளர்ச்சியும் செல்வாக்கும் (கட்டுரைத் தொகுப்பு)
9. எங்கள் மாணவரின் பிரச்சனைகள் (கனகேஸ்வரி நடராசா)
10. பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா பஜனைப் பாடல்கள்
11. நினைவுகளில் அகிலன் ((அகிலன் பற்றிய தொகுப்பு நூல்)
12. உலகளாவிய தமிழர் (கவிஞர் அம்பி)
13. சிவத்தமிழ்ச் செல்வியின் தீந்தமிழ் இன்பம் (துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது சொற்பொழிவுகளின் தொகுப்பு)

**'அகிலன் அசோஷியேற்ஸ்' வெளியிட்ட பிற நூல்கள்**

1. ஒரு அதிபரின் கூரிய பார்வையில் (1995)
   (அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு)
2. பெற்றோர், பிள்ளைகள், உளவியல் (1998)
   (அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு)
3. தமிழன் கனவு (1999)
   (வீணைமைந்தன் கவியரங்கக் கவிதைகளின் தொகுப்பு)

மறுபக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அகிலன் நினைவுப் பதக்கங்கள்

அகிலன் ஞாபகார்த்தமாக பல்துறைச் சேவையாளர்களுக்கு வருடா வருடம் தங்கப் பதக்கங்கள் சூட்டப்பெற்று கௌரவம் வழங்குதல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. கடந்த பன்னிரு ஆண்டுகளில் நாற்பதுக்கும் அதிகமான பிரமுகர்கள் தலா ஒரு பவுண் எடையுள்ள தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளனர். இவர்களுள் ஏழு பேர் கனடிய பெரும்பான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள்.

### அகிலன் நினைவுப் பரிசுகள்/விருதுகள்

அகிலன் கல்வி கற்ற சென். ஜோன்ஸ் கல்லூரியில் அகிலன் பெயரால் இரண்டு 'நினைவுப் பரிசுகள்' வருடாந்தம் வழங்கப் பெறுகின்றன.

1. சிறந்த பந்து வீச்சாளருக்கான (கிரிக்கெட்) விருது
2. தமிழ்மொழித் திறன் அதிசிறந்த மாணவன் விருது

கனடாவில் வருடந்தோறும் நடைபெறும் சென். ஜோன்ஸ் - மத்திய கல்லூரி கிரிக்கெட் போட்டியில், 'ஆல் ரவுண்ட்' வீரருக்கான சுற்றுக் கேடயமும், வெற்றிக் கிண்ணமும் அகிலன் நினைவாக வழங்கப்பெறுகின்றன.

## திருநெல்வேலி
## தலங்காவற் பிள்ளையார்
## தலப்பாடல்

நலம்விளங்க அடியார்கள் நன்மை யெய்த
நாடோறும் அருளளிக்கும் நாதனாகி
இலங்குசைவ மரபோங்கி எமைக் காக்க
இனிதுதிரு நெல்வேலி எனுமூர்வைகி
வலங்கிளரும் வரங்களெலாம் மல்குமாறு
வணங்குமவர்க் களித்தருள வல்லானாகி
தலங்காவற் பிள்ளையார் எனும்பேர்பூண்ட
தற்பரனின் தாளிணையெம் தலைமேற்கொள்வாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுப் பூ

அகிலன்.
படிப்பு, விளையாட்டு, எழுத்து, சமூகப்பணி என்று எல்லாவற்றிலும் முதன்மையான-வனாகத் துள்ளி வளர்ந்த இளசு இவன்.
உயர் இலட்சியங்களுடன் உருவான உன்னத மாணவன்.
பெற்றோருக்கு ஒரே பிள்ளை.
ஆஸ்திக்கும் ஆசைக்கும் இவனே சொந்தக்காரன்.
அப்பா இனப்பற்று மிகுந்த நாடறிந்த மூத்த பத்திரிகையாளர்.
அம்மா சமூகப் பற்று மிக்க நல்லதொரு பாடசாலை ஆசிரியை.

கொழும்பு றோயல் கல்லூரியில் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கையில், 1983 இனக் கலவரம் வந்தது. பெற்றோருடன் அகிலனும் யாழ்ப்பாணத்து வாரிசானான். யாழ் - சென். ஜோன்ஸ் கல்லூரி அகிலன் திறமைகளைக் கண்டறிந்து தனது மாணவனாக்கிக் கொண்டது.

இந்த மாதம் ஐந்தாம் திகதி அவனின் முப்பத்தியொராவது பிறந்த நாள்.
இந்த மாதம் பத்தாம் திகதி அவனின் பன்னிரண்டாவது நினைவு தினம்.
உலகப் பிரவேசமும் பிரியாவிடையும் அகிலனுக்கு ஒரே மாதம்.

இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயருடன் தமிழீழத்துக்குள் காலடி வைத்த வேளையில், அதன் முகமூடியைக் கிழித்து சுயரூபத்தைத் தமிழ் மக்களுக்குக் காட்டியவர் அகிலனின் அப்பா. இதனால் அவர் ஆசிரியராகவிருந்து நடத்திய 'முரசொலி' பத்திரிகை நிறுவனத்தின் கட்டிடம் அவர்களது குண்டுத் தாக்குதலால் செயலிழந்தது. இது 1987 அக்டோபர் 10 அதிகாலையில் இடம்பெற்றது.

அடுத்த கட்டம், அகிலனின் அப்பாவின் சிறைவாசம். யாழ். கோட்டை மறியற்சாலையில் இந்திய இராணுவத்தின் விருந்தாளியாக 82 நாட்களைக் கழித்தார்.

இவை எதிலும் நிம்மதி பெறாத இந்திய இராணுவமும், அவர்களின் அடிவருடிகளாகச் செயற்பட்ட துரோகக் குழுவினரும் சேர்ந்து 1989 மே 10ஆம் நாள் அகிலனின் அப்பாவைக் கொலை செய்யத் திட்டம் தீட்டினர். தந்திரமாக அவர் அதிலிருந்து தப்பிவிட, அந்த மனிதவிரோதக் கும்பல்காரர், தந்தைக்காக அகிலனைப் பலியெடுத்தனர்.

எதுவுமறியாத, அப்பாவியான இந்தக் குழந்தையை, அற்புதமான மாணவக் கொழுந்தை, அனைவராலும் பாசமுடன் நேசிக்கப்பட்ட அகிலன் என்ற குழந்தையை மிருகவெறியர்கள் ஏன் கொலை செய்தனர்? அவன் செய்த குற்றமென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழத்தில் ஒரு பத்திரிகையாளனின் மகனாகப் பிறந்ததுதான் அவன் இழைத்திட்ட ஒரே குற்றம்.

இன்று அவன் இருந்திருந்தால், போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவை செய்யும் ஒரு டாக்டராக இருந்திருப்பான். சிலவேளை, திருமணம் புரிந்து இல்லறத்தில் நல்லறம் காண்பவனாக வாழ்ந்து கொண்டிருப்பான்; ஒரு இளம் அப்பாவாகவும் இருக்கலாம்.

நாம் நினைப்பது எதுதான் சரியாக நடக்கிறது? தந்தைக்கு விரித்த வலையின் விதி சுழிமாறி, அருமை மைந்தனைக் காவு கொண்டது. அகிலனின் இறுதிச் சடங்கு ஒரு வீரனுக்கு உரிய மரியாதையுடன், ஒரு அரச வைபவத்துக்கு இணையானதாக நடந்து முடிந்தது.

அந்த நாளிலிருந்து இன்று வரை அகிலன் பெயரை அகிலமெங்கும் துலங்க வைக்கும் வகையில் அந்தப் பெற்றோர் தங்களாலான பணிகளைச் செய்து வருகின்றனர். வருடந்தோறும் நினைவு மலராக நல்ல கட்டுரைகளைத் தாங்கிய நூல்களை வெளியிடுதல், அகிலன் நினைவாக விருதுகளுடன் தங்கப் பதக்கங்கள் வழங்குதல், பல போட்டிகளில் அகிலன் நினைவுப் பரிசுகளையும், சின்னங்களையும் வழங்குதல் என்பன பணிகளுள் சில.

**ஈ. கே. ராஜகோபால்**
இங்கிலாந்து

*(திரு. ராஜகோபால் எங்கள் குடும்பத்தின் நீண்ட கால நண்பர். மூத்த பத்திரிகையாளர். அகிலனைப் பிறந்த நாளிலிருந்து தெரிந்தவர். தனது பிள்ளை போன்று அவன் மீது பாசம் பொழிந்தவர். கடந்த ஆண்டு நினைவு மலருக்கு அவர் எழுதியதன் ஒரு பகுதியை இங்கு நன்றியுடன் மீள்பிரசுரம் செய்துள்ளோம்)*

தி. ச. வரதராசன் (வரதர்)
ஞாபகார்த்த அன்பளிப்பு
இல. 64/3, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழ மண்ணில் 1989ம் ஆண்டு மே மாதம் பத்தாம் திகதி பத்திரிகைச் சுதந்திரத்துக்காக முதன் முதலாக உயிர் பறிக்கப்பட்ட இளவல் எஸ். தி. அகிலன். அப்போது இவனுக்கு வயது பத்தொன்பது. தந்தைக்காக உயிர் கொடுத்த தனயன் இவன்.

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியின் பல்கலைப் புகுமுக வகுப்பில் கல்வி கற்று வந்த அகிலன், கல்லூரியின் மாணவர் தலைவன். சிறந்த விளையாட்டு வீரன். இளம் எழுத்தாளன், கவிஞன், பேச்சாளன். விடுதலைப் பற்றாளன்.

பாலஅபிமன்யு ஆனவனின் பன்னிரண்டாவது ஆண்டு நினைவாக இந்நூல் வெளியிடப்பெறுகின்றது. இது விற்பனைக்குரியதன்று.

அகிலன் நினைவுப் பணிகளை நிறைவு செய்யவென அவனது பெற்றோரால் உருவாக்கப்பெற்ற 'அகிலன் அசோஷியேற்ஸ்' நிறுவனம் வழமை போன்று இதனையும் வெளிக்கொணர்ந்துள்ளது.



Thamil Creators @ 416.896.8042

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org